*இஸ்லாமியக் கொள்கைகள் பகுதி 1 ன் தொடர்ச்சி;...*

# இஸ்லாமியக் கொள்கைகள் பகுதி 2

**இறுதிநாள் (மறுமை)**

இதுபற்றி நபிமொழிகளில் அதிகமாகக் காணப்படுகிறது. ஆனால் இந்த நம்பிக்கைக்கு மாற்றமாக இந்திய நாட்டில் பஞ்சாப் என்னும் மாநிலத்தில் 'காதியானி' என்றொரு அமைப்பு தோன்றிற்று. அந்த அமைப்பை சார்ந்தோர் ஈஸா நபியவர்கள் மீண்டும் இப்பூமிக்கு வரமாட்டார்கள் என்றும், அவர்கள் இறந்து விட்டார்கள் என்றும், அவர்களுக்குப் பதிலாகத்தான் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (இவர்தான் இந்த அமைப்பின் தலைவர்) இறைதூதராக வருகை தந்துள்ளார் என்றும் வாதிக்கின்றனர். பல்வேறு அறிஞர்கள் இவர்களின் இப்பொய்யான வாதத்தை மறுத்து எண்ணற்ற நூல்களை இயற்றியுள்ளனர்.

ஆனால் இப்போது அவர் இறந்துபோய் விட்டார். அவரது இறப்பு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருள்வாக்குப்படி ஈஸா நபியவர்கள் மீண்டும் பூமிக்கு வருவார்கள் என்பதையும், அப்போது மனித இனம் முழுவதும் இமாம் மஹ்தி என்பாருக்குப் பின்னால் அணிவகுக்கும் என்பதையும் நமக்கு உறுதிப்படுத்துகிறதல்லவா! அதன்பின் சூர் என்னும் எக்காளம் ஊதப்படும். இதன்றி சுவர்க்கத்தில் மனிதர்கள் நுழைவதுவரை எத்தனை விசயங்களை முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவித்துத் தந்துள்ளார்களோ அவையனைத்தும் எதார்த்தமான உண்மைகளாகும். பின்னும் நாம் இதைப் பற்றி மிகவும் சுருக்கமாகத்தான் பேசியுள்ளோம். ஆனால் நபிமொழிகளில் இதைப் பற்றிய விபரங்கள் விரிவாக காணப்படுகின்றன.

**உள்ளத்தால் விசுவாசித்தல்**

இறைவனின் ஏகத்துவத்தையும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தூதுத்துவத்தையும் உள்ளத்தால் நம்பிக்கை கொள்வதற்குப் பெயர்தான் விசுவாசமாகும். இதுபோன்றே இவ்விரண்டையும் நாவைக் கொண்டு உறுதிப்படுத்தவும் வேண்டும். இனி உள்ளத்தால் நம்புதல் விசுவாசத்திற்குரிய எதார்த்தமாகும். நாவைக் கொண்டு உண்மைபடுத்துதல் விசுவாசத்திற்குரிய அடையாளமாகும். ஏனெனில் நாவு உள்ளத்தை திறந்து காட்டும் கண்ணாடியாகும். மேலும் நாவு பேசாதவரை உள்ளத்தின் நிலை என்னவென்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியாது. வெளிரங்கமான கட்டளைகளை நாவுதான் நடைமுறைப்படுத்த வேண்டும். இந்நிலையில் ஒருவன் ஊமையாகவோ அல்லது நிர்பந்தமாகவோ இறை நிராகரிப்புக்குரிய வார்த்தைகளை சொல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டாலோ, அல்லது நாவைக் கொண்டு பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்காமல் மரணம் வந்து விட்டாலோ அந்நிலையில் அவன் நாவைக் கொண்டு பேச வேண்டுமென்ற அவசியமில்லை.

இனி 'அஹ்லெ ஹதீஸ்' என்னும் பிரிவினைவாதிகளிடம், விசுவாசம் என்பது உள்ளத்தாலும் நாவாலும் உண்மைபடுத்தப்படாத வரை ஏற்கப்படமாட்டாது. அத்துடன் விசுவாசம் என்பது உள்ளத்தை கொண்டும் நாவை கொண்டும் உண்மைப்படுத்துவதோடு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மீது முழுமையான நம்பிக்கையும் கொள்ளப்பட வேண்டும். அதன்பின் அவர்களது கட்டளைகளை முறையாக செயல்படுத்த வேண்டும். அதன்பின் நாவை கொண்டு மொழியப்பட வேண்டும். இம்மூன்று நிலைகளுமின்றி விசுவாசம் என்பது முழுமை பெறாது.

இதேவிதமாக நிறைவான விசுவாசம் என்பது நாம் மேலே குறிப்பிட்டவாறு அமைவதாகும். ஏனெனில் விசுவாசம் என்பது அதை வெளிப்படுத்தும் செயல் இல்லாமல் போனால், குறைவுடையதாகிப் போய்விடும். இருப்பினும் அசல் விசுவாசம் என்பது உள்ளத்தால் மெய்ப்பித்தல் மட்டுமே. மேலும் விசுவாசம் என்பது ஒரு விருட்சத்தை போல என்று சொல்லலாம். இனி அம்மரத்துடைய வேர்கள் என்பது உண்மையாக்கி வைப்பதும், வழிப்படுவதும் செயல்படுவதும் அதனுடைய பலன்களாகும். இந்நிலையில் அந்த விருட்சத்திற்கு வேர், பனர், இலை, பூ, காய், கனி போன்றவை இல்லையெனில் அதை விருட்சமென்று சொல்ல முடியாது. இவ்வாறே நிறைவான விசுவாசம் என்பது நற்காரியங்களை கொண்டு அழகுப்படுத்தப்படுவதாகும். ஆதலால் நற்காரியங்களற்ற விசுவாசம் என்பது எல்லா நிலையிலும் குறைவானதுதான். அதேநேரம் நற்காரியங்களற்ற விசுவாசத்தையும் விசுவாசமென்று தான் சொல்லப்படும். அருள்மறையில் விசுவாசத்தோடு நற்காரியங்களும் இணைத்தே பேசப்படுவதை நாம் பெரும்பான்மையான இடங்களில் பார்க்கலாம். உதாரணமாக...

ان الذين آمنوا وعملوا الصالحات

'திடனாக யார் விசுவாசம் கொண்டு இணக்கமான நற்காரியங்களை செய்தார்களோ' என்னும் இவ்வசனத்தைக்கொண்டு நமக்கு தெரியவருவது யாதெனில், அசல் விசுவாசம் என்பது உண்மையாக்குதல்தான் என்பதோடு நற்காரியம் என்பது ஒரு தனி பொருளாகவே பேசப்பட்டுள்ளது. அதேநேரம் அந்த விசுவாசம் நிறைவான ஒன்றாக வேண்டுமாயின், அதற்கு இணக்கமான நற்காரியங்களும் தேவை என்பதையும் இவ்வசனம் நமக்கு உணர்த்திக் காட்டுகிறது. இதை இப்படி புரிந்து கொள்ளுங்கள். ஒருவரிடம் அதுவுமிருக்கிறது. இதுவுமிருக்கிறது என்று சொன்னால் அவரிடம் இரு பொருட்கள் இருக்கிறதென்று அர்த்தம். அதுவும் வௌ;வேறாக இருக்கிறது. இந்நிலையில் இரண்டுமே ஒன்றுதான் என்பது சரியல்ல. இனி யார் விசுவாசமும் நற்காரியமும் ஒன்றுதான் எனக் கூறுகின்றாரோ அவர் தவறான பாதையில் இருக்கிறார்.

அடுத்து இன்னொன்றையும் நாம் இங்கே தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறைவனின் உண்மையான திருத்தூதர்தானென புரிந்து கொள்வதற்குப் பெயர் விசுவாசமாகாது. மாறாக அன்னவர்களை

தனது உள்ளத்தால் மெய்ப்பிப்பதுதான் விசுவாசமாகும். காரணம், தெரிந்து கொள்ளுதல் என்பது வேறு. விசுவாசித்தல் என்பது வேறு. இதில் விசுவாசித்தல் என்பதன் கருத்து முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை உள்ளத்தால் முழுமையாக அங்கீகரித்தல், ஏற்றுக் கொள்ளல், நம்புதல் என்பதாகும். இதில் உள்ளம் ஒரு நிறத்தை ஏற்றுக் கொள்ளும்போது அந்த நிறமாகவே மாறிப் போய்விடும். இவ்வாறே உள்ளம் நம்பிக்கையெனும் பிரகாசத்தை கொண்டு ஒளிமயமாக மாறிப் போய்விடுகிறது. ஆனால் அறிவைக் கொண்டு பார்த்தலில் வெறுமனே புரிந்து கொள்ளும் நிலை மட்டும்தான் வாய்க்கின்றது. இந்நிலையில் அரபு தேசத்திலிருந்த அனைத்து இறைமறுப்பாளர்களும், யூதர்களும், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை இறைவனுடைய உண்மையான திருத்தூதரே என்பதை புரிந்துதான் வைத்திருந்தனர். இதில் அவர்களின் புரிந்து கொள்ளல் என்பது எந்த அளவுக்கு உறுதி வாய்ந்ததாக இருந்ததெனில், அவர்கள் தமது புதல்வர்களை புரிந்து கொண்டிருந்ததைப் போன்று முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை புரிந்திருந்தனர். இதைப்பற்றி அருள்மறையில்...

يعرفونه كما يعرفون ابناءهم

'அவர்கள் தமது புதல்வர்களை புரிந்திருப்பதை போன்று அவரை (நபியை) புரிந்திருந்தனர்.'

என்பதாக கூறப்பட்டுள்ளது. மேலும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இப்பூமியில் அவதரிக்கப்பபோகும் செய்திகள், அவர்களின் தோற்றம், குணாதிசியங்கள், பழக்க வழக்கங்கள், பெயர், அடையாளம், பிறக்கப்போகும் இடம் போன்றவை அனைத்தும் யூதர்களுடைய வேதங்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. அவர்களும் அதை குறித்து பிரஸ்தாபித்துக் கொண்டிருந்தனர். அத்துடன் பெரும்பான்மையான யூதர்கள் அதை எதிர்பார்த்து தாங்கள் வாழ்ந்து வந்த இடங்களை விட்டும் இடம்பெயர்ந்து மதீனாவுக்கு வந்து குடியேறினர். அந்த எதிர்பார்ப்பிலேயே தங்களின் வாழ்நாளையும் கழித்தனர். அவர்களில் ஒவ்வொருவரும் இறக்கும்போது தமது பிள்ளைகளிடம், இறுதித்தூதர் வருகை தரும்போது அவர்களுக்கு எங்களின் ஸலாமை கூறுவதுடன், நாங்கள் அவர்களின் மார்க்கமாகிய இஸ்லாத்தை ஏற்க விருப்பம் கொண்டவர்களாக இருந்தோம் என்பதையும் அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள் என்றும் கூறிச் சென்றனர். சுருங்கக் கூறின் யூதர்களை தவிர முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வேறுயாரும் அந்த அளவுக்கு அறிந்திருக்கவில்லை. இருப்பினும் எப்போதெல்லாம் உலகில் இறைவனது தூதுத்துவம் வெளிப்பட்டதோ அப்போதெல்லாம் அவர்களின் உள்ளத்தில் மறைந்திருந்த ஆதியான வெறுப்புணர்வு அவர்களுடைய அறிவுக்கு திரை போட்டுவிட்டது. மேலும் அவர்களுக்குள் புகைந்து கொண்டிருந்த பொறாமையும் பகைமையும் உண்மை நிலையை அவர்களுக்கு விளங்கிக் கொள்ள முடியாமல் செய்து விட்டன. நிராகரிப்பு மற்றும் இறைமறுப்பு என்னும் அதளபாதாளத்தில் அவர்கள் வீழ்ந்து விட்டதால் அவர்களுக்கிருந்த ஈடேற்றத்திற்குரிய அனைத்து வழிகளையும் அவைகள் மூடிக் கொண்டன.

இதன்மூலம் இன்னோர் உண்மையும் நமக்கு தெளிவாக்கப்படுகிறது. அதாவது, கல்வியோ அல்லது தீர்க்கமான அறிவோ ஒருவனுக்கு நேர்வழியை பெற்றுத் தருவதில்லை என்பதே. இதைகுறித்து அருள்மறை....

وجحدوا بها واستيقنتها انفسهم ظلما وعلوا

'மேலும் அவர்கள் தமது அழிச்சாட்டியத்தின் காரணமாக நிராகரித்துவிட்டனர். இன்னும் கர்வம் மற்றும் பொறாமையின் காரணமாகவும் வழிகெட்டுப் போயினர். அதனால் அவர்களின் உள்ளம் இறுகிப் போய்விட்டது'

فنعوذ بالله من علم لا ينفع وقلب لا يخشع

'நாம் பிரயோஜனமற்ற கல்வியைக் கொண்டும், இறைவன் மீது அச்சமடையாத உள்ளத்தை கொண்டும் இறைவனிடமே பாதுகாவல் தேடுகிறோம்'

وهو لا يزيد ولا ينقص

'மேலும் அதி(விசுவாகத்தி)ல் கூடுதலோ குறைவோ இல்லை' எனக் கூறுகிறது.

அடுத்து விசுவாசத்தின் ஏதார்த்தமானது உள்ளத்தை கொண்டு உண்மையாக்கி வைத்தல் என முன்பே நாம் கூறியிருக்கிறோம். இதற்குரிய இன்னொரு விளக்கம் யாதெனில், உண்மையாக்கி வைத்தல் என்பது ஒரு பொருளாக இருந்தால்தான் சாத்தியமாகும். ஆனால் விசுவாசத்தில் கூடுதல் என்பதோ அல்லது குறைவென்பதோ அறவே இல்லையாதலால் விசுவாசத்தைப் பொறுத்தவரை அதை விசுவாசம் என்றுதான் கொள்ள வேண்டும். இனி அவ்விசுவாசத்தோடு நற்காரியங்களும் இணைந்து விடுமாயின், அந்நிலையில் நற்காரியங்களில் ஏற்படும் கூடுதலையும், குறைவையும் விசுவாசத்துடன் இணைக்க வேண்டிவரும். இது சரியல்ல. காரணம் இஸ்லாமிய சட்டக்கலை மேதையான இமாம் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் என்பார்...

وهو لا يزيد ولا ينقص

'இன்னும் அதி(விசுவாசத்தி)ல் அதிகமுமில்லை குறைவுமில்லை' என்று கூறுவதால் சந்தேகத்திற்கிடமின்றி இதுதான் சரியான சொல்லாகும். பின்னும் எதார்த்தத்தில் நற்காரியங்கள் என்பவை விசுவாசத்தின் ஒரு பகுதியே அல்ல. இதுதான் சரியான நம்பிக்கையாகும்.

**விசுவாசமும் இஸ்லாமும்**

விசுவாசம் என்பதும் இஸ்லாம் என்பதும் ஒரேபொருள்தான். அதேநேரம் விசுவாசம் என்பது உள்ளத்தை கொண்டு உண்மைப்படுத்துவதாகும். அதாவது இது உள்ளத்தின் அந்தரங்கத்தை சார்ந்துள்ளதென்று சொல்லலாம். இனி இஸ்லாம் என்பது வெளிப்படையான கட்டளைகளுக்கும் அவற்றை ஏற்று பின்பற்றி நடப்பதற்கும் கொள்கைக்குமுரிய மறுபெயராகும். இதுபற்றி திருமறையில்...

قالت الاعراب آمنا قل لم تؤمنوا ولكن قولوا أسلمنا

'(அக்) காட்டரபிகள் நாங்கள் விசுவாசம் கொண்டோம் என்று சொன்னார்கள். (நபியே!) நீர் அவர்களிடம், நீங்கள் விசுவாசம் கொள்ளவில்லை. எனினும் நாங்கள் முஸ்லிம்களென்று சொல்லுங்கள் என்பதாகக் கூறுங்கள்' என்று இறைவன் கூறுகிறான்.

அதாவது அவர்கள் தம்மை வெளிப்படையான கட்டளைகளுக்கு வழிப்படுத்திக் கொண்டிருந்தனர் என்பதாம். ஆதலால் இவ்வசனத்தை கொண்டு ஒவ்வொரு விசுவாசியும் முஸ்லிம்தான். இதுபோன்றே ஒவ்வொரு முஸ்லிமும் விசுவாசிதானாகையால் இதில் எந்த வேறுபாடும் இல்லை.

**நிர்பந்தமான விசுவாசம்**

ايمان البأس غير مقبول

'நிர்பந்தமான(வேதனைக்குரிய) விசுவாசம் அங்கீகாரமற்றதாகும்'

'பாஸ்' என்னும் பதம் கடுமை, வேதனை என்பதற்கு சொல்லப்படுகிறது. இங்கே கடுமை வேதனை என்பதன் கருத்து இறப்புத் தருவாயின்போது வெளிப்படும் மறுமைக்குரிய நிலைகள் என்பதாம். நபிமொழிகளில் மிக அழுத்தமான ஆதாரங்களோடு இச்சொல் பேசப்பட்டுள்ளது. அதாவது இறப்புத் தருவாயின் போது ஒவ்வொரு மனிதர் முன்பும் அவருடைய நிலைமைகள் வெளிப்படுகின்றன. இந்நிலையில் விசுவாசி தனது கண்களால் சுவர்க்கத்தையும் இறை மறுப்பாளன் நரகத்தையும் பார்க்கிறான். இதில் இறைமறுப்பாளன் இப்படிப்பட்ட வேளையில் விசுவாசம் கொள்வானாயின் அவனது விசுவாசம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஏனெனில் விசுவாசம் என்பது மனிதனை விட்டு மறைந்துள்ள நிலையில் விருப்பத்தோடு ஏற்கப்படுகின்ற ஒன்றாகும். மேலும் இதில் மனித முயற்சி, இறைகட்டளைகளை உதாரணப்படுத்துதல், இறைவனுக்கு முற்றிலும் வழிப்படுதல் போன்றவை அனைத்தும் விசுவாசத்தில் இணைந்துள்ளது. ஆனால் இவை எதுவுமே இன்றி இறப்பின்போது தனது நிலைகளை கண்ணால் கண்டுவிட்டு அதன்பின் விசுவாசம் கொண்டால் அந்த விசுவாசத்தை மறைவானவற்றை கொண்டு விசுவாசித்தல் எனக் கூறப்படமாட்டாது. அதற்கு மாறாக நிர்பந்தமான நிலையில் விசுவாசம் கொள்ளப்பட்டதாகத்தான் சொல்லப்படுமாதலால்

அப்படிப்பட்ட விசுவாசத்தை விசுவாசம் என ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பின்னும் மறுமைநாளில் இறைமறுப்பாளர்கள் அனைவரும்....

ربنا ابصرنا وسمعنا فارجعنا نعمل صالحا انا موقنون

'இறைவா! எங்களின் கண்கள் திறந்து கொண்டன. செவிகள் கேட்கும் தன்மையை பெற்றுவிட்டன. மேலும் உலகில் உனது தூதர்கள் அறிவித்ததை, உனது வேதங்களில் எழுதப்பட்டிருந்ததை, அவையனைத்தும் உண்மைதானென உறுதி கொள்கிறோம். நாங்கள் விசுவாசம் கொள்வதற்காக எங்களை மீண்டுமொரு முறை உலகுக்கு அனுப்பிவை. நாங்கள் நற்செயல்கள் புரிந்து நன்மையை பெறுவதற்காக.'

என்று முறையிடுவார்கள் என்பதாக திருமறை கூறுகிறது. இதில் உண்மையின் தரப்பை சார்ந்துள்ள அனைவரும் ஒருமித்த கருத்துடையோராக, நிர்பந்த நிலையில் விசுவாசிக்கப்படும் விசுவாசம் அங்கீகாரம் பெறாதென்றே கூறுகின்றனர். மேலும் ஒரு நபிமொழியில்...

ان الله يقبل توبة العبد مالم يغرغر

'நிச்சயமாக இறைவன் அடியானின் பாவமன்னிப்பை (அவனது மரணத்தருவாயில் உயிர் தொண்டைக்கும் நெஞ்சுக்கும் மத்தியில் நிகழும்) கர்கராவுக்கு முன்புவரை அங்கீகரிக்கிறான்' எனக் கூறப்படுகிறது. இதில் கர்கரா என்பது இறப்பு தருவாயின் போது உயிர் தொண்டைக்குழிக்குள் நெருக்கடியை ஏற்படுத்துவதற்கு சொல்லப்படுகிறது. இதை பற்றி திருமறையில் இவ்வாறு பேசப்படுகிறது...

فلم يك ينفعهم ايمانهم لما رأوبأسنا

'(இறப்புக்குரிய) நெருக்கடியின் வேதனையை கண்டபின் கொள்ளப்படும் விசுவாசம் பிரயோஜனம் அளிக்காது' என்றும்,...

ليست التوبة للذين يعملون السيأت حتي اذاحضر احدهم الموت قال اني تبت الآن

'மரணம் அவர்களுடைய தலைக்குமேல் வரும்வரை பாவம் செய்து கொண்டிருந்து விட்டு அதன்பின் பாவமன்னிப்புத் தேடுகிறேன் என்னும் அவர்களின் பாவமன்னிப்பு அங்கீகாரத்தைப் பெறாது'

என்றும் கூறப்படுவதால் மேற்கண்ட இரு வசனங்களை கொண்டும் நமக்கு தெளிவாக்கப்படும் விஷயம்யாதெனில், 'பாஸ்' உடைய தோற்றத்தின் வெளிப்பாடு என்பதைக் கொண்டு மறுமைநாளுக்குரிய அடையாளங்கள் என்பது கருத்தாகும். அதாவது மேற்குத் திசையிலிருந்து சூரியன் உதித்துக் கிளம்புவரை போல் என்று சொல்லலாம்.

இன்னும் இதற்கு வேறு சில வேத வியாக்கியானிகள் கீழ்காணும் வண்ணமாகவும் விளக்கமளிக்கின்றனர். அதாவது மரணத்தின் மீது ஏற்பட்ட அச்சத்தின் காரணமாக கேட்கப்படும் பாவமன்னிப்பும், கொள்ளப்படும் விசுவாசமும் ஏற்கப்படமாட்டாதென்று கூறுகின்றனர். இது இஸ்லாமியக் கொள்கைவாதிகளில் அஷ்அரி ரஹிமஹுல்லாஹ், மாத்திரூதி ரஹிமஹுல்லாஹ் மற்றும் சட்டமேதைகள் போன்றோரின் நம்பிக்கையாகும். இருப்பினும் பெரும்பான்மையான அறிஞர்பெருமக்கள் மரணத் தருவாயிலோ அல்லது மரணத்தின் மீதுள்ள அச்சத்தாலோ கேட்கப்படும் பாவமன்னிப்பு ஏற்றுக் கொள்ளப்படுமென்றே கூறுகின்றனர். அதேநேரம் நிர்பந்தமான சூழ்நிலையில் விசுவாசிக்கப்படும் விசுவாசம் ஒருபோதும் ஏற்கப்படாதென்றே எல்லோரும் ஒருமித்துக் கூறுகின்றனர்.

**நிர்பந்த நிலை விசுவாசமும், பாவமன்னிப்பும்**

இதுவரை மேலே நாம் சொல்லி வந்ததை கொண்டு எந்தவொரு முடிவுக்கு நாம் வந்துள்ளோமோ அதுதான் ஒட்டுமொத்தமான அறிஞர்களுடைய தீர்ப்புமாகும். இதன்மூலம் இறப்புத் தருவாயின் போது இறைத்தூதரான மூஸா நபியவர்கள் வாழ்ந்த காலத்தை சேர்ந்த 'பிர்ஔன்' என்னும் அரசனுடைய விசுவாசமும் அங்கீகாரத்தை பெறாது என்பதை நாம் தெரிந்து கொள்கிறோம். அத்துடன் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்வியலுக்குரிய நடைமுறை சட்டங்களிலும் இத்தகைய விசுவாசம் தள்ளப்பட்டதாகவும் நிராகரிக்கப்பட்டதாகவுமே பேசப்படுகிறது. பின்னும் திருமறையின் வாக்கியங்களும் பிர்அவ்ன் இறை நிராகரிப்பாளனாகவும், கீழ்த்தரமானவனாகவும், நரகவாதியாகவும்தான் இருந்தான் என்னும் கருத்தை மிகத் தெளிவாகவே நமக்கு சொல்லிக் காட்டுகின்றன. அதுகுறித்த வசனத்தைப் பாருங்கள்....

فاخذه الله نكال الآخرة والاولى

'அவனை நாம் அவனுக்கு முன்னுள்ளோருக்கும் பின்னுள்ளோருக்கும் ஒரு பாடமாக ஆக்கி வைத்திருக்கிறோம்' என்றும், பிரிதோரிடத்தில்...

يقدم قومه يوم القيامة فاوردهم النار

'(அவன்) மறுமைநாளில் தனது கூட்டத்தாருக்கு முன் இருப்பான். அப்போது அவர்களை நரகத்தில் இறக்கப்படும்' எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் அரபி மொழி இலக்கணம் தெரிந்த எவராயினும் 'யக்துமு கௌமஹு' என்னும் வாக்கியத்திற்கு 'அவன் தனது கூட்டத்தாருடன் நரகிற்கு செல்வான்' என்றோ அல்லது 'அவன் தனது கூட்டத்தாரின் வழிகாட்டியாகவும் தலைவனாகவும் இருப்பான்' என்றோதான் அர்த்தம் கூறுவர். இன்னும் அரபுப் பிரதேசத்தில் அறியாமை காலத்திலிருந்தே அங்கே வாழ்ந்து வந்த கவிஞர்கள் தமது தலைவர்களை இழிவுபடுத்த வேண்டுமென எண்ணும்போது...

يقدم الشعراء الى النار

'அவன் நரகுக்குச் செல்லும் கவிஞர்களை வழி நடத்துவான்' என்றுதான் கூறும் வழக்கமுடையவர்களாக இருந்து வந்துள்ளனர். மேலும் திருமறையின் இன்னோரிடத்தில்...

واستكبرهو وجنوده في الارض بغير الحق وظنوا انهم الينا لا يرجعون

'பிர்அவ்ன் தனது படைவீரர்களை கொண்டு பெருமை பேசினான். பூமியில் அவனது படைதான் பலம் வாய்ந்ததென்றும் எண்ணிக் கொண்டிருந்தான். ஆயினும் அவர்களது பொருட்களும் படைகளும் வேதனை செய்பவனுக்கு அருகாமையில் இருந்ததை அவர்கள் தெரிந்து கொள்ளவில்லை' என்று கூறப்படுகிறது. இந்நிலையில் இறை மறுப்பாளர்களும் இப்படிப்பட்ட சந்தேகத்தில் தான் மூழ்கியுள்ளனர். இதுபற்றி திருமறை கூறுவதைப் பாருங்கள்...

فاخذناه وجنوده فنبذناهم في اليم. فانظر كيف كان عاقبة الظالمين. وجعلناهم ائمة يدعون الى النار. ويوم القيامة لا ينصرون

'நாம் அவனையும் அவனது படைகளையும் மிகக் கடுமையான வேதனைக்கு உட்படுத்தி அவர்களை நைல்நதியின் வசம் ஒப்படைத்துவிட்டோம். அநியாயக்காரர்களின் நிலை என்னவாயிற்று என்பதை நீங்கள் பாருங்கள். நாம் பிர்அவ்னையும் அவனது படைகளையும் நரகவாதிகளுக்கு தலைவர்களாகவும் முன்னோடியாகவும் ஆக்கிவிட்டோம்' இந்நிலையில் அவர்கள் அவனை அழைத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால், 'அந்நாளில் அவர்கள் எடுத்தெறியப்பட்டவர்களாகவும் ஒதுக்கப்பட்டவர்களாகவும் ஆகிவிடுவர். (அத்துடன்) நாம் இவ்வுலகில் அவர்களுக்கு சாபக்கேட்டை ஏற்படுத்தியுள்ளோம். மேலும் அவனது படைகள் இழிவடையும்' என்றும் கூறுகிறது.

ஆக மேற்கண்ட திருமறை வசனங்களை கொண்டு பர்ஔனுடைய நிலைமைகள் அனைத்தும் நமக்கு மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்படுவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அவ்வாறின்றி இறப்புத்தருவாயின்போது அவன் விசுவாவம் கொண்டதால் அவன் தூய்மையானவனாகவோ அல்லது ஒரு விசுவாசியாகவோ இருந்திருந்தால் திருமறை அவனை மேற்கண்ட வாக்கியங்களைக் கொண்டு பேசியிருக்காது. இந்நிலையில் அவன் பெருமை கொண்டவனாக, அநியாயக்காரனாக, தலைக்கனம் பிடித்தவனாகத்தான் இருந்தானேயன்றி அவனை இறை மறுப்பாளனென்று எப்படிச் சொல்ல முடியும் எனக் கேட்கப்படுமாயின், திருமறையில் அடுத்து அவனைக் குறித்து பேசப்படும் வசனத்தை நாம் அத்தனை இலேசாக ஒதுக்கிவிட முடியாது. அந்த வசனத்தையும் பாருங்கள்....

ويوم القيامة هم من المقبوحين

'இன்னும் அவனு(பிர்ஔனு)ம் அவனது பரிவாரங்களும் மறுமைநாளில் இழிவடைவார்கள்' எனக் கூறப்படுவதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேலும் இறப்புத் தருவாயின் போது நிர்பந்தமான சூழ்நிலையில் கொள்ளப்படும் விசுவாசம் ஏற்கப்பட மாட்டாது என்னும்போது பிர்ஔனுடைய விசுவாசம் மட்டும் எவ்வாறு ஏற்கப்பட முடியும்? எனவே அவன் ஒரு இறைமறுப்பாளன்தான் என்பதை நாம் ஏற்கத்தான் வேண்டும். அத்துடன் நமது உள்ளமும் பிர்ஔன் ஒரு விசுவாசி என்பதை ஏற்க மறுக்கிறது. காரணம் அவனது வாழ்க்கையிலிருந்து அவன் நல்லவன்தானென்பதை ஆதாரப்படுத்துவதற்குரிய ஒரேயொரு புகழுக்குரிய சம்பவம் கூட நமது பார்வைக்குக் கிடைக்கவில்லை. அதாவது எனது இன்ன அடியான் தனது வாழ்நாள் முழுவதும் பாவத்திலும் அநியாயத்திலும் தான் மூழ்கியிருந்தான். இருப்பினும் கடைசி நேரத்தில் அவன் எனது பேரருளை கொண்டும், இரட்சிப்புத் தன்மையைக் கொண்டும் என்னால் சூழப்பட்டு எனது நண்பனாகிவிட்டான் என ஒரு வார்த்தைகூட கிடைக்கவில்லையே! அவன் இறைவேதத்தில் எங்கெல்லாம் பேசப்படுகிறானோ அங்கெல்லாம் இழிவோடு தான் பேசப்படுகிறான். அவனை குறித்த தரமற்ற வார்த்தைகள்தான் கிடைக்கின்றன. அவ்வாறின்றி அவன் விசுவாசம் கொண்டான் அல்லது முஸ்லிமானான் என்று எங்குமே சொல்லப்படவில்லை. இந்நிலையில் அடுத்துவரும் வேத வசனத்தையம் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்...

حتي اذا ادركه الغرق قال آمنت انه لا اله الا الذي آمنت به بنواسرائيل وانا من المسلمين

'எதுவரையெனில் பிர்ஔன் நீரில் மூழ்கத்துவங்கவே, நான் விசுவாசம் கொண்டேன். நிச்சயமாக வணக்கதிற்குரியவன் இறைவனைத் தவிர வேறு யாருமில்லை. எவனை பனீ இஸ்ரவேலர்கள் தங்களின் இறைவனாக விசுவாசம் கொண்டார்கNhள அவனை நானும் விசுவாசம் கொண்டேன். மேலும் நான் முஸ்லிம்களில் நின்றுமுள்ளவன் என்று கூறினான்'.

மேற்கண்ட வசனம் நமக்கு உணர்த்தக் கூடிய உண்மைஎன்னவெனில், அந்த அநியாயக்காரன் தனது வாழ்க்கை முழுவதும் தலைக்கனம் பிடித்தவனாகவும், அகம்பாவம் கொண்டவனாகவும், வீண் விளையாட்டிலும் தான் மூழ்கிக் கிடந்தான். அவனை வழிநடத்த வந்த இறைத்தூதர்களான மூஸா மற்றும் ஹாரூன் அலைஹிஸ்ஸலாமவர்கள், அவன்மீதும் அவனது பரிவாரங்கள் மீதும் வேதனையை இறக்குமாறு இறைவனை வேண்டினர். இந்நிலையில் அவன் தனது வாழ்க்கையின் இறுதி விளிம்பிற்குச் சென்று இறை வேதனையை தனக்கு முன்னால் கண்டபோதுதான், அவன் தனது நாவை கொண்டு இஸ்லாத்தை ஏற்று விசுவாசம் கொள்வதாகக் கூறினான். இப்படிப்பட்ட நிலையில் கொள்ளப்படும் விசுவாசம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதாக அப்போது கட்டளை வந்தது. அந்நிலையில் அவனது சுய அதிகாரமும் அவனை விட்டு கொஞ்சம் கொஞ்சமாக விலகிப்போய் கொண்டிருந்தது. இன்று உனது இறை மறுப்பும் இறுமாப்பும் எங்கே போயிற்று? நாம் உன்னை இவ்வுலகிலும் மறுமையிலும் இழிவுபடுத்துவோம். அத்துடன் உனது உடலை நதியை விட்டும் மீட்டெடுத்து அகிலத்தாருக்கு ஒரு காட்சிப் பொருளாகவும் ஆக்குவோம். இதன்மூலம்

மனிதர்கள்,இறைவனையும் அவனது தூதரையும் பகைத்து தலைக்கனம் கொண்டு அகம்பாவம் பிடித்தலைவோரின் கதி இதுதான் என்பதை கண்டு படிப்பினை பெறுவார்கள் என்றும் இறைவன் கூறினான். மேலும்...

فاخذه الله نكال الآخرة والاولي ان في ذالك لعبرة لمن يخشي

'இறைவன் பிர்அவ்னை இம்மையிலும் மறுமையிலும் வேதனையைக் கொண்டு பிடித்தான். இதில் பயபக்தியாளர்களுக்கு படிப்பினை உள்ளது' என்றும் கூறுகிறான்.

**அன்னை ஆசியா**

பிர்ஔனின் மனைவியான அன்னை ஆசியா அவர்கள் இறைதூதரான மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களைப் பற்றி கூறினர்...

قرت عين لي ولك لا تقتلوه

'இக்குழந்தை என்னுடையவும் உன்னுடையவும் கண்களுக்கு குளிர்ச்சியாகும். ஆதலால் இதை கொல்ல வேண்டாம்' என தனது கணவராகிய பிர்அவ்னிடம் கூறினார்.

இச்சம்பவத்தில் இறைவனுடைய சமயோஜிதமான நடவடிக்கை என்னவெனில், இறைவன் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை அநியாயக்காரனுடைய கரத்திலிருந்து பாதுகாக்க வேண்டுமென விரும்பினான். ஏனெனில் பிர்ஔன் அப்போது பிறக்கின்ற ஆண் குழந்தைகள் எதையும் விட்டு வைக்காது அவைகளைக் கொன்றொழித்து கொண்டிருந்தான். இந்நிலையில் அன்னை ஆசியா அவர்கள் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களை காப்பாற்றுவதற்காக வேண்டி ஒரு உபாயத்தைக் கையாண்டார். காரணம் அன்னை ஆசியாவின் உள்ளத்திலிருந்த அகப்பார்வை மூஸா நபியவர்களை இறைவனுடைய தூதர் எனத் தெரிந்து கொண்டிருந்ததே அதற்கு காரணமாகும்.

فالتقته آل فرعون ليكون لهم عدوا وحزنا

(மூஸா) 'பிறந்தபின் பிர்அவ்னுடைய குடும்பத்தார் மூஸாவை எடுத்துக் கொண்டனர். அத்துடன் அவர்கள் மூஸாவுக்கு விரோதிகளாகவும் தீங்கிழைப்போராகவும் மாறிப் போயினர்' என குர்ஆன் கூறுகிறது.

இந்த வசனத்தில் குறிப்பிடப்படும் விரோதம் என்பதானது, அவர்களது ஆன்மாவில் முன்னரே ஏற்பட்டு விட்டிருந்த விரோதமாகும். இதில் பிர்அவ்ன் முஸ்லிமாகி இறந்திருப்பானாயின் அந்த விரோதம் நிரந்தரமாக அவனது உள்ளத்தில் இருந்திருக்க வாய்ப்பில்லை. அன்றி திருமறையிலும் நபி மொழிகளிலும் அவனை குறித்து இழிவான வார்த்தைகள் தான் காணப்படுகின்றன. அத்துடன் இஸ்லாமியர்களிலுள்ள அறிஞர் பெருமக்களும் ஒட்டுமொத்தமாக

பிர்அவ்ன் இறைமறுப்பாளனாகத்தான் இறந்தானென்று கூறுகின்றனர். அவ்வாறின்றி அவனது இறுதிமுடிவு நல்லதாக அமைந்திருக்குமாயின் குர்ஆனோ நபிமொழிகளோ அவனது இறைமறுப்பை குறித்து பேசியே இருக்காது.

**பிர்ஔனும் அபூஜஹ்லும்**

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் அவர்களது மிகப்பெரும் விரோதியாக இருந்த அபூஜஹ்ல் என்பான் பத்ரு என்னும் போரில் வெட்டப்பட்டபோது, அதை குறித்து முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்...

مات فرعون هذه الامة

'இந்த சமூகத்தின் பிர்அவ்ன் வெட்டப்பட்டான்'

என்று கூறினர். இதில் பிர்அவ்ன் நல்லவனாக இருந்திருந்தால் மிகப்பயங்கரமான இறைமறுப்பாளனாக இருந்த அபூஜஹ்லோடு உவமைப்படுத்தப்பட்டு பேசப்பட்டிருக்க மாட்டான். இல்லையில்லை. இந்த உவமை பிர்அவ்னிடம் காணப்பட்ட அகம்பாவத்தையும் தற்பெருமையையும் குறித்து சொல்லப்பட்ட ஒன்றேயன்றி வேறல்லவென்று சொல்லப்பட்டால் அதற்குரிய பதிலானது, ஒருவர் விசுவாசம் கொண்டபின் இஸ்லாம் அவரது முந்தைய வாழ்க்கையின் இறை நிராகரிப்பை குறித்தோ, அல்லது விரோதத்தையோ உவமைப்படுத்தி பேசாது. ஏனெனில் இஸ்லாம் என்பது ஒருவர் விசுவாசம் கொண்டுவிட்டால் அவரது முந்தைய பாவங்களனைத்தையும் அழித்துவிடும். பாருங்கள்! அரபு தேசத்திலிருந்த குறைஷிகளின் தலைவர்கள் தமது வாழ்க்கையின் பெரும்பகுதியை முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விரோதிப்பதிலேயே செலவிட்டிருந்தனர். ஆனால் அவர்கள் விசுவாசம் கொண்டு இவ்வுலகை விட்டு நீங்கும்போது விசுவாசிகள் என்னும் பெயரில்தான் சென்றனர். இஸ்லாம் அவர்களை எந்த இடத்திலும் இழிவுபடுத்தி ஒருவார்த்தை கூட பேசவில்லை. அது நாகரிகமும் அல்ல.

ஆக நம்பிக்கைக்குரிய விஷயத்தை பொறுத்தவரை சட்டக்கலை மேதைகளில் இமாம் அபூஹனீபா என்பாரின் அழுத்தமான ஆதாரத்திற்குரிய பார்வையிலிருந்து நாம் விலகக் கூடாது. அதாவது சட்டக்கலை மேதைகளை நாம் பின்பற்ற வேண்டும். அதிலும் குறிப்பாக மார்க்கத்தின் எந்த சட்டப்பிரச்சனையில் அறிஞர்கள் அனைவரும் ஒருங்கிணைந்துள்ளார்களோ அதிலிருந்து நாம் விலகக் கூடாது. ஒழுக்கத்திலும், பண்பாடுகளிலும் ஞானிகளை பின்பற்றுவது அவசியத்திலும் மிகவும் அவசியமாகும். அதேநேரம் அவர்களது கருத்துக்கள் அறிஞர்களது கருத்துக்களுக்கு முரண்பாடானதாக இருக்கிறதா இல்லையா என்பதும் கவனிக்கப்பட வேண்டும். ஒரு ஞானியை பின்பற்றுவதில் பூரணமாகவும் உறுதியான எண்ணத்தோடும் தீவிரமாக முயற்சி செய்தால் பிரகாசமும் நிலைமைகளும் தாமாகவே திறந்து கொள்ளும்.

அதற்காக கண்ணை மூடிக் கொண்டு பின்பற்ற வேண்டுமென்பதோ முகஸ்துதி செய்ய வேண்டுமென்பதோ அவசியமில்லை.

**இப்னு ஹஜர் மக்கியின் கருத்து**

இப்னு ஹஜர் மக்கீ ரஹிமஹுல்லர் என்பார் தமது 'ஸவாஜிர்' என்னும் நூலில் இறைவனது வேதத்தில் சொல்லப்பட்டதைப் போன்று....

فلم يك ينفعهم ايمانهم لما رأو بأسنا

'நமது வேதனையை கண்டபின் அவனது விசுவாசம் அவனுக்கு எவ்வித பிரயோஜனத்தையும் அளிக்காது' எனக் கூறப்பட்டிருப்பதை போன்ற கருத்தை வெளிப்படுத்துகின்றனர். இதில் அனைத்து அறிஞர்களும் ஆய்வாளர்களும் பிர்அவ்ன் சம்பந்தமான கருத்தில் ஒருமித்த கருத்தையே கொண்டுள்ளனர். இந்நிலையில் தனியொரு மனிதர் அக்கருத்துக்கு மாற்றமாக கூறினாலும் அதனால் இணைப்புக்குரிய கருத்துக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. ஏனெனில் இறைவன் மீது மட்டும் விசுவாசம் கொண்டு அவனது தூதரை புறக்கணித்தல் என்பது விசுவாசமாகாது. இதில் பிர்அவ்ன் இறைவனை விசுவாசித்தான் என்பதை நாம் ஏற்றுக் கொண்டாலும் கூட அவனுடைய தூதராகிய மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களை அவன் விசுவாசிக்கவில்லை. அதனால்தான் அந்த விசுவாசம் அவனுக்கு எவ்விதப் பிரயோஜனத்தையும் தரவில்லை. ஏனெனில் ஒரு இறை மறுப்பாளன் ஆயிரம் முறை...

اشهد ان لا اله الا الذي آمنت به مسلمون

'இறைவனையன்றி வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என விசுவாசம் கொண்டதன் மூலம் நான் முஸ்லிமானேன்' என்று கூறுகிறான். ஆனால் அவன் 'அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்' (முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறைவனுடைய தூதர்) என்று சொல்லாதவரை, விசுவாசிக்காதவரை அவனை ஒரு விசுவாசியென்று சொல்ல முடியாது. இதில் வேறு சிலர் பிர்ஔனுடைய மந்திரவாதிகளும்தான் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மீது விசுவாசம் கொள்ளவில்லை. அவாக்ளின் விசுவாசம் மட்டும் எவ்வாறு ஊற்றுக் கொள்ளப்பட்டதென்று வினவுகின்றனர். அதற்குரிய பதிலானது...

آمنا برب العالمين رب موسي وهارون

'நாங்கள் அகிலத்தாரின் இரட்சகனையும் மூஸா மற்றும் ஹாரூனுடைய இரட்சகனையும் விசுவாசித்தோம்' எனக் கூறியதை கொண்டு மூஸா மற்றும் ஹாரூன் அலைஹிஸ்ஸலாம் ஆகிய இரு இறைத்தூதர்களையும் அவர்கள் விசுவாசித்தனர் என்பது மேற்கண்ட வசனத்தின் வாயிலாக நிரூபிக்கப்படுகிறது. ஆனால் பிர்அவ்ன் மூஸா நபியவர்களை விட்டு விட்டு...

الذي آمنت به بنو اسرائيل

'பனீ இஸ்ரவேலர்கள் எந்த இறைவனை விசுவாரித்தார்களோ அந்த இறைவன்' என்றுதான் கூறினான். இங்கே இன்னொன்றையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, அம்மந்திரவாதிகள் இறைவனை விசுவாசித்ததை போல மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மூலமாக வெளிப்பட்ட அந்த அற்புதத்தையும் விசுவாசித்ததானது மூஸா நபியை விசுவாசித்தது தானென்று சொல்லப்படும். ஆக அந்த மந்திரவாதிகள் பகிரங்கமாக மூஸா நபியவர்களை விசுவாசித்தனர். ஆனால் பிர்அவ்னுடைய விசுவாசத்தில் அவன் மூஸா நபியவர்கள் மீது விசுவாசம் கொண்டான் என்பதற்குரிய ஒருசிறு அடையாளம் கூட காணப்படவில்லை. அவன் பனீ இஸ்ரவேலர்களைத்தான் விசுவாசித்தானே அன்றி, மற்றபடி அவனது உள்ளத்தில் மூஸா நபியவர்களின் மீதிருந்த நிராகரிப்பு என்பது அப்படியேதான் இருந்தது. ஆக அவன் இறைமறுப்பாளனாகத்தான் இறுதிவரை இருந்தான்.

**பெரும்பாவத்தால் விசுவாசம் அழியாது**

பெரும்பாவம் இறை நம்பிக்கையாளர்களான விசுவாசிகளை அவர்களது விசுவாசத்தை விட்டும் வெளிப்படுத்தாது. நாம் முன்னால் சொல்லி வந்ததைப் போல விசுவாசத்திற்குரிய அடிப்படை என்பது உள்ளத்தால் மெய்ப்பிப்பதேயன்றி சரீரமோ அல்லது அதனுடைய அவயங்களோ விசுவாசத்திற்குரிய அடித்தளத்தில் வந்து சேராது. இருப்பினும் நற்காரியங்களின்றி விசுவாசம் பூரணத்துவத்தை அடையாது குறையுள்ளதாகவே இருக்குமென்று வேண்டுமானால் சொல்லலாம். இனி ஒரு பொருள் குறையுள்ளதாக இருப்பதைக் கொண்டு அது முழுவதுமாக அழிந்துபோய் விடுமென்று சொல்ல முடியாது. மாறாக அது பூரணம் என்னும் நிலையிலிருந்து கீழே விழுந்துள்ளது என்று வேண்டுமானால் சொல்லலாம்.

இதன்மூலம் பெரும்பாவம் ஒரு விசுவாசியை அவனது விசுவாசத்திலிருந்து முற்றிலுமாக அகற்றாது என்பதாம். மேலும் பாவங்களும் குற்றங்களும் ஒருவனை இறைமறுப்பாளனாக ஆக்கிவிடுவதில்லை. ஆனால் பாவியாக ஆக்கிவிடும். இந்நிலையில் விசுவாசி எனப்படுபவர் இருவகைப் படுவர். ஒருவர் இறைக்கட்டளைக்கு முற்றிலும் வழிப்பட்டு நடப்பவர். இவர் பூரணமான விசுவாசி. இன்னொருவர் பாவம் செய்யும் நன்னடத்தை அற்றவர். இவர் குறையுடைய விசுவாசி.

அடுத்து பாவம் செய்தவர்களையும் குற்றவாளிகளையும் குர்ஆன் விசுவாசிகள் என்ப பதத்;தைக் கொண்டுதான் பேசுகிறது. அத்துடன் அவர்கள் மீது இஸ்லாத்திற்குரிய சட்டங்களனைத்தும் விதிக்கப்படுகின்றன. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அவர்தம் தோழர்களும் அவர்களின் இறப்புத் தொழுகையை நிறைவேற்றி உள்ளனர். இவ்வாறே இஸ்லாமியர்கள் அடக்கப்படும் மையவாடியிலேயே அவர்களும் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் குற்றங்களும் பாவங்களும் மன்னிக்கப்படுவதற்காக வேண்டி

பிரார்த்தனையும் புரிந்துள்ளனர். ஆக இவையனைத்தும் அவர்கள் இஸ்லாமிய மார்க்கத்தை விட்டும் வெளியேறவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றன.

**பெரும்பாவம், சிறுபாவம்**

இதில் பெரும்பாவம் என்பது உறுதியான ஆதாரங்களை கொண்டு நிரூபிக்கப்பட்டதாகவும் அதைகுறித்து எச்சரிக்கை செய்யப்பட்டதாகவும் இருக்க வேண்டும். உதாரணமாக, நியாயமின்றி கொலை செய்தல், விபச்சாரத்தின் பக்கமாக சமீபித்தல், திருமணமான ஒழுக்கமுள்ள பெண்மீது வீண்பழி சுமத்துதல், இறை மறுப்பாளர்கள் எதிர்க்கும்போது அவர்களை எதிர்கொள்ள முடியாமல் புறமுதுகு காட்டி ஓடிப்போகுதல், ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுதல், சூனியம் செய்தல், அனாதைகளின் பொருளை அபகரித்தல், இஸ்லாமியர்களின் பெற்றோரை காரணமின்றி இம்சித்தல், மக்காவிலுள்ள புனித பூமியில் தடைசெய்யப்பட்டதை செய்தல், வட்டியை புசித்தல், திருடுதல், போதை பொருளை உபயோகித்தல், பன்றியின் இறைச்சியை உண்ணுதல், பொய்சாட்சி சொல்லுதல், காரணமின்றி உண்மையை மறைத்தல், நோயற்ற நிலையில் ரமலான் மாத நோன்பை விடுதல், தொழாதிருத்தல், தொழுகைக்குரிய நேரத்தை தவறவிட்டுத் தொழுதல், ஏழைவரியான ஸகாத்தை இருத்தல், அளவிலும் நிறுவையிலும் மோசடித்தனம் செய்தல், முஸ்லிம்களிடம் காரணமின்றி சண்டை செய்தல், சக்தி பெற்றிருந்தும் நன்மையை ஏவி தீமையை தடுக்காதிருத்தல், குர்ஆனை மனனம் செய்து பின்னர் மறந்து போகுதல், உயிரோடுள்ள ஏதேனும் ஒன்றை நெருப்பிலிட்டு எரித்தல், மனைவி கணவனுக்கு கட்டுப்பட மறுத்தல், கணவன் மனைவிக்கிடையே சண்டை மூட்டுதல், அறிஞர்கள்,. குர்ஆனை மனனம் செய்தோர் போன்றோரை இழிவுபடுத்தும் எண்ணத்தோடு அதைசெய்ய முற்படுதல், இறைவனுடைய பேரருளின் மீது நிராசையுற்று விடுதல், அவனது வேதனையை விட்டும் அச்சமற்றிருத்தல் ஆகிய இவையனைத்தும் பெரும்பாவங்களை சார்ந்ததாகும். இவையனைத்தையும் மௌலானா ஜலாலுத்தீன் தவானி ரஹிமஹுல்லாஹ் என்பாரை கொண்டு அறிவித்துள்ளோம்.

இவர் இமாம் ஷாபி ரஹிமஹுல்லாஹ் என்பாரின் தோழராகும். இதன்றி வேறுசில அறிஞர்களும் பெரும்பாவம் எவையெவை என்பதை குறித்து மிக விரிவாகக் கூறியுள்ளனர். இருப்பினும் பெரும்பாவம் எது என்பதை தெரிந்து கொள்வதற்குரிய முறையானது, இஸ்லாமிய சட்டத்தில் எதை குறித்த எச்சரிக்கையும், தடையும் வந்துள்ளதோ அதைநோக்கி சமீபிப்பதற்கு பெரும்பாவம் என்று சொல்லப்படும். காரணம் சிறுபாவத்தில் இத்தனை கடுமையில்லை. அதனாலேயே அதைவிட்டு தப்புவதும் கொஞ்சம் கஷ்டம்தான். அத்துடன் சிறுபாவத்தை கொண்டு பயபக்திக்கு நஷ்டமும் ஏற்படுவதில்லை. இருப்பினும் அதை பழக்கப்படுத்திக் கொள்ளக்கூடாது. இதுபோன்றே பெரும்பாவம் விசுவாசத்தை பலவீனப்படுத்தி நஷ்டத்திற்குள்ளாக்குமேயன்றி, விசுவாசத்தை விட்டும் இஸ்லாத்தை விட்டும் முற்றிலுமாக வெளியேற்றாது.

**காரிஜிய்யா, முஃதஸிலா**

இதில் காரிஜிய்யா என்னும் இஸ்லாமியர்களிலுள்ள ஒரு பிரிவை சேர்ந்தோர், பெரும்பாவம் செய்பவரை மட்டுமின்றி சிறுபாவம் செய்வோரையும் இறை மறுப்பாளர் எனக் கூறுகின்றனர். இப்பிரிவு பொய்யான ஒரு பிரிவாகும். ஆதலால் இவர்களின் பேச்சை நாம் ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. இவ்வாறே முஃதஸிலா என்னும் பிரிவார் பெரும்பாவம் செய்பவர் விசுவாசியுமல்ல இறைமறுப்பாளரும் அல்ல எனக் கூறுகின்றனர். இதோர் நவீனமான சட்டமாகும். இஸ்லாமிய மார்க்கத்தைச் சேர்ந்த அனைத்து அறிஞர்களின் கூற்றுக்கும் இது மாற்றமானதாகும். மேலும் இப்பிரிவு இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கையில் அவ்வப்போது புதுப்புது மாற்றங்களை புகுத்தத் தலைப்பட்டு வந்துள்ளது. அத்துடன் இப்பிரிவு தனது அறிவைக் கொண்டு எல்லாவற்றையும் காண முற்படுகின்ற ஒரு பிரிவாகும். இந்நிலையில் தனது அறிவுக்கு முன்னுரிமை கொடுத்து வழிப்படும் இவர்கள் குர்ஆனின் வெளிப்படையான வசனங்களுக்குக் கூட வலிந்துரை என்னும் விருப்பக்கருத்துக்களுக்கு இஸ்லாமியர்களை இழுத்துச் செல்கின்றனர். இதோர் பொய்யான பிரிவும் நம்பிக்கைக்கு மாற்றமான ஒன்றுமாகும். ஏனெனில் இறைவன் தனது அடியார்களை இரண்டு வரிசையில் வைத்திருக்கிறான். ஒன்று (விசுவாசி) முஸ்லிம். இன்னொன்று (இறைமறுப்பாளர்) காபிர். இதைகுறித்த வசனத்தைப் பாருங்கள்...

وهو الذي خلقكم فمنكم كافر ومنكم مؤمن

'மேலும் அவன்தான் எங்களை ஒன்று விசுவாசிகளாகவோ அல்லது இறைமறுப்பாளர்களாகவோ படைத்தான்'

இவ்விரண்டைத் தவிர மூன்றாவதான எந்தப் பிரிவுமில்லை. மேலும் இப்பிரிவினைவாதிகள் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விசுவாசித்து அவர்களை உண்மைபடுத்துவதற்குரிய தாத்பரியம் என்னவென்பதை புரிந்து கொள்ளவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் விசுவாசத்திற்குரிய பலத்தை கொண்டு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பேரொளிக்கு முன்னால் பாவங்களனைத்தும் வலுவிழந்து போய்விடுகின்றன. எவ்வாறு நன்மைகள் இறை மறுப்புக்குரிய நிலையில் எவ்வித பிரயோஜனத்தையும் தருவதில்லையோ, அவ்வாறே பாவங்களும் விசுவாசத்திற்குரிய சக்திக்கு முன்னால் ஒன்றுமில்லாமல் போய்விடுகின்றன. பின்னும் அவைகளால் எவ்வித நஷ்டத்தையும் ஏற்படுத்த முடியாது. இருப்பினும் விசுவாசத்திற்குரிய பூரணத்துவத்தில் கண்டிப்பாக வித்தியாசம் நிகழும்.

இனி ஒரு பாவத்தை பாவம் என எண்ணாது விலக்கப்பட்டதை ஆகுமான ஒன்றென முடிவெடுத்து ஒருவன் செய்வானாயின் அது இறைமறுப்பாகி விடும். அதாவது இது உள்ளத்தால் உண்மைப்படுத்தும் நிலைக்கு மாற்றமானதாகும். இவ்வாறே வேறொருவன் விலக்கப்பட்டதை விலக்கப்பட்டதாகவும் ஆகுமாக்கப்பட்டதை ஆகுமாக்கப்பட்டதென்றும் நம்பிய நிலையில் தனது மனிதப்பண்பின் இச்சைக்கு ஆட்பட்டு ஒரு பாவத்தை செய்துவிட்டால் அவன் இறைமறுப்பாளனாக மாட்டான். ஏனெனில் உள்ளத்தை கொண்டு

உண்மைபடுத்திய விசுவாசத்தின் உயிரோட்டம் அவனது உள்ளத்தில் இருப்பதால் அவன் விசுவாசியாகவே இருப்பான். இருப்பினும் பாவம்செய்த அவனுடைய உறுப்புக்கள் அவனது உள்ளத்தின் கட்டளைக்கு வழிப்பட மறுத்து மாறுசெய்ததால் அவைகளை குற்றவாளிகளென்று சொல்லப்படும். இப்படிப்பட்ட வேளையில் இறைவனுடைய வேதனையை அஞ்சியவனாகவும், அவன்தன்னை மன்னித்து விடுவான் என்ற நம்பிக்கையை ஆதரவு வைத்தவனாகவும் பாவமன்னிப்புத் தேட முயல வேண்டும்.

இதுபோன்றே பாவம் செய்பவன் அப்பாவத்தின்மீது கர்வம் கொள்ளக்கூடாது. ஏனெனில் பாவத்தின் அழுக்கானது உள்ளத்தின் தூய்மையையும் விசுவாசத்தின் பேரொளியையும் இல்லாமலாக்கி விடும். அதாவது அதனுடைய நாமதேமம் கூட இல்லாமல் போய் உள்ளம் கறுத்துவிடும். அத்துடன் இறைமறுப்புக்கு சமீபமாகவும் கொண்டு போய்விட்டு விடும். எப்போது மனிதன் பாவத்தை பழக்கப்படுத்திக் கொண்டு விடுகிறானோ அவன் இறைமறுப்பை விட்டும் தப்புவது மிகவும் கடினம்.

இதுபற்றி ஒரு நபிமொழியில் கூறப்பட்டுள்ளதாவது, ஒருவன் ஒரு பாவத்தை செய்தால் அது அவனுடைய உள்ளத்தில் ஒரு கரும்புள்ளியாக விழுகிறது. அவன் பாவமன்னிப்பு கோரினால் அப்புள்ளி மறைந்து விடுகிறது. இல்லையேல் அது நாளுக்குநாள் வளர்ச்சியடைந்து கொண்டே வந்து இறுதியில் அவனது உள்ளம் முழுவதையும் கறுப்பாக்கி விடுகிறது. அதன்பின் அந்த உள்ளம் விசுவாசத்திற்குரிய பேச்சையும் அதன் உண்மைகளையும் கேட்பதற்குரிய தகுதியை முற்றிலுமாக இழந்து விடுகிறது. இதுபற்றி குர்ஆன் என்னும் வேதத்தில்...

كلا بل ران على قلوبهم. وطبع الله على قلوبهم. وختم على قلوبهم

'அவர்கள் செய்து கொண்டிருந்த தீவினைகளே அவர்களின் இதயங்களை மூடிக் கொண்டன' 'இத்தகையோரின் இதயங்களை இறைவன் அவர்களின் பழக்கத்திற்குட்பட்டதாக ஆக்கி விட்டான்' இன்னும் அவர்களின் இதயங்கள் முத்திரையிடப்பட்டு விட்டன'

இம்மூன்று வசனங்களிலும் மூன்று வகையான நிலைகள் எடுத்துக் காட்டப்படுகின்றன. முதல் வசனத்தில் அது சந்தேகிக்கப்டுகிறது. இரண்டாவது வசனத்தில் உள்ளம் கறுத்துப் போகிறது. மூன்றாவது வசனத்தில் அந்த உள்ளம் முத்திரையிடப்பட்டு விடுகிறது.

**பாவங்களின் தாக்கம்**

ஒருவேளை பாவம் ஒரு விசுவாசியை அவனது இறைநம்பிக்கையை விட்டும் வெளியேற்றிவிடாது என்றாலும் இறைமறுப்பின் மீதுள்ள அச்சத்தை விட்டும் நீங்காது என்பதே உண்மையாகும். எனவே உலகப் பொருட்களில் தனது ஒரு விசுவாசிக்கு நிம்மதி என்பது உண்டு. இது மூன்று வகையான கட்டுப்பாடுகளைக் கொண்டு வாய்க்கிறது. ஒன்று உண்ணுதல். இரண்டு மானத்தை மறைக்கும் அளவுக்கு மட்டுமே உடுத்துதல். மூன்று வெயில் மற்றும் குளிர் போன்றவற்றிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ளும் அளவுக்கு மட்டுமே உரிய

வீட்டைக் கட்டுதல். அதற்கு மாறாக வரம்பை கடந்து சந்தேகத்திற்குரிய பாதையில் கால் வைப்பதும் சௌகரியம். வசதி என்னும் வாசலை திறப்பதும் சங்கேதஸ்பதமான நிலைக்கு கொண்டுபோய் விட்டுவிடும். அதன்பின் கொஞ்சங் கொஞ்சமாக மனிதன் விலக்கப்பட்டவற்றின் பக்கமாக சமீபிக்க முற்பட்டு விடுவான். இங்கேதான் இஸ்லாத்தின் எல்லை என்பது முடிவுற்றுப் போகிறது. அதற்கு மேல் வரம்பு கடத்தல் என்னும் இறை மறுப்புக்குரிய நதி ஆரம்பாகிவிடுகிறது.

சுருங்கக் கூறின் பூரணத்துவம் அல்லது நஷ்டத்தின் மிகைப்பு என்பதற்கு இவ்விரு பாதையை தவிர வேறு பூரணத்துவமும் இஸ்லாமிய மார்க்கத்தில் கடமையாக்கப்பட்ட வாஜிப், சுன்னத், நபில் போன்றவற்றை முறையாக பேணுதலோடு நடைமுறைப் படுத்தி வருவதுடன், இறக்கும்வரை அதில் நிலைத்தும் நிற்க வேண்டும். இதில் இறக்கம் என்பது எப்போது ஏற்படுகிறதெனில், மனிதன் சந்தேகத்திற்குரியவைகளையும் விலக்கப்பட்டவற்றையும் செய்யத் துவங்கும் போதுதான். உள்ளத்திற்கு அமைதி என்பது உண்மையில் அச்சத்திற்கும் ஆதரவிற்கும் மத்தியில்தான் இருக்கிறது.

**பாவிகள் நிரந்தர நரகவாதிகளல்ல**

பெரும்பாவம் செய்யும் விசுவாசி நிரந்தரமாக நரகத்தில் இருக்க மாட்டான். ஒருவேளை அவன் பாவமன்னிப்புக் கோராமலேயே இறந்து போயிருந்தாலும் சரி. ஏனெனில் மனிதன் பெரும்பாவம் செய்வதால் இறை மறுப்பாளனாவதில்லை. மேலும் குர்ஆனும் நபிமொழியும் நிரந்தரமான நரகம் என்பது இறை மறுப்பாளர்களுக்கும் இஸ்லாத்தை ஏற்க மறுப்போருக்கும்தானென்று கூறுகிறது. ஆதலால் பாவிகளும் பாவத்தின் பக்கமாக சமீபித்தவர்களும் நிரந்தரமாக நரகத்தில் இருக்க மாட்டார்கள். அவர்கள் பாவ மன்னிப்புக் கோரவில்லையாயின் இறைவன் விரும்பும்வரை அவர்களை நரகில் வைத்திருப்பான். அதன்பின் மன்னித்து அவர்களை சுவர்க்கத்திற்கு அனுப்புவான். அவர்கள் அங்கே நிரந்தரமாக இருப்பார்கள்.

இமாம் திர்மிதி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'நவாதிருல் உஸூல்' என்னும் நூலில் நபித்தோழர் அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு என்பாரை கொண்டு அறிவிக்கின்றனர். அதாவது, சில பாவிகள் ஒரேயொரு வினாடி நேரம் மட்டுமே நரகில் இருப்பர். சிலர் ஒருநாள் இருப்பர். சிலர் ஒரு வருடம் இருப்பர். சிலர் அதைவிட அதிக காலம் இருப்பர். எனினும் உலக ஜீவிய காலத்தை விட அதிக காலம் எந்த விசுவாசியும் நரகத்தில் இருக்கமாட்டார். இதனுடைய அளவு ஏழாயிரம் வருடங்களாகும். இவ்வாறே இப்னு அபீஹாத்தம் என்பாரும் இப்னு ஷாஹித் ரஹிமஹுல்லாஹ் என்பாரும் ஹழ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹு என்பாரைக் கொண்டு அறிவிக்கும் அறிவிப்பொன்றும் இவ்வாறு காணப்படுகிறது.

**இணை வைப்போர் நிரந்தர நரகவாதி**

ان اللہ لا یغفر ان یشرک بہ ویغفر مادون ذالک لمن یشاء

'திடனாக இறைவன் அவனுக்கு இணை வைக்கப்படுவதை மன்னிக்க மாட்டான். மேலும் அவன் நாடியவர்களுக்கு அதைத் தவிர உள்ளத்தை மன்னிப்பான்' என்கிறான்.

இந்த வசனத்தில் இறைவன் அவனுக்கு இணை வைக்கின்றவனையும் நிராகரிப்போனையும் ஒருபோதும் மன்னிக்க மாட்டேன் என்றும், அதையன்றி பெரும்பாவம் மற்றும் சிறுபாவம் போன்றவைகளை செய்தோரை அவர்கள் பாவமன்னிப்புக் கோரினாலும் சரி. கோராவிட்டாலும் சரி. மன்னித்து விடுவான் என்றும் கூறுகிறான். இன்னும் அவன் கூறுவதைப் பாருங்கள்...

يفعل الله ما يشاء ويحكم ما يريد

'இறைவன் நாடியதை ஆணையிடுவான். விரும்பியதை செய்வான்'

சுருங்கக் கூறின், மனிதர்கள் என்போர் இரு வகைப்படுவர். அதில் ஒருவர் இறை மறுப்பாளர். இன்னொருவர் விசுவாசி. விசுவாசிகளில் வழிப்படுவோரும் உண்டு. வரம்புமீறி பாவம் செய்வோரும் உண்டு. இதுபோன்றே பாவிகளில் பாவ மன்னிப்புக் கோருவோரும் உண்டு. கோராதோரும் உண்டு. ஆனால் விசுவாசம் கொள்ளாத இறை மறுப்பாளர்கள் நிரந்தரமாக நரகில்தான் இருப்பர். இவ்வாறே விசுவாசிகளில் வழிப்பட்டோரும் பாவமன்னிப்புக் கோரியவர்களும் சுவர்க்கம் செல்வர். இது இஸ்லாமிய அறிஞர்களின் ஒட்டு மொத்தமான தீர்ப்பாகும். இனி பாவம் செய்து அதற்கு மன்னிப்புக் கோராதவர்களை இறைவன் விரும்பும்வரை நரகத்திலிட்டு அவர்களின் பாவத்திற்குத் தக்கவாறு வேதனை செய்வான். அதன்பின் அவர்கள் சுவர்க்கம் செல்வர். இதில் அவர்கள் நரகத்தை விட்டு வெளியேறுதல் என்பது இன்னொருவரின் பரிந்துரையை கொண்டோ அல்லது பரிந்துரை இல்லாமலோ எப்படி இருந்தாலும் சரி. ஆக அவர்கள் நரகத்தை விட்டும் வெளியேறி விடுவர்.

**வேதனையும் மன்னிப்பும்**

فيغفر لمن يشاء ويعذب من يشاء

'இறைவன் நாடியவரை வேதனை செய்வான். நாடியவரை மன்னித்து விடுவான்'

பாவங்கள் மன்னிக்கப்படுவதை குறித்த நபிமொழிகள் கணக்கின்றி காணப்படுகின்றன. அதில் ஒரு நபிமொழியானது, முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றனர்: இறைவன் தனது அடியானை தனக்கு முன்னால் கொண்டுவந்து நிறுத்தி அவனுடைய கையில் அவனது நன்மை தீமைக்குரிய பட்டோலையைத் தருவான். அதை அடியான் வாங்கிப் பார்க்க, அதில் பாவங்களைத் தவிர வேறு எதுவுமே இருக்காது. ஆனால் அதனுடைய பின்பக்கமாக நன்மைகள் முழுவதும் குறிக்கப்பட்டிருக்கும். அதை எல்லா சிருஷ்டிகளும் பார்த்து அவனைப் பற்றி பெருமையாக பேசுவார்கள்.

அப்போது இறைவன் தனது பேரருளை கொண்டு அவனை நோக்கி, அடியானே! உலகில் உனது பாவங்களை நான் திரை போட்டு மறைத்து வைத்தேன். இன்று அவைகளை மன்னித்து விட்டேன். இப்போது நீ சுவர்க்கம் சென்று அங்கே நிரந்தரமாக இரு என ஆணையிடுவான். இக்கட்டளை அவனது பேரருளுக்குரிய பார்வையைக் கொண்டதாகும். மனித அறிவால் இதனை விளங்கிக் கொள்ள முடியாது. அதேநேரம் இறைவா! உனது அதே பேரருளைக் கொண்டு இறை மறுப்பாளர்களான காபிர்களையும் ஏன் மன்னிக்கக் கூடாது என்பதற்குரிய அதிகாரம் அறிவுக்கு இல்லை. மேலும் ஒருவனை மன்னிப்பதும் இன்னொருவனை தண்டிப்பதும் எந்த மாதிரியான நியாயம் என்றும் அவனிடம் கேட்க முடியாது. ஏனனில்...

يفعل الله ما يشاء ويحكم ما يريد

'இறைவன் விரும்பியதை செய்கிறான். இவ்வாறே அவன் எதை நாடுகிறானோ அதை ஆணையிடுகிறான்' என்பதாக தனது வேதத்தில் அவன் கூறுவதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இதைக்கொண்டு நாம் இன்னொன்றையும் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, அவனுடைய ஆணை அவனுடைய வாக்குறுதிக்கு மாற்றமாக ஒருபோதும் இருக்காது என்பதே. ஆம். அவன் எச்சரித்ததற்கு மாறாக ஒருவேளை இருக்கலாம். காரணம் அது அவனுடைய பேரருளுக்குரிய தன்மையை காட்டுவதாகும். பின்னும் அவன் அருள் புரிவோரின் வழக்கமானது எதை அவர்கள் தருவதாக வாக்களிக்கிறார்களோ அதை அவர்கள் நிறைவேற்றுகின்றனர். பாருங்கள்!

الكريم اذا وعد وفا

'வள்ளல் வாக்கு கொடுத்தால் அதை நிறைவேற்றுகிறான்'

இனி இறைவன் தனது கோபத்தைக் காட்டி அச்சுறுத்துகிறான் எனில், இது அவனது எச்சரிக்கையாகும். பின்னர் அதை மறுப்பதும் மன்னிப்பதும் அந்த வள்ளல் தன்மையின் வெளிப்பாடுகளில் நின்றுமுள்ளதாகும். வேறுசில அறிஞர்கள் இதுபற்றிகூறும்போது, அவன் தனது வாக்குறுதிக்கும் எச்சரிக்கைக்கும் மாற்றமாக நடக்க மாட்டான். அவ்வாறு இல்லையேல் அவனது எச்சரிக்கை அனைத்தும் பொய்யென்றாகி விடும். அதேநேரம் அவன் பொய்யை விட்டும் மகாத் தூய்மையானவன். அத்துடன் அது அவனுக்கு அறவே சாத்தியமில்லாத ஒன்றுமாகும் எனக் கூறுகின்றனர். அவர்களின் கூற்றுக்குரிய பதிலானது...

அவனது எச்சரிக்கைகள் பற்றிய விசயத்தில் அவனுடைய விருப்பத்தின் எதிர்பார்ப்புக்குரிய நிலைகள் அவரவர் சக்திக்குத் தக்கவாறு வரையறுக்கப்படும். ஒருவேளை அதைப் பற்றிஅ வன் விபரிக்கவில்லையாயினும் சரியே. மேலும் அவனது வாக்குறுதி எவ்வாறு நடக்கும் எனக் கூறப்பட்டதோ அவ்வாறே நடக்கும். அதுபற்றிய வேத வசனங்களும் நபிமொழிகளும், எதில் அவனது விருப்பத்தை குறித்து விளக்கப்பட்டுள்ளதோ அதில் விதி என்பது அவனது

விருப்பத்திற்குத் தக்கவாறு அமைவதாகும். அடுத்து எச்சரிக்கை குறித்த விசயங்கள் உண்மையில் வேதனையை குறிப்பதாக இருந்தாலும் அது அப்படித்தான் நிகழும் என்பது கருத்தல்ல. சிலபோது அவனது விருப்பத்தை எடுத்துக் காட்டும் வகையிலும் அவனுடைய எச்சரிக்கைகள் அமையலாம். இப்படிப்பட்ட நிலையில் பொய் என்பதோ அல்லது உண்மைக்கு மாற்றம் என்பதோ சரியல்ல.

**சிறுபாவங்கள் மீது தண்டனை**

சிறுபாவங்களுக்காகவும் வேதனை செய்யப்படலாம். ஏனெனில் இறைமறுப்பை தவிரவுள்ள ஏனைய பெரிய மற்றும் சிறிய பாவங்களுக்காக வேதனை செய்யப்படுதல் என்பது இறைவிருப்பத்தை பொறுத்ததாகும். இதில் சிறியதும் பாவம்தான். அதற்காக வேதனை செய்யப்படுவதும் சரியானதே.

**இறைத்தூதர்கள்**

இறைவன் மனித இனத்திலிருந்தே தனது தூதர்களை அனுப்பினான். அவர்கள் சுவர்க்கத்தை பற்றிய சுபச் செய்தியை கூறினர். இதுபோன்றே நரகத்தை குறித்தும் எச்சரித்தனர். மனித குலத்தை இம்மை மறுமைக்குரிய காரியங்களில் வழிநடத்தினர்.

இனி இறைவன், தானே ஒன்றை செய்பவனாகவும் அதற்குரிய அதிகாரமுடையவனாகவும் இருக்கிறான். அவன் விரும்பியதை தனது நாட்டத்தைக் கொண்டும் அதிகாரத்தைக் கொண்டும் செய்கிறான். அவனுக்கு எந்தவொரு பொருளின் தேவையுமில்லை. இவ்வாறே எந்தவொரு பொருளை கொண்டும் அவன் நிர்பந்திக்கப்படுபவனோ அதிகாரம் செய்யப்படுபவனோ அல்ல. அறிவு அவன் மீது ஆட்சி செய்ய முடியாது. மாறாக அவன்தான் அறிவின்மீது ஆட்சி நடத்துகிறான்.

இன்னும் அவன்தான் தனது பேரருளை கொண்டும் கருணையைக் கொண்டும் நிரந்தரமான ஜீவியத்தை தர மனிதனுக்கு இம்மையிலும், மறுமையிலும் அவனை திருத்தியமைக்கும் வழிமுறைகளையும் அதற்குரிய சாதனங்களையும் தனது ஆற்றலைக் கொண்டும் நுணுக்கத்தைக் கொண்டும் உருவாக்கினான். மேலும் அவனே அதற்குரிய பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கிறான். தனது அடியார்களு;கது இரணமளித்தல், அவர்கள் நேர்வழியில் நடந்திட தூதர்களை அனுப்புதல் போன்றவற்றை செய்கிறான். இருப்பினும் இவ்வாறெல்லாம் செய்வது அவன்மீது கடமையல்ல. மாறாக அவன் தனது வழக்கமான பேரருளைக் கொண்டு இவைகளைச் செய்கிறான்.

இனி சாமானியர்களுக்கு அப்பேரருளாளனின் சன்னிதானத்திலிருந்து அவனுடைய 'ஃபைஸ்' என்னும் அனுக்கிரஹத்தை பெறுவதற்குரிய வழிமுறையோ அல்லது அதற்குரிய தகுதியோ அவர்களிடம் அறவே இல்லை என்பதாலும், அத்துடன் வானவர்கள் வாழும் மலக்கூத்து என்னும் இடத்தைக் கூட அவர்களால் எட்ட முடியாது என்பதாலும், அவன் தனது அடியார்களில் சிலரை தேர்ந்தெடுத்து அவர்களை உன்னதமான நிலைக்கு உயர்த்தி

அவர்களுக்கு தனது 'தாத்' (தன்மயம்) 'சிபாத்' (குணம்) மற்றும் செயல்பாடுகளை குறித்த ஞானத்தை அருள்புரிந்து எவை எவைகளில் மனித இனத்திற்கு நன்மை என்பது இருந்ததோ அவையனைத்தையும் அவர்களுக்கு கற்பித்து அவர்கள் இப்பூமிக்கு வருகை தரும்போது மனிதர்களான தனது அடியார்களை அதன்பக்கமாக அழைத்து அவர்களுக்கு நேர்வழியைக் காட்டித்தந்து இம்மையிலும் மறுமையிலும் அவர்களுக்கு எது அவசியமானதோ அதன் பக்கமாக அவர்களை வழிநடத்தவும் ஆணையிட்டான்.

இதுபோன்றே இறைவன் சுவர்க்கத்தைப் படைத்து அதை இறை நம்பிக்கையாளர்களின் இருப்பிடமாகவும் நரகத்தை படைத்து அதை இறை மறுப்பாளர்களின் இருப்பிடமாகவும் ஆக்கினான். இதில் எந்த நற்செயல் மனிதனை சுவர்க்கத்திற்குரியதாக ஆக்குமோ, எந்தத் தீய செயல் நரகத்திற்குரியதாக ஆக்குமோ அவையனைத்தும் அறிவைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிற ஒன்றல்லவாதலால் தான் இறைத்தூதர்கள் அனுப்பப்பட்டனர். அவர்கள் மனித இனத்தாரிடம் வருகைதந்து இன்ன செயல் மனிதனை ஈடேற்றத்திற்கு உரியதாக்கும். இன்ன செயல் மனிதனை நரகுக்கு உரியதாக்கும் என்பதையெல்லாம் காட்டித்தந்தனர். இப்படி இறைத்தூதர்களை கொண்டு மனித இனத்திற்கு சரியான மற்றும் தவறான பாதைகளனைத்தும் காட்டித் தரப்பட்டு விட்டதால் மனிதர்கள் இறைவனை குறைசொல்லவோ அல்லது குற்றம் பிடிக்கவோ வழியில்லாமல்போய்விட்டது. இதுபற்றி இறைவன் தனது வேதத்தில்...

لئلا يكون للناس على الله حجة بعد الرسل

'மனிதர்களிடம் இறைத்தூதர்கள் வந்தபின் இறவைன் மீது அவர்கள் குற்றம் சுமத்தவோ அல்லது குறை சொல்லவோ வழியில்லை' என்றும்,...

وما ارسلناك الا رحمة للعالمين

'மேலும் நாம் உம்மை (முஹம்மத் நபியை) அகிலமனைத்துக்கும் இரட்சிப்பாளராகவே அன்றி அனுப்பவில்லை'

என்றும் கூறுகிறான். இந்த வசனத்தை கொண்டு அனைத்து வகையான கல்விகளின் மூலஸ்தானமும் அடித்தளமும், அது மண்ணுலகைச் சேர்ந்ததாகவோ அல்லது விண்ணுலகைச் சேர்ந்ததாகவோ இருந்தாலும் சரி. அவையனைத்தும் இறைத்தூதர்களின் அனுக்கிரகத்தை கொண்டே கிடைக்கக் கூடியவைகளாகும். மேலும் கல்வியின் அடித்தளமும் அவைகள் ஒலித்தோடும் ஊற்றுக் கண்களும் வஹி என்னும் தெய்வ அறிவிப்பையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. அனைத்து வகையான அறிஞர்களும் தத்துவவாதிகளும் அதிலிருந்துதான் தமக்குரிய அறிவை பெறுகின்றனர். அனைவருமே அதிலிருந்துதான் நீர் அருந்துகின்றனர். இனி அனுமானம் சுய ஆய்வு மற்றும் உபதேசம் போன்றவற்றை கொண்டு அறிஞர்கள் அதிகமானதை பின்னர் இணைத்து விட்டனர். அதேநேரம் ஜனங்களை அமைதிப்படுத்துவதற்காக வேண்டி அக்கல்வியை அவர்கள் வெள;வேறு வகையாக

பேசியிருக்கலாம். ஆக இன்று இப்பூமியில் பார்க்கப்படும் கல்விகளனைத்துமே அந்த தெய்வ அறிவிப்பின் வாயிலாகக் கிடைத்த கல்வியின் விளக்கமும் விரிவுரையும் தான் என்றால் மிகையாகாது.

இதில் சில கல்விகள் மனித குலத்தின் இயற்கை நடைமுறைக்கு மாற்றமாக உள்ளதே என நீங்கள் யோசிக்கலாம். கால மாற்றங்களின் சூழ்நிலைகளுக்குத் தக்கவாறு முந்தைய இறைத்தூதர்களின் சட்டவிதிகளை இயற்கையின் அமைப்பே மாற்றி அமைத்துவிட்டபின், இப்படிப்பட்ட சூழ்நிலையில் சிலர் தமது பழைய மார்க்கத்திலேயே நின்று கொண்டுள்ளனர். அதன்பின் வந்த இறைத்தூதர்களை இவர்கள் ஏற்க மறுப்பதோடு பின்பற்றவும் மறுக்கின்றனர். இவ்வாறு இவர்கள் மாறிவரும் சூழ்நிலையை ஏற்றுக் கொள்வதை விட்டும் விலகியுள்ளனர்.

வேறுசிலர் தமது மார்க்கவிதிகளை மாற்றிப் புரட்டி மிகைப்படுத்தி வைத்துள்ளனர். இதில் ஒரு கூட்டம் எதற்குமே லாயக்கில்லாத தமது சிற்றறிவை கொண்டு சந்தேகத்தை தோற்றுவித்து வழிகெடுக்கும் நோக்கில் வாதப் பிரதிவாதம் மற்றும் சச்சரவுகளின் வாயிலை திறந்து விட்டுள்ளது.

இன்னொரு கூட்டமாகிய தத்துவவாதிகள் தமது ஆன்ம பரிசோதனையின் ஆதாரத்தை மூலதனமாகக் கொண்டு யாருடைய உதவியுமின்றி ஒரு கல்வியை உருவாக்கினர். அவர்களுக்கு ஒரு இடைப் பொருளின் அவசியம் தேவைஎன்பதை கூட அவர்கள் உணரவில்லை. இந்நிலையில் ஒருவன் கல்வியைப் பெற வேண்டுமாயின் அதற்குரிய ஒரேவழி ஆசிரியர்தான். இனி அக்கல்வியை கொண்டு இன்னும் அதிகமான விளக்கங்களை பெற வேண்டுமானால் அது தனது விவேகம் மற்றும் ஆராய்ச்சியின் பலனாகும். இதுபற்றிய ஒரு நபிமொழியைப் பாருங்கள்....

انما العلم بالتعلم والحلم بالتحلم

'கல்வி கற்பதன் மூலமாக கிடைக்கிறது. இதேபோல இரக்க சிந்தனை சகிப்புத் தன்மையால் வாய்க்கிறது'

**இறைதூதர்களின் அற்புதங்கள்**

இறைவன் தனது தூதர் பெருமக்களின தூதுத்துவத்தை அற்புதங்களைக் கொண்டும் அத்தாட்சிகளைக் கொண்டும் அங்கீகரித்துள்ளான். அவைகளை கொண்டு மனித இனத்திற்கு திட நம்பிக்கையும் இறைவிசுவாசமும் கிடைக்கின்றன. ஏனெனில் ஒவ்வொரு வாதத்திற்கும் ஒரு ஆதாரமுண்டு. அதேபோல இறைத்தூதர்கள் தம்மை இறைதூதரென வாதிப்பதற்கும் அதை உறுதிப்படுத்துவதற்குமுரிய ஆதாரம் இந்த அற்புதங்களே.

**அற்புதம் என்பது என்ன?**



www.sufimanzil.org

அற்புதம் என்பது இயற்கையின் நியதிக்கு மாற்றமாக நிகழ்த்தப்படும் ஒரு செயலாகும். அது தம்மை இறைத்தூதரென வாதிப்பவரிடமிருந்து அவரது தூதுத்துவத்தை ஆதாரப்படுத்திக் காட்டுவதற்காக வெளிப்படுகிறது. இனி இறைதூதரல்லாத ஒருவர் இது போன்றதொரு செயலை செய்துகாட்டும் விசயத்தில் தமது இயலாமையை ஒப்புக் கொள்வதை தவிர அவருக்கு வேறுவழியில்லை. பின்னும் இயற்கைக்கு மாற்றமானது என்பதன் அர்த்தம், மனித அறிவைக் கொண்டு விளங்கமுடியாத வெளித்தோற்றத்திற்குரிய காரணங்கள் எதையும் தேடாத நிலையில் ஒரு இறைத்தூதரிடமிருந்து வெளிப்படும் செயலுக்கு அற்புதம் எனக் கூறப்படுகிறது.

மேலும் இப்பூவுலகில் வாழும் அறிவாளர்களும் தத்துவவாதிகளும் இப்பிரபஞ்சத்தில் நிகழும் காரியங்களனைத்தையும் ஒரு காரணத்தின் மீதே அமைத்துள்ளனர். இதில் சர்வசக்தனாகிய இறைவனும் இப்பூமியில் காரணமின்றி எந்தவொரு காரியத்தையம் நிகழ்த்துவதில்லை. இது அவனால் ஏற்படுத்தப்பட்டுள்ள விதியாகும். இதைத்தான் 'வழக்கம்' எனக் கூறப்படுகிறது. சிலபோது இந்த வழக்கத்தை அவன் தனது பேராற்றலை கொண்டு உடைத்தெறிந்து விடுவதுமுண்டு. இந்நிலையில் வெளித்தோற்றத்திற்குரிய எந்தக்க காரணமுமின்றி இதனை தனது தூதர்களின் கரத்தைக் கொண்டு நிகழ்த்துகிறான். காரணம் அவைகள் அவர்களது தூதுத்துவத்திற்குரிய ஆதாரமாக அமைந்திட வேண்டும் என்பதற்காக. எனவே அற்புதம் என்பது இறைவனது செயலாகும். இறைத்தூதர்களின் செயலல்ல. ஏனெனில் இறையாற்றலின் விதிமுறையை மனிதனால் ஒருபோதும் நொறுக்கவோ மாற்றவோ முடியாது. அதனால்தான் அந்த அற்புதத்தை பார்த்ததும் இறைதூதுத்துவத்தின் மீது ஒருவனுக்கு நம்பிக்கை வந்து விடுகிறது. மனித ஆன்மாவும் வேறுவழியின்றி அதை உண்மைதானென ஒப்புக் கொள்கிறது. அதன்பின் நிராகரிப்பென்ற பேச்சுக்கே அங்கே இடமில்லாமலும் போய் விடுகிறது. இதுதான் ஆன்மாக்களின் இயற்கையான பிறப்புக்குரிய அமைப்பின் தத்துவமாகும்.

இனி தூதுத்துவத்தை வாதித்தல் என்பது வழக்கத்திற்கு மாற்றமானது மட்டுமின்றி மகத்தான ஒரு விஷயமுமாகும். அதனால்தான் அந்த வாதத்தை உறுதிப்படுத்திக் காட்டும் ஆதாரமும் மகத்தானதாக இருக்க வேண்டுமென்று சொல்கிறோம். மேலும் அற்புதம் என்பது இறையாற்றலின் தீவிரத்தன்மைக்குரிய ஒரு வெளிப்பாடாகும். அவனது பேராற்றலுக்கு முன் எவருடைய பாதமும் காலூன்றி நிற்பதில்லை. சிருஷ்டிகளின் ஆற்றலனைத்தும் அங்கே செல்லாக்காசாகி விடுகின்றன. அதன்பின் எண்ணங்களை கொண்டு கோர்க்கப்படும் அறிவுப் பூர்வமான ஆதாரங்களும் தழுவல்களும் செயலிழந்து போய் விடுகின்றன.

அடுத்து எந்த ஆதாரம் எண்ண அலைகளை கொண்டு வரிசைபடுத்திக் கொடுக்கப்படுகிறதோ அதன்மூலம் எதிரியின் வாயை அடைக்கவோ அமைதிப்படுத்தவோ முடியாது. வாதப்பிரதிவாதங்களும், விதண்டாவாதங்களும் எண்ண அலைகளின் நீரோட்டத்தை கொண்டு தீர்க்கப்பட முடியாது. அதனால்தான் தர்க்க சாஸ்திரமும், தத்துவ சாஸ்திரத்தின் ஆதாரங்களும் பலமான ஆதாரங்களை கொண்டு தகர்த்தெறியப்பட்டு விட்டன. இந்நிலையில் இறைத்தூதர் ஒருவரின் அற்புதத்தை பார்க்கும் ஒருவர், அதை பார்த்த பின்னரும் மறுப்பவராகவோ அல்லது

நிராகரிப்பவராகவோ இருப்பாராயின் அது அவரது ஆதியமைப்பின் விதிகெட்ட,அவருக்குள் குமைந்து கொண்டுள்ள காழ்ப்புணர்வே அன்றி வேறென்னவாக இருக்க முடியும்?

எல்லா இறைதூதர்களிலும் முதல் தூதர் ஆதம் நபி அலைஹிஸ்ஸலாம் என்பவராவார். இவர்தான் மனிதகுலத்தின் முதல் தந்தை. இதுபோன்றே இப்பூமியில் இறுதி நபியாக முஹம்மத் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வெளிப்படுத்தப்பட்டனர். இதுபற்றி குர்ஆனில்....

ولاكن رسول الله وخاتم النبيين

'எனினும் ரஸூலுல்லாஹ் (முஹம்மத்) தான் இறுதி நபியாகும்'

எனக் கூறப்பட்டுள்ளது. இதில் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவர்களின் தூதுத்துவத்தை கொண்டு மனிதத்துவத்தை நிறைவாக்குவதும், நற்குணங்களை பூரணப்படுத்துவதும் தான் இறைவனின் நோக்கமாக இருந்தது. எப்போது அவனுடைய நோக்கம் முழுமையடைந்து விட்டதோ, அதன்பின் எந்தத் தூதரின் வருகைக்கும் இனி அவசியமில்லாமல் போய்விட்டது. அத்துடன் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கலீபாக்களான பிரதிநிதிகளும், சமூகத்திலுள்ள அறிஞர்களும் இப்பிரபஞ்சத்தின் பாதுகாவலர்களாகவும் உதவியாளர்களாகவும் நிறுவப்பட்டு விட்டதால் இறுதிநாள் வரை அவர்களின் வழிகாட்டலும் சேவையுமே போதுமென்றும் தீர்மானிக்கப்பட்டு விட்டது.

**இறைதூதர்களின் எண்ணிக்கை**

இறைதூதர்களின் எண்ணிக்கை மொத்தம் எவ்வளவு என்பதை குறிக்காது இருப்பதே நல்லதென நினைக்கிறோம். இருப்பினும் சில நபிமொழிகளில் இவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து இருபத்தி நான்காயிரம், ஒரு இலட்சத்து எண்பதாயிரம் மற்றும் இரண்டு இலட்சத்து இருபத்தி நான்காயிரம் எனக் கூறப்பட்டிருந்தாலும் குர்ஆன் இதைப் பற்றி சொல்லும்போது,...

ورسلا قد قصصناهم عليك من قبل ورسلا لم نقصصهم عليك

'அவ்விறைத்தூதர்களில் சிலரை குறித்து பேசப்பட்டுள்ளது. சிலரை குறித்து பேசப்படவில்லை'

எனக் கூறுவதால் குர்ஆன் அவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதைக் கூறாமல் மறைத்து வைத்திருப்பதில் காரணம் ஏதாவது இருக்கலாம் என்பதால் நாமும் அதைப் பற்றி துருவாதிருப்பதே நலம். அதேநேரம் எல்லா இறைத்தூதர்களையும் அவர்களின் தூதுத்துவத்தையும் ஒருவிசுவாசி நம்பிக்கை கொள்வது அவசியமாகும்.

**துல்கர்னைன் என்பாரின் தூதுத்துவம்**

சில அறிஞர்கள் துல்கர்னைன் என்பாரை இறைதூதரென கூறுகின்றனர். ஆயினும் பெரும்பான்மையோர் அவரை நீதமுள்ள ஒஜரு முஸ்லிம் அரசரென்றே குறிப்பிடுவதால் நாமும் இக்கருத்தே சரியானதென்று கூறுவோம். காரணம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருமை மருமகனாரான அலி ரலியல்லாஹு அன்ஹு என்பாரும் இதே கருத்தைத்தான் கொண்டுள்ளனர்.

இனி வேறுசில அறிஞர் பெருமக்கள் துல்கர்னைனை வானவர் என்பதாகக் கூறுகின்றனர். ஆனால் இக்கருத்து மனித அனுமானத்திற்கு அப்பாற்றபட்டதாகும். இன்னும் வரலாற்றாசிரியர்கள் இவருடைய பெயரில்கூட கருத்து வேறுபாட்டை கொண்டு வருகின்றனர். அவர்களில் சிலர் துல்கர்ணனை 'இஸ்கந்தர்' என்றும், வேறுசிலப் 'அப்துல்லாஹ்' என்றும், இன்னும் சிலர், 'மர்ஜபான்' 'மர்ஜரீ' 'ஹர்மன்' என்றும் குறிப்பிடுகின்றனர். இதன்றி இன்னும் பல்வேறு பெயர்களும் நூல்களில் காணப்படுகின்றன.

ரோமை சேர்ந்த இந்த சிக்கந்தர் ரூமி என்பார் 'பைலாஸூப்' என்பரின் மைந்தராகும். இவரோடிருந்து இவரை வழிநடத்தியவர் கிழ்ரு என்பவராகும். இவர் 'மாவுல் ஹயாத்தை' (ஜீவியமளிக்கும் நீரை) விரும்பினார். இருப்பினும் இறுதிவரை அதை இவர் பெற்றுக் கொள்ளவில்லை. இதில் இஸ்கந்தர் யூனானி என்பவர் வேறொரு நபராகும். அவர் யூனானை சேர்ந்த 'யாஃபிழ்' என்பாரின் மைந்தராகும். இவர் நூஹ் நபியவர்களின் பேரப்பிள்ளைகளில் ஒருவர். இவருடைய மந்திரியின் பெயர் 'அர்ஸதூ' என்பதாகும்.

வேறுசில வரலாற்றாசிரியர்கள் துல்கர்னைன், இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்ளின் காலத்தில் தோன்றியவரென்றும், நபிமொழி மற்றும் வேத விரிவுரையின் விற்பன்னரான இமாம் இப்னுல் ஹக் ரஹிமஹுல்லாஹ் என்பார், துல்கர்னைன் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குப் பின் தோன்றியவரென்றும் குறிப்பிடுகின்றனர்.

மேலும் நான்குபேர் கிழக்கிலிருந்து மேற்குவரை உலகம் முழுவதையும் வென்றவர்களென்று கூறப்படுகிறது. அவர்களில் இருவர் இஸ்லாமியர்கள். இருவர் இறைமறுப்பாளர்கள். முஸ்லிம்களில் சுலைமான் அலைஹிஸ்ஸலாமவர்களும், துல்கர்னைனும், இறைமறுப்பாளர்களில் நம்ரூதும், புக்துநஸரும் எனக் கூறுகின்றனர். இறுதிகாலத்தில் இமாம் மஹ்தி அலைஹிஸ்ஸலாம் என்பார் இப்பூமிக்கு வருகைதந்து பூமி முழுவதையும் ஆட்சி செய்வார்கள்.

சிக்கந்தருக்கு வழங்கப்படும் துல்கர்னைன் என்னும் பெயரை குறித்து பல்வேறு அறிஞர்கள் பலவகையான காரணங்களைக் கூறுகின்றனர். இதில் வஹ்ப் பின் முனப்பஹ் ரழியல்லாஹு அன்ஹு என்பார், சிக்கந்தர் இரு துருவத்தின், அதாவது கிழக்கு மேற்கு அல்லது ரோம் பாரிஸ் அல்லது ரோம் துருக்கி போன்ற நாடுகளின் சக்ரவத்தியாக இருந்ததால் துல்கர்னைன் என வழங்கப்பட்டதாகக் கூறுகிறார். வேறுசிலர், சிக்கந்தரின் தலையில் இரு கொம்புகள் இருந்ததென்றும், இன்னும் சிலர் அவருடைய தலையில் மாடுகளுக்கு இருப்பதை போன்ற இரு கொம்புகள் இருந்ததென்றும் குறிப்பிடுகின்றனர்.

ஹழ்ரத் அலி ரழியல்லாஹு அன்ஹு கூறுகின்றனர்: சிக்கந்தருக்கு ஒரு போரில் தலையில் இருகாயம் ஏற்பட்டது. அதிலிருந்து அவர் துல்கர்னைன் என அழைக்கப்படலானார் எனக் கூறுகின்றனர். அலியவர்களின் நண்பரான இப்னு கௌரிடம் ஜனங்கள் துல்கர்னைனைப் பற்றி வினவிய போது, அதற்கவர்: அவர் ஒரு நபியல்ல. மாறாக இறைவனுக்கு வழிப்படுகின்ற ஒருவராக இருந்தார். அவர் இறைபாதையில் போரிட்ட போது அவரது தலையின் வலப்பக்கம் காயமேற்பட்டு அதில் அவர் இறந்து போனார். அதன்பின் இறைவன் அவரை மீண்டும் உயிர்த்தெழச் செய்தான். மீண்டும் அவர் போரிட்;ட போது தலையின் இடப்பக்கம் காயமேற்பட்டு இறந்து போனார். இறைவன் மீண்டும் அவரை உயிர்த்தெழச் செய்தான். அதனால் அவருக்கு துல்கர்னைன் என பெயர் ஏற்பட்டதென்று கூறுகிறார். மேலும் சிலர், சிக்கந்தர் ஒருமுறை கனவொன்று கண்டபோது அக்கனவில் அவர் சூரியனை நெருங்கி அதனுடைய இரு பகுதிகளுக்கும் அரசராகி விடுகிறார். அதிலிருந்து அவருக்கு துல்கர்னைன் என பெயர் ஏற்பட்டதென்றும் கூறுகின்றனர்.

**லுக்மான் என்பாரின் நபித்துவம்**

இவர் அய்யூப் நபியவர்களின் அத்தை மகனுடைய சகோதரராவார். சில வரலாற்றாசிரியர்கள் இவரை நபியென்று கூறுகின்றனர். ஆனால் உண்மை என்னவெனில், இவர் ஒரு இறைநேசராகவும், மருத்துவராகவும் இருந்தார் என்பதே. அத்துடன் இவர் தமது வாழ்வில் ஆயிரம் இறைதூதர்களுக்கு பணிவிடை செய்து அவர்களது சிஷ்யராகும் பாக்கியத்தைப் பெற்றவர்.

**ஹழ்ரத் கிழ்ரு**

கிழ்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்களைக் குறித்து காணப்படும் பல்வேறு அறிவிப்புக்களில் இதுதான் மிகச்சரியான அறிவிப்பாகும். அதாவது, இவர் மிக நீண்ட வயதைக் கொண்ட ஒரு இறைத்தூதராகும். இப்போது இவர் இப்பூமியிலுள்ள சிருஷ்டிகளின் பார்வையிலிருந்து மறைந்திருக்கிறார். இவர் ஜீவதீர்த்தத்தை அருந்தியதால் இறுதிநாள் வரை இவர் இப்பூமியில் ஜீவித்திருப்பார். வேறுசில அறிஞர்கள் இவரை ஒரு இறைநேசர் என்று மட்டுமே அறிந்துள்ளனர். இன்னும் சிலர் இவரை ஒரு வானவர் என்பதாகவும் எண்ணுகின்றனர். ஆனால் இது தவறாகும். இஸ்லாமிய அறிஞர்களிலுள்ள (ஜும்ஹூர்கள்) என்போரின் கருத்து, இவர் இப்போதும் உயிரோடு இருக்கிறார் என்பதாகும். பின்னும் குர்ஆன் இப்பூமியில் இருக்கும்வரை இவரை மரணம் வந்து அணுகாது.

மேலும் இப்னுஹஜர் ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது நபிமொழிக்குரிய விரிவுரை நூலில் இவருடைய பெயரை 'பல்யான்' மற்றும் 'மலக்கான்' எனக் குறிப்பிடுகின்றனர். சிலர் இவரை பிர்அவ்னுடைய மைந்தர் என்றும் கூறுகின்றனர். ஆனால் இது ஆச்சரியமான வார்த்தையாகும். வேறுசிலர் இவர் மாலிக்கின் மைந்தரான இல்யாஸின் சகோதரர் என்றும் கூறுகின்றனர். வேறு சிலரிடத்தில் இவர் ஆதம் நபியவர்களின் சொந்தப்பிள்ளையென்றும் காணப்படுகிறது.

சுருங்கக்கூறின் ஞானிகள் மற்றும் அறிஞர்களின் கருத்தாய்வுப்படி கிழ்ரு என்னும் பெயருடைய இவர் இப்போதும் உயிரோடுதான் இருக்கிறார் எனத் தெரியவருகிறது. இனி நபிமொழிக் கலையின் விற்பன்னர்களில் ஒரு பிரிவை சேர்ந்த புகாரி, இப்னுல் முபாரக், இப்னுல் அரபி, இப்னுலல் ஜௌஸி ரஹிமஹுமுல்லாஹ் போன்றோர் இவர் உயிரோடு இருக்கிறார் என்பதை மறுக்கின்றனர். காரணம் இன்னோர் தமது கூற்றுக்கு ஆதாரமாக கீழ்க்காணும் ஒரு நபிமொழியை குறிப்பிடுகின்றனர். அதாவது,...

'முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இப்பூவுலகை விட்டுப் பிரியும்போது இப்பூமியில் எந்தவொரு ஜீவராசியும் நூறு ஆண்டுகளுக்கு மேல் ஜீவித்திருக்காது எனக் கூறினர்' என்பதை ஆதாரமாக்குகின்றனர்.

ஆனால் இந்த நபிமொழியின் கருத்தை விளங்கிக் கொள்ள வலிந்துரையும் விளக்கமும் தேவைப்படுவதால் வெறுமனே நபிமொழியுடைய வெளிப்படையான வாக்கியத்தை மட்டும் கருத்தில் கொண்டு முடிவெடுத்தல் சரியாகாது.

மேலும் கிழ்ரு நபி என்னும் இவர், எண்ணற்ற இறை நேசர்களை வந்து சந்தித்துவிட்டுச் சென்ற சம்பவங்கள் வரலாற்று ஏடுகளில் கணக்கின்றி காணப்படுகின்றன. அத்துடன் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்;களையும் இவர் வந்து சந்தித்துள்ளார். அது மட்டுமின்றி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மறைவுக்குப் பின் அவர்களின் தோழர்களை வந்து சந்தித்து இரங்கலும் தெரிவித்துள்ளார். அதேநேரம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின்,....

لو كان خضر احيا لزارني

'ஒருவேளை கிழ்ரு உயிரோடு இருந்தால் நம்மை வந்து சந்தித்திருப்பார்' என்னும் இவ்வாக்கியம் கிழ்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வந்து சந்திப்பதற்கு முன்னர் சொல்லப்பட்டதாகும். இதுபோன்ற சந்திப்புகள் அறிமுகத்திற்குரிய வழக்கங்களில் நின்றுமுள்ள ஒன்றாகும். அத்துடன் கிழ்ரு நபியவர்கள் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹிஸ்ஸல்லம் அவர்களைக் கொண்டு பல்வேறு நபிமொழிகளையும் அறிவித்துள்ளார். அந்த நபிமொழிகளை ஞானிகளில் பலர் கிழ்ரு அலைஹிஸ்ஸலாம் அவர்களிடமிருந்து கேட்டுமுள்ளனர்.

**பெண்களின் தூதுத்துவம்**

وما ارسلنا من قبلك الا رجالا نوحي اليهم

'இன்னும் உமக்குமுன் நாம் எத்தனை தூதர்களை (இவ்வுலகுக்கு) அனுப்பி அவர்களுக்கு வஹி (தெய்வ அறிவிப்பை) அறிவித்துக் கொண்டிருந்தோமோ அவர்களனைவரும் ஆண்களாகவே இருந்தனர்'

என்பதாக குர்ஆனில் கூறப்படுவதால், ஒருவேளை வேதத்தில் நாம் முன்னால் குறிப்பிட்டுக் காட்டியுள்ள பெண்களின் மீதும் தெய்வ அறிவிப்பு இறங்கிக் கொண்டிருந்தது என்னும் வார்த்தையானது இறைதூதர்களோடு இணைத்துப் பேசப்பட்ட நிலையில் இறக்கப்பட்ட வசனங்களாதலால் அவ்வார்த்தைகள் அவர்கள் இறைதூதர்கள்தான் என்பதற்கு ஆதாரமாகாது. பின்னும் அந்த இடங்களில் குறிப்பிடப்படும் தெய்வ அறிவிப்பு என்பதற்கு இல்ஹாம் (உதிப்பு)அல்லது இஃலாம்(செய்தியறிவித்தல்) என்பதே பொருளாகும். இதுபற்றி இறைவன் தனது வேதத்தில்,....

واوحي ربك الي النحل

'உமதிறைவன் தேனீக்களுக்கு வஹி (தெய்வ அறிவிப்பை) அனுப்பினான்'

எனக் கூறுவதால் வஹி (தெய்வ அறிவிப்பு) என்பதற்கு உதிப்பு, செய்தியறிவித்தல் என்னும் அர்த்தமும் உண்டு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இனி இறைதூதர்களோடு அப்பெண்மணிகள் இணைத்துப் பேசப்பட்டதற்கு காரணம் அவர்களின் மகத்துவத்தையும் உயர் நிலையையும் எடுத்துக் காட்டுவதற்காகவே அன்றி அவர்கள் இறைதூதர்கள் என்பதற்காக அல்ல.

**இறைதூதர்களின் பரிசுத்த நிலை**

அனைத்து இறைதூதர்களும் பாவம் செய்வதிலிருந்தும் குற்றமிழைப்பதிலிருந்தும் பாதுகாப்புக்குரியவர்களாகி தூய்மைப்படுத்தப்பட்டவர்கள். அவர்கள் உண்மையாளர்களாகவும் இறைதரப்பிலிருந்து அவனது கட்டளைகளை கொண்டு வந்து சேர்க்கிறவர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் எப்போதுமே தமது தூதுத்துவத்திற்கு மாறாக செயல்படமாட்டார்கள். அவர்கள் உண்மையை மட்டுமே பேசினார்கள். அவர்கள் எதை கொண்டு வந்தார்களோ அவைகளை அவர்களது இறைவனுடைய தரப்பிலிருந்து கொண்டு வந்தார்கள். அவர்கள் கூடும் கூடாதென்பதை பூரணமாக நிறைவேற்றினார்கள். அவர்கள் தமது தூதுத்துவத்தை அற்புதங்களைக் கொண்டு ஆதாரப்படுத்தினார்கள். இன்னும் அவர்கள் எதை சொன்னார்களோ அவையனைத்தும் இறைவனுடைய தரப்பிலிருந்து சொல்லப்பட்டவைகளாக இருந்தன. இதுபற்றி வேதத்தில்....

ماعلى الرسول الا البلاغ

'இறைதூதர்களுக்குரிய பொறுப்பு என்பதெல்லாம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதை ஒப்படைப்பதை அன்றி வேறல்ல' எனக் கூறப்படுவதால் ஒருவேளை அவர்கள் பொய் சொல்வார்களாயின் அவர்களை இப்பூமிக்கு அனுப்பியதன் நோக்கமே சிதைந்து போய்விடும். அவ்வாறின்றி அவர்கள் தமக்குத்தாமே பாவம் செய்து கொள்வார்களாயின் இறைவனுடைய சிருஷ்டிப் பொருட்கள் அவர்களை வெறுக்கத் துவங்கிவிடும். பின்னும் அவர்களுடையட

வழிகாட்டலையும், உபதேசத்தையும் தாங்கிய ஊற்றுக்கள் தானாகவே அடைபட்டுப் போய்விடும். ஆதலால் இறைதூதர்கள் எனப்படுவோர் பொய் மற்றும் பாவம் போன்றவற்றை விட்டும் பாதுகாக்கப்பட்டவர்கள். எனவே அவர்களில் தெரிந்த நிலையில் ஒருபாவம் என்பது அறவே நிகழாது. இது போன்றே மறதியிலும் அவர்களில் ஒரு சிறுபாவம் கூட நிகழாது.

இதில் வேறு சில அறிஞர்கள், இறைதூதர்களில் மறதியுடைய நிலையில் பெரும்பாவமும், தெரிந்த நிலையில் சிறுபாவமும் நிகழுதல் ஆகுமானதே எனக் கூறுகின்றனர். இருப்பினும் எந்தப் பாவத்தைக் கொண்டு மக்கள் மனதில் வெறுப்புணர்வு தோன்றுமோ, எந்தக்காரியம் அவர்களின் மகத்துவத்தை சிதைக்குமோ அது எந்த நிலையிலும் அவர்களில் நிகழுதல் என்பதில் அறவே சாத்தியமில்லை. இன்னும் அவர்கள் ஒரு எள் முனையளவுக்குக் கூட குற்றமிழைக்க மாட்டார்கள். மேலும் கீழினும் கீழான எந்தப் பொருளின் மீதும் அவர்களின் உயர்ந்த எண்ணம் மாறாது. அத்துடன் அவர்களின் செயல்பாடுகளில் கூடுதல் என்பதோ குறைவென்பதோ எப்போதும் நிகழாது.

**இறைதூதர்களின் மறதிகள்**

ஜும்ஹூர்கள் எனப்படும் அறிஞர்களின் ஒருங்கிணைந்த கருத்துயாதெனில், இறைதூதர்களில் தெரிந்தோ அல்லது மறதியின் காரணமாகவோ ஒருபோதும் பெரும்பாவமோ அல்லது சிறுபாவமோ நிகழாது என்பதாம். காரணம் இது அவர்களின் மகத்துவத்திற்கும் அந்தஸ்திற்கும் அணி சேர்க்காது எனக் கூறுகின்றனர்.

**இறைதூதர்களின் நித்தியமான ஜீவியம்**

இறைதூதர்கள் எப்போதும் எக்காராணத்திற்காகவும் அழிந்து போக மாட்டார்கள். இறைவன் அவர்களுக்கு எப்படிப்பட்ட அந்தஸ்த்தையும் உயர் நிலையையும் அவர்களது தூதுத்துவத்தில் அருள் புரிந்துள்ளானோ அவை அவர்களிடமிருந்து எக்காரணத்திற்காகவும் பறிக்கப்படுவதில்லை. அவர்களின் தூதுத்துவம் அவர்களது இறப்பிற்குப் பின்னரும் அவர்களிடம் நிரந்தரமாக இருக்கும். இருப்பினம் இவ்விசயத்தில் நாம் எந்த அளவு பேசுவோம் எனில் அவர்களுக்கு மரணமே கிடையாது என்பதாம்.

இன்னும் அவர்களுக்கு ஒரேயொரு மரணம்தான். அது ஒருமுறை வந்து விட்டது. அதன்பின் அவர்களுடைய ஆன்மா அவர்களது தேகத்திற்கு திரும்பவும் மீட்டப்பட்டு விட்டது. இந்நிலையில் பூமியில் அவர்களுக்கு எப்படிப்பட்ட வாழ்க்கை வழங்கப்பட்டிருந்ததோ அதே போன்றதொரு வாழ்க்கை பர்ஸக் என்னும் உலகிலும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இறைதூதர்களின் ஜீவியம் அறப்போரில் வீரமரணம் எய்திய பிராணத் தியாகிகளின் ஜீவியத்தை விட மிகவும் உன்னதமான ஒன்றாகும். ஏனெனில் பிராணத் தியாகிகளின் மரணம் என்பது மறைவானதும் கற்பிக்கப்பட்ட ஒன்றுமாகும்.

**ஷரீஅத்தும் (வாழ்வியலும்) தூதுத்துவமும்**

ஒரு இறைதூதரால் ஏற்படுத்தப்படும் வாழ்வியலுக்குரிய நடைமுறைச் சட்டம் மாற்றப்பட்டு விடுதல் என்பதன் கருத்து, ஒரு இறைதூதரின் தூதுத்துவமே மாறிப்போய் விடும் என்பதல்ல. ஆனால் அதேநேரம் இறைநேசர்கள் தமது நேசத்துவம் தம்மை விட்டும் பறிபோய் விடக்கூடாது என்னும் அச்சத்திலும், தங்களின் இறுதிமுடிவு நலவானதாக அமைய வேண்டுமென்னும் கவலையிலும் இருப்பர். இதில் அவர்களின் இறுதி முடிவு அவர்களின் இறைநம்பிக்கையான விசுவாசத்தோடு நிகழுமாயின் அவர்கள் இறைநேசராக கணிக்கப்படுவர். அந்நிலையில் அவர்களின் மரணம் அவர்களுக்கு உறக்கத்தைப் போல் இருக்கும்.

**இறந்தோரிடம் உதவி தேடுதல்**

இறந்தோரிடம் உதவி தேடுதல் சம்பந்தமான பிரச்சனையில் மார்க்கத்தின் சட்ட விற்பன்னர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவர்கள் இறைதூதர்களின்றி உள்ள மற்ற மண்ணறைவாசிகளின் தரிசிப்பு வெறும் படிப்பினையும் இறைநினைவூட்டலுமேயாகும் எனக் கூறுகின்றனர். இருப்பினும் இறந்தோரை தரிசிப்பதில் இறந்து போய்விட்ட அவர்களுக்கு கண்டிப்பாக பிரயோஜனம் கிடைக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இன்னும் அவர்களுக்காக கேட்கப்படும் பாவமன்னிப்புக்குரிய பிரார்த்தனைகள் அவர்களுக்கு வெகுவான பலனையும் பெற்றுத் தருகின்றன. இவ்விஷயத்தில் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவிலுள்ள ஜன்னத்துல் பகீ என்னும் மையவாடிக்கு சென்று அங்கே நல்லடக்கம் செய்யப்பட்டிருந்தோரை தரிசித்தனர் என்பதற்குரிய அழுத்தமான ஆதாரம் நபி மொழிகளை கொண்டு உறுதிப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது.

ஞானவான்கள் கூறுகின்றனர். சில இறைநேசர்களுக்கு 'தஸர்ருப்' என்னும் போக்குவரத்தும், ஒன்றிலிருந்து இன்னொன்றாக மாறுவதும், அவர்களது இறப்புக்குப் பின்னுள்ள பர்ஸக் என்னும் உலகிலும் அவர்களுக்கு வாய்க்கின்றது. அதை கொண்டு அவர்களின் பரிசுத்தமான ஆன்மா உதவி ஒத்தாசை போன்றவைகளை செய்கின்றன. மேலும் இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் என்பார், இப்பூமியில் யார்யார் மற்றவர்களுக்கு பிரயோஜனமளித்துக் கொண்டிருந்தார்களோ அவர்கள் தமது இறப்புக்குப் பின்னரும் பிரயோஜனமளிக்கக் கூடியவர்களாகவே இருப்பார்கள். ஏனெனில் இறப்புக்குப் பின் ஆன்மா அழியாது இருக்கும் என்பது நபிமொழிகளைக் கொண்டும் அறிஞர் பெருமக்களின் ஒருங்கிணைந்த கருத்தைக் கொண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறுகிறார். ஆம். ஆன்மா ஜீவித்திருக்கும்போதும் சரி. இறந்து போன பின்னரும் சரி. எல்லா நிலைகளிலும் அது செயலாற்றிக் கொண்டுதானிருக்கும். இந்நிலையில் தேகத்திற்கு தஸர்ருபி (போக்குவரத்தி)ல் எந்தத் தொடர்பும் கிடையாது. மேலும் அதை உண்மையில் இயக்குபவன் இறைவனையன்றி வேறுயாருமில்லை.

**இமாம் அஹ்மத் ரஜா என்பாரின் கருத்து**

இனி உதவி செய்தல் என்பது சர்வ அதிகாரங்களையும் தனக்குள் கொண்டுள்ள சர்வ சக்தனாகிய எவரிடத்திலும் எந்தத் தேவையுமில்லாத பரம்பொருளாகிய இறைவன்

ஒருவனுக்கு மட்டுமே உரியதோர் தனிப் பண்பாகும். இந்நிலையில் அவனையன்றி அவனுடைய சிருஷ்டிப் பொருட்களில் ஏதேனுமொன்று தனக்கு சுயமாக உதவுகிறது என்பதாக எவரேனும் நம்புவாராயின் அவர் இறைவனுக்கு இணை கற்பித்தவராகி விடுவார். இனி இப்படிப்பட்ட நம்பிக்கையை கொண்டு எந்த முஸ்லிமும் யாரிடத்திலும் உதவி தேடுவதில்லை. அதற்கு மாறாக ஒரு சிருஷ்டி தனக்கு இறைவனைக் கொண்டுதான் உதவுகிறது என எண்ணி, அந்த சிருஷ்டியை தனக்கும் தனதிறைவனுக்குமிடையே ஒரு வஸீலாவாக (இடைப்பொருளாக)த்தான் நிறுத்துகிறார். இதுதான் உண்மையில் இன்றைக்கும் நடந்து வருகிறது. இவ்வாறு உதவி தேட இறைவனும் தனது வேதத்தில் அவனது அடியார்களுக்கு கட்டளையும் இடுகிறான். அதாவது,...

وابتغوا اليه الوسيلة

'மேலும் இறைவனளவில் ஒரு வஸீலாவை (இடைப்பொருளை) தேடுங்கள்'

என்று கூறுவதால் இங்கே இறைவனல்லாதவற்றிடம் உதவி தேடப்பட்டது, 'உன்னிடமே நாங்கள் உதவி தேடுகிறோம்' என்று கூறும் வசனத்திற்கு மாற்றமாகாது. எவ்வாறு இறைவன் யாரை கொண்டும் தோற்றுவிக்கப்படாது தன்னில் தானாகத் தோன்றி மற்றவைகளெல்லாம் அவனைக் கொண்டு தோற்றமாகியுள்ளன எனக் கூறுவது இணை வைத்ததாகாதோ அவ்வாறே அவனைக் கொண்டு அவனது சிருஷ்டிப் பொருட்களிடம் உதவி தேடுவதும் இணை வைத்தலாகாது.

மேலும் இஸ்லாமிய மார்;க்கக் கொள்கையில் சுயஞானம் என்பது இறைவனையன்றி வேறு யாருக்கும் அறவே கிடையாது. அதேநேரம் அந்த ஞானத்தை தனது படைப்புக்களில், தான் விரும்பும் ஒருவருக்கு உதிப்பின் மூலம் போதிப்பதும், வழங்குவதும் இறைவன்தான். இந்நிலையில் ஒரு படைப்பை பார்த்து, அறிஞன் என்று சொல்வதும் அந்த அறிஞனிடம் ஞானத்தை கற்றுக் கொள்வதும் எப்படி இணையாகும்? அதாவது இறைவனைக் கொண்டு அவர் தனக்கு ஞானத்தைக் கற்பிக்கிறார் என நம்புகிறவழைர அது இணையாகாது. அத்துடன் இறைவனும் தனது வேதத்தில் தன்னடியார்களை 'அறிந்தவர்' என்னும் 'அறிஞன்' என்றும் கூறுகிறார். இதேபோல முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறித்தும்,...

يعلمهم الكتاب والحكمة

'இந்த நபி வேதத்தின் நுணுக்கங்களையும் ஞானங்களையும் கற்பிக்கிறார்'

என்றும் கூறுகிறான். இதுதான் உதவி தேடுதல், முறையீடு செய்தல் என்பதற்குரிய கருத்தாகும். இதில் உதவி தேடுபவர் யாரிடம் உதவி தேடுகிறாரோ அவர் தனக்கு சுயமாக எதையும்

கொடுக்கமாட்டார். அவருக்கென்று எந்தவொரு சுயமும் கிடையாதென்றும் இறைவனைக் கொண்டுதான் அவர் தனக்கு தருகிறாரென்றும் நம்புதல் அவசியமாகும்.

இனி இந்த வஸீலா (இடைப் பொருள்) என்பதும் 'இஸ்த்திஆனத்' என்பதும் இறைவனல்லாத அவனது படைப்புக்களுக்குரிய ஒன்றாகும். அதேநேரம் இறைவன் 'வஸீலா' 'தவஸ்ஸுல்' 'தவஸ்ஸுத்' என்னும் இடைப் பொருளாக ஆக்கப்படும் நிலைகளை விட்டெல்லாம் மகா தூய்மையானவன். அவனுக்கு மேலே யார் இருக்கிறார்? இருந்தாலல்லவா அதனை இடைப்பொருளாக ஆக்க முடியும்? இன்னும் அவனைத் தவிர தேவைகளை நிறைவேற்றுபவர் வேறுயார் இருக்கிறார்? அவரை தனக்கும் இறைவனுக்கும் இடையில் இடைப்பொருளாகக் கொண்டு வந்து நிறுத்துவதற்கு? ஆதலால் வஸீலா என்பது இறைவனை தரந்தாழ்த்துகின்ற, களங்கப்படுத்துகின்ற ஒன்றாகும். அதனை அவனுக்கு உரியதாக ஆக்க முடியாது. இது பற்றி ஒரு நபிமொழியில்...

ஒரு காட்டரபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வருகைதந்து, நான் தங்களை இறைவனிடம் எனக்குப் பரிந்துரை செய்பவராக முன்னிறுத்துகிறேன். இவ்வாறே இறைவனை தங்களிடம் எனக்கு பரிந்துரை செய்பவனாக கொண்டு வருகிறேன் என்று சொல்ல, இது அண்ணலாருக்கு மிகுந்த வேதனையைத் தந்தது. வெகுநேரம் வரை சுப்ஹானல்லாஹ்! சுப்ஹானல்லாஹ்! (இறைவன் மகாத் தூய்மையானவன்) என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். பின்பு அவரை நோக்கி,...

ويحك انه لا يستشفع بالله على احد شان الله اعظم من ذالك

'அறிவற்றவரே! இறைவனை யாருக்கும் பரிந்துரை செய்பவனாக ஆக்கப்படுவதில்லை. இறைவனது மகத்துவம் அதைவிட மிகப்பெரியது என்று கூறினர்'.

நூல்: அபீதாவூத், அறிவிப்பாளர்: ஸுபைர் பின் முத்இம்.

ஆதலால் இஸ்லாமியர்கள் இறைத்தூதர்களிடமும் இறைநேசர்களிடமும் இம்மாதிரியான உதவியைத்தான் தேடுகின்றனர். இதையே இறைவனிடம் கேட்டால் இதன்மீது இறைவனும் அவனது தூதரும் கோபமடைந்து வெறுப்படைகின்றனர். ஏனெனில் இது இறைவனை அவமதிக்கின்ற செயலாகும். அத்துடன் 'இஸ்த்திஆனத்தை' கருத்தில் கொண்டு ஒருவர் இறைவனிடம் கேட்பாராயின் அவர் இறைமறுப்பாள(காபி)ராகவே ஆகிவிடுவார். இந்நிலையில் இந்த வஹ்ஹாபிகளின் (இஸ்லாமியர்களிலுள்ள ஒரு நவீனக் கூட்டத்தார்) அறிவீனத்தை நாம் என்னவென்று சொல்வது? இவர்களுக்கு இறைவன் மீதும் அச்சமில்லை. அவனது நபிகள் மீதும் மரியாதையில்லை. தங்களின் இறைவிசுவாசத்தைப் பற்றியும் இவர்களுக்கு கவலையில்லை. இவர்கள் கொஞ்சங்கூட விளக்கமின்றி இந்த இஸ்த்திஆனத் என்னும் இடைப்பொருளை 'இய்யாக நஸ்த்தஈன்'(உன்னிடமே உதவி தேடுகிறோம்) என்னும் வேத வசனத்தோடு இணைத்து இறைவனுக்கு கொஞ்சங்கூட பொருந்தாத ஒன்றை இறைவனுக்கு மட்டுமே உரிய ஒன்றாக ஆக்கிவிட்டனர். ஒரு மூடன்சொன்னான்...

' எது அது? இறைவனிடம் இல்லாதது? அதை நீங்கள் இறைநேசர்களிடம் கேட்கிறீர்கள்?'

அதற்கு நாம் இப்படிப் பதில் சொன்னோம்.

'இடைப் பொருளாக ஆக்க முடியாது இறைவனை. அதனால்தான் கேட்கிறோம் இறை நேசர்களிடம்'

மேலும் இங்கே இறைவனை ஒரு இடைப்பொருளாக ஆக்கி தனக்கும் இன்னொன்றுக்கும் மத்தியில் நிறுத்தப்படும் போது தனக்கு மேலே இறைவன் இருப்பான். அவனுக்கும் மேலே நாம் யாரிடம் உதவி தேடுகிறோமோ அந்தப் பொருள் இருக்கும். இது இவைனை களங்கப்படுத்துகிற ஒரு செயலா இல்லையா என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். அதனால்தான் இந்த இடைப்பொருளாக்குதல் என்பதை இறைவனுக்கு தரக்கூடாதென நாம் சொல்வதோடு இறைதூதர்களையும் இறைநேசர்களையும் அவ்விடைப் பொருளக்குரியவர்களாக கொண்டு வருகிறோம். இவர்கள்தான் இறைவனுக்கும் நமக்குமிடையே இடைப்பொருளாக நின்று நமது தேவைகளனைத்தையும் இறைவனைக் கொண்டு நமக்கு நிறைவேற்றித் தருகின்றனர். இன்னும் அறிவற்றுப் போய் இறைவனை இடைப்பொருளாக ஆக்குவோர்க்கு இறைவனே எப்படிப் பதில் தருகிறான் என்பதைப் பாருங்கள்,...

ولو انهم اذ ظلموا انفسهم جاءوك فاستغفروا الله واستغفر لهم الرسول لوجدوا الله توابا رحيما

'இன்னும் தங்களின் ஆன்மாவுக்கு தீங்கிழைத்துக் கொண்டவர்களாக அவர்கள் (நபியாகிய) உம்மிடம் வந்தால் அவர்கள் இறைவனிடம் பாவமன்னிப்புக் கோருவதோடு நபியாகிய நீரும் அவர்களுக்காக பரிந்துரைக்க வேண்டும். அவ்வாறாயின் அவர்கள் தமது இறைவனை மன்னிப்போனாகவும் கிருபையுடையவனாகவும் பெற்றுக் கொள்வார்கள்'

ஒருவன் ஒரு குற்றத்தையோ அல்லது பாவத்தையோ செய்து விட்டால் அதை இறைவனே மன்னித்துவிட முடியாதா? முடியும் எனில், எதற்காக நபியாகிய உம்மிடம் அவர்கள் வரவேண்டும். அவர்களுக்காக நீரும் பரிந்துரைக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் தமது இறைவனை மன்னிக்கிறவனாகவும் கிருபையுடையோனாகவும் பெற்றுக் கொள்ள முடியுமென்று சொல்கிறான்? ஆக குர்ஆன் கூறும் இதைத்தானே நாமும் சொல்கிறோம். ஆனால் இந்த வஹ்ஹாபிகளுக்கு அறிவென்பது அறவே கிடையாது. இருந்திருக்குமாயின் அவர்கள் 'இய்யாக நஸ்தயீன்' என்னும் வசனத்தை வைத்துக் கொண்டு வாதம் செய்து கொண்டிருக்க மாட்டார்கள். இன்னும் இந்த வசனத்தில் இறைவனைத் தவிரவுள்ள இறைதூதர்கள் இறைநேசர்கள் இறைநேசர்கள் போன்றோரிடம் மட்டும்தான் உதவி தேடுவது இணையா? அத்துடன் இவர்கள் மட்டும்தான் இறைவனல்லாதவர்களா? அவ்வாறாயின் உலகிலுள்ள மற்ற பொருட்களையெல்லாம் இவர்கள் இறைவனென்று சொல்கிறார்களா? அல்லது இய்யாக நஸ்தயீன் என்னும் வசனம் இறைதூதர்களையும் இறைநேசர்களையும் மட்டும்தான் கட்டுப்படுத்துகிறதா? அதாவது அவர்களிடம் மட்டும்தான் உதவி தேடுவது

இணைவைப்பதற்குரிய குற்றமாகும். மற்றவைகளிடமெல்லாம் உதவி தேடுவது இணைவைப்பதற்குரிய குற்றமாகாது என்று சொல்லலாமா?

இல்லையில்லை! இறைவனையன்றி உள்ள எதுவாக இருந்தாலும் அதனிடம் உதவி தேடுவதை பொதுவாகவே இந்த வசனம் தடை செய்கிறதெனக் கூறப்பட்டால் இறைத்தூதர்கள்,இறைநேசர்கள் மட்டுமல்ல. இறைவனல்லாத எந்தவொரு சிருஷ்டிகளிடமும் உதவி தேடக்கூடாதென்றுதான் சொல்ல வேண்டும். இனி இந்த வசனத்திற்கு இவ்வாறு அர்த்தம் கொடுக்கப்படுமாயின் இப்பூமியிலுள்ள எந்தவொரு சிருஷ்டியும் இணை என்னும் குற்றத்தை விட்டும் தப்ப முடியாது என்பதோடு முழு உலகத்திலும் இணையைத் தவிர வேறு எதுவுமே இருக்காது. அது மனிதனாக இருந்தாலும் சரி. அல்லது புற்பூண்டுகளாக இருந்தாலும் சரி. அல்லது உயிரோடுள்ளதாகவோ இறந்து போனதாகவோ இருந்தாலும் சரி. அல்லது ஒரு பண்பாகவோ, செயலாகவோ, நிலைமையாகவோ எதுவாக இருந்தாலும் சரி. ஏனெனில் இவையனைத்துமே இறைவனல்லாதவை தான். அத்துடன் இந்த வசனத்திற்கு இப்படியொரு தவறான கருத்தை இஸ்லாமிய அறிஞர்களிலுள்ள சிலரும் கூறிவருவதுதான் வேதனைக்குரிய ஒன்றாகும். அவ்வாறாயின் இந்த வசனத்திற்குரிய சரியான விளக்கம் என்னவென்று கேட்கப்பட்டால் அதை இறைவனே தனது வேதத்தில் நமக்கு இப்படிச் சொல்லித் தருகிறான்,....

واستعينوا باصبر والصلوة

'பொறுமையை கொண்டும் தொழுகையை கொண்டும் உதவி தேடுங்கள்'

இந்த வசனத்தில் சுட்டிக் காட்டப்படும் பொறுமை என்பது இறைவனா? அல்லது தொழுகை என்னும் வணக்கம் தான் இறைவனா? பின் ஏன் இவ்விரண்டை கொண்டும் உதவி தேடுங்களென்று இறைவன் கட்டளையிடுகிறான்? இன்னொரு வசனத்தையும் பாருங்கள்,...

وتعاونوا على البر والتقوي

'நீங்கள் ஒருவருக்கொருவர் நன்மையை கொண்டும் பயபக்தியைக் கொண்டும் உதவிக் கொள்ளுங்கள்'

என்றும் ஆணையிடுகிறான். மேலும் பொதுவாகவே இறைவனல்லாத எந்தவொரு சிருஷ்டிப் பொருளிடத்திலும் உதவி தேடக் கூடாதென இய்யாக நஸ்தஈன் என்னும் வசனம் கூறுகிறதென்பதாக வைத்துக் கொண்டால் மேற்கண்ட இரு வசனத்திற்கும் என்ன அர்த்தம்? மேலும் உதவக்கூடிய ஒன்றிடம் உதவி தேடுவதால் என்ன தவறு நேர்ந்து விடும்? இந்நிலையில் இறைவனல்லாத படைப்புக்களிடம் உதவி தேடலாம் என்பதற்குரிய கணக்கில்லாத நபிமொழிகள் நமக்கு மிகத் தெளிவாக கட்டளையிடுவதை நாம் பார்க்கலாம். அதாவது, காலை வணக்கத்தை கொண்டு உதவி தேடுங்கள் என்றும், கல்வியை எழுதுவதைக் கொண்டும் உதவி தேடுங்கள் என்றும், ஸஹ்ருடைய உணவைக் கொண்டு உதவி தேடுங்கள்

என்றும், பெண்களை அவர்களது உறைவிடங்களில் ஆடையற்றவர்களாக வைக்காதிருக்க உதவி தேடுங்கள் என்றும், உதவி கேட்போரிடம் செய்யும் உதவியை மறைப்பதற்காக உதவி தேடுங்கள் என்றும் எத்தனை வகையாக நபிமொழிகள் பேசுகின்றன? இவைகளெல்லாம் இறைவனா என்ன? பிறகு ஏன் இவைகளிடமெல்லாம் உதவி தேடுங்களென்று முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நமக்கு ஆணையிட்டனர்? இந்த நபிமொழிகளெல்லாம் உங்களுக்கு நினைவில்லையெனில் நாம் சொல்லித் தருகிறோம். கேளுங்கள்.

عن ابي هريرة رضي الله عنه عن النبي صلى الله عليه وسلم استعينوا بالغدوة والروحة وشيئ من الدلجة

'முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக ஹழ்ரத் அபீஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழர் அறிவிக்கின்றனர். நீங்கள் காலை நேரத்தைக் கொண்டும், தென்றலைக் கொண்டும், இரவின் கடைசிப் பகுதியைக் கொண்டும் உதவி தேடுங்கள்'

நூல்: நஸாயி, திர்மிதி, புகாரி

عن ابن عباس رضي الله عنه عن النبي صلى الله عليه وسلم استعن بيمينك على حفظلك

'முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழர் அறிவிக்கின்றனர். உங்களின் வலது கரத்தைக் கொண்டு நீங்கள் பாதுகாக்கப்படுவதற்காக உதவி தேடுங்கள்' நூல்: திர்மிதி

عن النبي صلى الله عليه وسلم استعينوا بطعام السحر على صيام النهار وبالفيلولة على قيام الليل

'முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இயம்பினர். ஸஹ்ருடைய உணவைக் கொண்டும், பகலின் நோன்பைக் கொண்டும், இரவை நிலைநிறுத்துவதில் சோர்வடைவதைக் கொண்டும் உதவி தேடுங்கள்'

- இப்னு மாஜா, ஹாகிம், தப்ரானி, பைஹகி

عن عبد الله بن عمر رضي الله عنهما عن النبي صلي الله عليه وسلم استعينوا على الرزق بالصدقة

'முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக ஹழ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழர் அறிவிக்கின்றனர். தர்மத்தை கொண்டு உணவின் மீது உதவி தேடுங்கள்'

நூல்: தைலமி, முஸ்னதுல் பிர்தௌஸ்

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்ள் நவின்றதாக ஹழ்ரத் மஆத் பின் ஜபல் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழர் ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரைக் கொண்டும் அவர் ஹழ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரைக் கொண்டும் அறிவிக்கின்றனர். தேவைகளை மறைப்பதன் பேரில் வெற்றி பெறுவதைக் கொண்டு உதவி தேடுங்கள்' நூல்: தப்ரானி, ஹில்யா.

மேற்கண்ட பத்து நபிமொழிகளும் ஒருவர் தமது செயல்பாடுகளை கொண்டு உதவி தேட வேண்டும் என்பதற்காக நபியவர்களை கொண்டு கட்டளையிடப்பட்டவைகளாகும். இனி அடுத்துவரும் இருபது நபிமொழிகள் மனிதர்களை கொண்டு உதவி தேடவேண்டும் என்பதற்காக சொல்லப்பட்டவைகள். அவைகளை நாம் கீழே உங்களின் பார்வைக்கு தருகிறோம். ஏனெனில் முப்பது என்பது ஒரு நிரப்பமான எண்ணிக்கையாகும்.

அஹ்மத், அபூதாவூத், இப்னுமாஜா போன்றோர், சரியான வரிசைத் தொடரைக் கொண்டு அன்னை ஆயிஷா ரலியல்லலாஹு அன்ஹா என்பாரின் அறிவிப்பின் மூலம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக அறிவிக்கின்றனர்.

انا لا نستعين بمشرك

'நாங்கள் இணைவைப்போரிடம் உதவி தேட மாட்டோம்'

இந்த நபிமொழியில் ஒருவேளை இஸ்லாமியர்களிடம் உதவி தேடுவது தடை செய்யப்பட்ட ஒன்றாக இருந்திருந்தால் இணை வைப்போரை தனியாக பிரித்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லையே! இன்னும் இவ்வாறே உமர் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழர், தமது கிறிஸ்துவ அடிமையான வஸீக் என்பாரை நோக்கி,...

اسلم استعن بك على امانة المسلمين

'நீர் முஸ்லிமாகி விடும். நான் முஸ்லிம்களது அமானிதத்தின் பேரில் உன்னிடம் உதவி தேடுவேன்' என்று சொல்ல, அதனை அவர் ஏற்க மறுக்கவே, அவ்வாறாயின் நாம் இறை மறுப்பாள(காபி)ர்களிடம் உதவி தேடமாட்டோம் என்றனர்.

அடுத்து இமாம் புகாரி ரலியல்லாஹு அன்ஹு என்பார், தமது 'தாரீக்' என்னும் நூலில் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக ஹபீப் பின் யஸாப் ரஹிமஹுல்லாஹ் என்பாரைக் கொண்டு அறிவிக்கின்றனர்.

انا لا نستعين بالمشركين على المشركين

'நாம் இணை வைப்போரிடம் இணை வைப்போரை கொண்டு உதவி தேடமாட்டோம்' நூல்: அஹ்மத்

عن انس رضي الله عنه ان النبي صلى الله عليه وسلم اتاه رعل وذكوان وعصية وبنولحيان فزعموا انهم قد اسلموا واستمدوه

على قومهم فامدهم النبي صلى الله عليه وسلم

'சில அரபுக் கோத்திரத்தை சேர்ந்தவர்கள் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வருகை தந்து உதவி கேட்க, நபியவர்கள் உதவி செய்தனர்.' இதனை அனஸ் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழர் அறிவிக்கின்றனர்.

அடுத்து முஸ்லிம், அபீதாவூத், இப்னுமாஜா, தப்ரானி போன்றோர், ரபீஆ பின் க.்.ப் ரலியல்லாஹு அன்ஹு எ;ன்னும் நபித்தோழரை கொண்டு அறிவிக்கின்றனர்.

قال كنت ابيت مع رسول الله صلى الله عليه وسلم فاتيته بوضوئه وحاجته فقال سل. الطبراني فقال يوما يا ربيعة سلني

فاعطيك رجعنا الي لفظ مسلم قال فقلت اسئلك مرافقتك في الجنة قال اوغير ذالك قلت هو ذاك قال فاعني على نفسك بكثرة

السجود

'முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றனர். கேள். என்ன கேட்கிறீரோ அதை நாம் உமக்கு அருள் புரிவோம் என்றனர். அதறகவர், எனக்கு சுவர்க்கத்தில் தங்களின் தோழமை கிடைக்க வேண்டுமென்று சொல்ல, அதற்கு நபியவர்கள்ளூ இன்னும் ஏதாவது கேள் என்று சொல்ல, அதற்கவர்ளூ எனது விருப்பம் இது மட்டும்தானெனச் சொன்னார். அதை கேட்ட நபியவர்கள், உமது ஆன்மாவின் மீது அதிகமான சிரவணக்கத்தை கொண்டு எனக்கு நீர் உதவி செய்வீராக என்றனர்'

பார்த்தீர்களா! மேற்கண்ட நபிமொழியின் ஒவ்வொரு வாக்கியமும் இப்பிரிவினைவாதிகளின் தவறான கொள்கையை எப்படியெல்லாம் உடைத்தெறிகிறது? அது மட்டுமா! நபியவர்கள் அத்தோழரிடம், 'அஇன்னீ எனக் கூறுகின்றனர். அதாவது எனக்கு உதவி செய் என்பது இந்த வாக்கியத்திற்குரிய அர்த்தமாகும். இதைத்தான் 'இஸ்த்திஆனத்' உதவி தேடுதல் என்று கூறுகிறோம். இதன்றி நபியவர்கள் ரபீஆ என்னும் அத்தோழரைப் பார்த்து, 'ஸல்' கேள்! என்று கூறுகின்றனர். இது எதை வேண்டுமானாலும் கேட்கலாம் என்பதை குறிக்கும் ஒரு சொல்லாகம். இதன் மூலம் நபியவர்கள் எல்லாவகையான தேவைகளையும் நிறைவேற்றித் தரக்கூடியவர்கள் என்னும் விளக்கமும் கிடைக்கிறதல்லவா! ஆம். இம்மை மறுமைக்குரிய அனைத்து பேறுகளும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அதிகாரத்தின் கீழ்தான் இருக்கின்றன. அதனால்தான் இதை கேள் என எந்தவொரு குறிப்பையும் தராது எதை வேண்டுமானாலும் கேள் என்று கூறுகின்றனர். இதனாலேயே இமாம் பூஸரி ரஹிமஹுல்லாஹ் என்பார் தமது புர்தா (போர்வை) என்னும் கவிதையில்,...

فان من جودك الدنيا وضرتها ومن علومك علم اللوح والقلم

'திடனாக இம்மை மறுமையனைத்தின் கொடைகளும் உம்முடையதே. இதுபோன்றே லவ்ஹு கலம் என்னும் விதியை குறித்து வைத்துள்ளதின் அறிவனைத்தும் உமது அறிவில் நின்றுமுள்ளதே.'

எனக் கூறுவதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அடுத்து அல்லாமா முல்லா அலி காரி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'மிர்காத்' என்னும் நூலில்,...

يوخذ من الطلاقه صلى الله عليه وسلم الامر بالسؤال ان الله تعالي مكنه من اعطاء كل ما اراد من خوائن الحق

'முஹம்மத் ஸல்லல்லதஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பொதுவாகத்தான் ரபீஆவிடம் கேள் என்று கூறுகின்றனர். ஆதலால் இதன் கருத்து, இறைவனுடைய பொக்கிஷத்திலிருந்து எதை வேண்டுமானாலும் நபியவர்கள் வழங்குவதற்குரிய அதிகாரத்தை இறைவன் அவர்களுக்கு வழங்கியுள்ளான் என்பதை இவ்வாக்கியம் நமக்கு உணர்த்திக் காட்டுகிறது' என்பதாகக் கூறுகின்றனர். இவ்வாறே இப்னு ஸப்வு ரஹிமஹுல்லாஹ் போன்ற அறிஞர்கள் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு மட்டுமே உரிய அருட்கொடையை பற்றி சொல்லும்போது,....

وذكر ابن سبع في خصائصه وغيره ان الله تعالى اقطعه ارض الجنة يعطي منها ما شاء لمن يشاء

'இறைவன் சுவர்க்கத்துடைய பூமியை அண்ணலாருக்கு அனந்தரச் சொத்தாக ஆக்கித் தந்திருக்கிறான். ஆதலால் அதிலிருந்து அவர்கள் எதை யாருக்கு விரும்புகிறார்களோ அவர்களுக்கு அருள் புரிவார்கள்' என்று கூறுகின்றனர்.

அடுத்து இமாம் இப்னு ஹஜர் மக்கீ ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'ஜௌஹருல் முனழ்ழம்' என்னும் நூலில்,...

انه صلي الله عليه وسلم خليفة الله الذي جعل خزائن كرمه ومؤائد نعمه طوع يديه وتحت ارادته يعطي منها من يشاء

ويمنع من يشاء

'சந்தேகத்திற்கு அறவே இடமின்றி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்ள் இறைவனின் பிரதிநிதியாகும். இந்நிலையில் இறைவன் தனது பொக்கிஷத்தையும், அருட்கொடைகளையும் நபியவர்களுக்கு வழிப்பட்டதாகவும் கட்டுப்பட்டதாகவும் அவர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகவும் ஆக்கித் தந்திருக்கிறான். ஆதலால் அவைகளை அவர்கள் விரும்பியவர்களுக்கு அருள் புரிவார்கள். இவ்வாறே தான் விரும்பாதோர்க்கு கொடுக்காமலும் இருப்பார்கள்'.

இப்பிரிவினைவாதிகள் நபிமொழிகளை பெரிதாக மதிக்க வேண்டும். எப்படிப்பட்ட பேராபத்து இவர்களை எதிர் கொண்டுள்ளது என்பதை இவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அதாவது

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ரபீஆ அவர்களிடம் கேட்ட போது அவர் நபியவர்களிடம் சுவர்க்கத்தைத்தான் கேட்கிறார். அதாவது சுவர்க்கத்தில் தங்களின் தோழமையை கேட்கிறேன் என்னும் வாக்கியத்தின் வழியாக நபியவர்களும் அவருக்கு அதை அருள்புரிகின்றனர். அடுத்து சில நபிமொழிகளை உங்களின் பார்வைக்குத் தருகிறோம்.

اطلبوا الخير عند حسان الوجوه

'அழகான முகமுடையோரிடம் நலவானதை கேளுங்கள்'

اطلبوا الخير والحوائج من حسان الوجوه

'நலவானதையும் நாட்டங்களையும் அழகான முகமுடையோரிடம் கேளுங்கள்'

اطلبوا الحاجات عند حسان الوجوه

'உங்களின் தேவைகளை அழகான முகமுடையோரிடம் தேடுங்கள்'

اذا ابتغيتم المعروف فاطلبوه عند حسان الوجوه

'நன்மையானவற்றை நீங்கள் விரும்பினால் அதனை அழகான முகமுடையோரிடம் கேளுங்கள்'

اذا طلبتم الحاجات فاطلبوها عند حسان الوجوه

'நாட்டங்களை நீங்கள் தேடினால் அதனை அழகான முகமுடையோரிடம் தேடுங்கள்'

فان قضي حاجتك قضاها بوجه طلق وان ردك ردك بوجه طلق

'அழகான முகமுடையவர் ஒருவேளை உனது நாட்டத்தை நிறைவேற்றி வைப்பாராயின் அவர் உன்னையும் விரிந்த நெற்றியுடையவராகவும் முகமுடையவராகவும் மாற்றி விடுவார்'

இதையன்றி இமாம் புகாரி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'தாரீக்' என்னும் நூலிலும், அபூயஃலா ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'முஸ்னத்' மற்றும் 'தப்ரானி' என்னும் நூலிலும், இப்னு அதீ ரஹிமஹுல்லாஹ் என்பாhர், தமது 'பைஹகீ' மற்றும் 'இப்னு அஸாகீர்' என்னும் நூலிலும், அப்துல்லாஹ் பின் ரவாஹா அல்லது ஹஸ்ஸான் பின் தாபித் ரழியல்லாஹு அன்ஹுமா என்னும் நபித்தோழர் கூறியதை அறிவிக்கின்றனர்.,...

www.sufimanzil.org

قد سمعنا نبينا قال قولا هو لمن يطلب الحوائج راحة

اغتدوا واطلبوا الحوائج ممن زين الله وجهه بصباحة

'திடனாக எங்களின் நபியவர்கள் சொல்லக் கேட்டோம். அது தேவைகளை கேட்போருக்கு சந்தோஷத்திற்குரிய செய்தியாகும். அதாவது, விடிந்து எழுந்தால் உங்களின் தேவைகளை யாருடைய முகத்தை இறைவன் சிவந்த நிறத்தை கொண்டு அழகுபடுத்தியுள்ளானோ அவர்களிடம் கேளுங்கள்'

-நூல்: இப்னு அஸாகிர்

மேலும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர்...

اطلبوا الفضل عند الرحماء من امتي تعيشوا في اكنافهم فان فيهم رحمتي

'அருளை எனது இரக்கமுள்ள இதயம் கொண்டோரிடம் தேடுங்கள். அவ்வாறாயின் அவர்களுடைய நிழலில் நீங்கள் நிம்மதி பெறுவீர்கள். ஏனெனில் அவர்களிடம் எனது இரட்சகத்தன்மை இருக்கிறது'

اطلبوا الحوائج الى ذوي الرحمة من امتي ترزقوا وتنجحوا

'உங்களின் நாட்டங்களை எனது இரக்கமுள்ள இதயம் கொண்ட சமுதாயத்தினரிடம் தேடுங்கள். இரணத்தை பெறுவீர்கள். தேவைகளை பெற்றுக் கொள்வீர்கள்'

قال رسول الله صلى الله عليه وسلم يقول الله عزوجل اطلبوا الفضل من الرحماء من عبادي تعيشوا في اكنافهم فاني جعلت فيهم رحمتي

'இறைவன் கூறுகிறான். எனது அருளை இரக்கமுள்ள இதயங்கொண்ட அடியார்களிடம் தேடுங்கள். அவர்களின் நிழலில் சுகத்தை அனுபவிப்பீர்கள். ஏனெனில் எனது இரட்சகத்தன்மையை நான் அவர்களிடம் வைத்திருக்கிறேன்'

اطلبوا المعروف من رحماء امتي تعيشوا في اكنافهم

'முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினர். எனது இரக்கமுள்ள இதயம் கொண்ட சமுதாயத்தினரிடம் நன்மையையும் உதவியையும் தேடுங்கள். அவர்களின் அருளுக்குரிய நிழலில் நீங்கள் நிம்மதி அடைவீர்கள்.'

اذا ضل احدكم شياء وارادعوناوهم بارض ليس انيس فليقل ياعباد الله اعينوني ياعباد الله اعينوني ياعباد الله اعينوني فان

الله عبادا لايراهم

'உங்களில் ஒருவருடைய பொருள் ஏதேனும் தொலைந்து போனால், அல்லது ஒருவர் பாதை தவறிவிட்டால், அல்லது உங்களுக்கு உதவி செய்வோர் எவரும் இல்லாது போய் உதவி தேவைப்பட்டால், ஓ! இறைவனின் அடியார்களே! எனக்கு உதவி செய்யுங்கள். ஓ! இறைவனின் அடியார்களே! எனக்கு உதவி செய்யுங்கள். ஓ! இறைவனின் அடியார்களே! எனக்கு உதவி செய்யுங்கள் என்று அழையுங்கள். இறைவனது சில அடியார்கள் இருக்கின்றனர். அவர்களை இவர் பார்ப்பதில்லை. இருப்பினும் அவர்கள் இவருக்கு உதவி செய்வார்கள்.'

மேலும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். காட்டில் விலங்குகள் ஏதேனும் தொலைந்து போய்விட்டால்,....

فينادياعباد الله احسوا

'ஓ! இறைவனின் அடியார்களே! அதை தடுத்து நிறுத்துங்கள் என்று கூறினால் அதனை இறைவன் தடுத்து நிறுத்தி விடுவான்'.

-நூல்: தப்ரானி, அறிவிப்பாளர்: உர்வத் பின் கஸ்வான்

اعينواياعباد الله

'முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக இப்னு மஸ்வூத் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழர் அறிவிக்கின்றனர். இறைவனின் அடியார்களே! எனக்கு உதவி செய்யுங்கள் எனக் கூப்பிடுங்கள்'

அடுத்து இமாம் தகிய்யுத்தீன் சுப்கி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'ஷிபாவுஸ் ஸகாம்' என்னும் நூலிலும், இமாம் நவவி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'கிதாபுல் அத்கார்' என்னும் நூலிலும், இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'இஹ்யாவுல் உலூம்' என்னும் நூலிலும், இமாம் யாபியீ ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'குலாஸத்துல் மபாகிர்' என்னும் நூலிலும், இமாம் இப்னுல் ஜுர்ஸி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'ஹிஸ்னுல் ஹஸீன்' என்னும் நூலிலும், இமாம் கஸ்த்தலானி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'மவாஹிபுல் லதுன்னிய்யா' என்னும் நூலிலும், இமாம் இப்னு ஹஜர் மக்கீ ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'ஜௌஹருல் முனழ்ழம்' என்னும் நூலிலும், இமாம் அப்துல் வஹ்ஹாப் ஷ:ஃறானி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'மீஜானுல் குப்ரா' என்னும் நூலிலும், இமாம் முல்லா அலி காரி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'பஹாருல் அன்வார்' என்னும் நூலிலும், அல்லாமா அப்துல் ஹக் முஹத்திஸ் தெஹ்லவி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'அஷ்அத்துல்

லம்ஆத், மதாரிஜுன் நுபுவ்வத்' என்னும் நூலிலும், அல்லாமா ஸுர்கானி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'ஷரஹுல் மவாஹிப்' என்னும் நூலிலும், அல்லாமா ஷிஹாபுத்தீன் குப்பாஜி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'நஸீமுர் ரியாழ்' என்னும் நூலிலும் எண்ணற்ற அறிஞர்கள் மற்றும் நபிகளாரது குடும்பத்தினர்களின் அறிவிப்புக்களை கொண்டு ஒரு நபிமொழியை அறிவிக்கின்றனர்.

மேலும் இந்த நபிமொழியை தஸ்ஹீஹுல் மஸாயில், ஸைபுல் ஜப்பார், பவாரிகெ முஹம்மதிய்யா போன்ற நூல்களின் தொகுப்பாளர் மௌலானா பழ்லுர் ரஸூல் என்பாரின் உர்தூ, பார்ஸி மொழிகளிலுள்ள நூல்களிலும் பார்க்கலாம். இன்னும் ஞானவான்களின் தர்பார்களிலிருந்து வெளிவந்துள்ள அவர்களின் சொல், செயல் போன்றவற்றை குறித்துக் காட்டும் நூல்களிலும் இந்த நபிமொழி குறிக்கப்பட்டுள்ளது. சிறிது உங்களின் கண்களில் நம்பிக்கை என்னும் கண்ணாடியை மாட்டிக் கொண்டு அல்லாமா அப்துல் ஹக் முஹத்திஸ் தெஹ்லவி ரஹிமஹுல்லாஹ் என்பாரின் மொழிபெயர்ப்பாகிய 'மிஷ்காத்' என்னும் நூலையும் பாருங்கள்.

ஆனால் இந்த வழிகெட்ட நிராகரிப்போரின் நிலையை குறித்து நாம் என்ன சொல்வது? ஆம். எதுவரை அவர்களிலுள்ள அறிஞர்களுக்கும் அவர்களு;கும் இறைநேசர்களான வலிமார்களை கொண்டு எவ்வித பயனும் கிடைக்கவில்லையென பேசப்படுகிறதோ அவர்கள் இந்த நபிமொழியை சோதனை செய்து பார்த்துக் கொள்ளட்டும். இது முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிள்ளைகளில் ஒருவராக பேசப்படும் சைய்யிதுல் அவ்லியா, இமாமுல் அஸ்பியா, குத்புல் அக்தாப், தாஜுல் அஃப்ராத், மர்ஜவுல் அப்தால், சையிதினா கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ரலியல்லாஹு அன்ஹு அவர்களை குறித்த ஒரு அற்புதத்திற்குரிய ஒரு அறிவிப்பாகும். அந்த நபிமொழியானது,....

من استغاث بي في كربة كشف عنه ومن نا داني باسمي في شدة فرجت عنه من توسل بي الى الله فى حاجة قضيت حاجت ومن صلى

ركعتين يقرئ في كل ركعة بعد الفاتحة سورة الاخلاص احدي عشرة مرة ثم يخطوا الى جهة العراق احدي عشرة خطوة ويذكر

اسمي ويذكر حاجته فانها تقضي باذن الله تعالى

'எவரேனும் எத்தகைய கஷ்டத்திலாவது என்னிடம் முறையிட்டால் அக்கஷ்டம் தூரமாகும். ஏதாவது இக்கட்டான துன்பத்தின் போது எனது பெயரை சொல்லி அழைத்தால் அத்துன்பம் நீங்கும். இதேபோல இறைவனது தரப்பில் ஏதேனும் நாட்டம் நிறைவேற என்னை இடைப்பொருளா(வஸீலாவா)க ஆக்கினால் அவரது நாட்டம் நிறைவேறும். இவ்வாறே யாராவது இரண்டு ரக்அத் தொழுது ஒவ்வொரு ரக்அத்திலும் சூறா அல்ஹம்துக்குப் பின் சூறா குல்ஹுவல்லாஹ்வை ஓதி தொழுது முடித்தபின், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்ல வேண்டும். அப்போது நபியவர்களை முழு மனதோடு நினைக்க வேண்டும். அதன்பின் பாக்தாத் இருக்கும் திசையை

நோக்கி பதினோரு எட்டுக்கள் எடுத்துவைத்து முன்னால் நடந்து சென்று, பின்னர் எனது பெயரை கூறி அழைத்து தனது நாட்டத்தை கேட்பாராயின் சந்தேகமின்றி இறை கட்டளையை கொண்டு அவருடைய நாட்டம் நிறைவேறும்'

وقد جرب ذالك مرارا افصح رضي الله عنه

இன்னும் முல்லா அலி காரி ரஹிமஹுல்லாஹ் என்பார், இந்த நபிமொழியை குறித்து சொல்லும்போது, 'இது சந்தேகமின்றி பலமுறை சோதிக்கப்பட்டதும் சரியாக நிறைவேற்றக் கூடியதுமாகும்' என்று கூறுகிறார்.

அடுத்து அல்லாமா தகிய்யுத்தீன் சுப்கி ரஹிமஹுல்லாஹ் என்பார், உதவி தேடுதல் பற்றி பல நபிமொழிகளை கொண்டு ஆதாரப்படுத்தியபின்,...

ليس المراد نسبة النبي صلي الله عليه وسلم الى الخلق والاستقلال بالافعال هذا الا يقصده مسلم فصرف الكلام اليه

ومنعه من باب التلبيس في الدين والتشويش على عوام الموحدين

'முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் உதவி தேடுதல் என்பதன் கருத்து, அவர்களை படைப்பாளரென்றோ அல்லது அவர்கள் சுயமாக உதவி செய்கிறார்களென்பதோ கருத்தல்ல. இப்படி எந்தவொரு இஸ்லாமியரும் நினைப்பகூட இல்லை. இவ்வாறான அர்த்தத்தில் வார்த்தைகளை திரித்துச் சொல்லி உதவி தேடக் கூடாதென சொல்வது மார்க்கத்துடைய விஷயத்தில் தவறானதொரு பாதையை காட்டி பாமர மக்களை அலைகழிப்பதாகும்' என்று கூறுகிறார்.

இதுபோன்றே இப்னு ஹஜர் மக்கீ ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'ஜௌஹருல் முனழ்ழம்' என்னும் நூலில் உதவி தேடலாம் என்பதற்கு பல நபிமொழிகளை கொண்டு ஆதாரப்படுத்திய பின்,...

فالتوجه والاستغاثة به صلى الله عليه وسلم وبغيره ليس لهما معني فى قلوب المسلمين غير ذالك ولا يقصد بهما احد منهم

سواه فمن لم ينشرح صدره لذالك فليبك على نفسه نسئل الله العافية والمستغاث به فى الحقيقة هو الله والنبي صلى الله

عليه وسلم واسطه بينه وبين المستغيث فهو سبحانه مستغاث به والغوث منه خلقا وايجادا والنبي صلى الله عليه وسلم

مستغاث به والغوث منه سببا وكسبا

'முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமோ, மற்ற நபிமார்களிடமோ, வலிமார்களிடமோ உதவி தேடப்படுவதற்கு இப்படிப்பட்ட அர்த்தத்தை தான் இஸ்லாமியர்கள் காலங்காலமாக தமது உள்ளத்தில் கொண்டுள்ளனர். இதைத் தவிர வேறு எந்த அர்த்தத்தையம்

அவர்கள் கொண்டிருக்கவில்லை. இனி எவருடைய உள்ளம் இதை ஊற்றுக் கொள்ளவில்லையோ அவர் தமது நிலையை எண்ணி அழட்டும். நாம் இறைவனிடம் நலவானதையே தேடுகிறோம். ஆதலால் உண்மையில் உதவி என்பது இறைவனிடம்தான் தேடப்படுகிறது. இந்நிலையில் நபியவர்கள் உதவி தேடுவோனுக்கும் உதவி செய்வோனுக்கும் இடையில் ஒரு வஸீலாவாகவும், வாஸிதாவாகவும்தான் உள்ளனர். அவ்வாறாயின் நபியவர்களை நோக்கி உதவி தேடுபவர் எதார்த்தத்தில் இறைவனிடம்தான் உதவி தேடுகிறார்' எனக் கூறுகின்றனர்.

**விலாயத் என்பதன் அர்த்தம்**

விலயாத் என்பதற்குரிய அர்த்தமானது, இறைவனில் தன்னை அழித்து இறைவனிலேயே தன்னை நிலைப்படுத்திக்கொள்ளல் என்பதாகும். இத்தொடர்பு இறப்புக்குப்பின் இன்னும் அதிகமான பூரணத்துவத்தைப் பெற்று இறுகிப்போய் விடுகிறது. இவைகள் ஞான திருஷடி உடையோரிடமும், ஞானவான்களிடமும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது மண்ணறையில் அடக்கப்பட்டிருப்பவரை தரிசிப்பவரது ஆன்மா அவரது ஆன்மாவிடமிருந்து பிரகாசத்தையும் ஞானங்களின் ரகசியங்களையும் பெற்றுக் கொள்கிறது. அதாவது ஒரு கண்ணாடிக்கு எதிரே இன்னொரு கண்ணாடி வைக்கப்பட்டு அக்கண்ணாடியிலுள்ள பிம்பம் இந்தக் கண்ணாடியில் பிரதிபலிப்பதைப் போல என்று சொல்லலாம்.

இதையன்றி இறைநேசர்களுக்கு ஒரு உதாரண தேகமும் உண்டு. அதைக் கொண்டு அவர்கள் தமது மண்ணறைகளை விட்டும் வெளிப்பட்டு அவர்களிடம் உதவி தேடுவோருக்கு உதவியும் செய்கின்றனர். இதனை யார் மறுக்கிறார்களோ அவர்களிடம் இதை குறித்த ஆதாரம் என்பது எதுவுமில்லை.

**நான்கு இறைநேசர்கள்**

ஞானவான்களில் ஒருவர் சொன்னார். நான் நான்கு இறைநேசர்களை பார்த்திருக்கிறேன். அவர்கள் தமது மண்ணறைகளை விட்டும் வெளியே வருகின்றனர். அவர்களுடைய இந்தநிலை அவர்கள் உலகில் வாழ்ந்து கொண்டிருந்த நிலைக்கு கொஞ்சமும் குறைவானதல்ல. அவர்களில் ஒருவர் காஜா மஃரூபுல் கர்கி ரஹிமஹுல்லாஹ் என்பாரும் இன்னொருவர் ஷைகு அப்துல் காதிர் ஜீலானி ரலியல்லாஹு அன்ஹு என்பாருமாவார். மற்ற இரு இறைநேசர்களின் பெயரையும் குறிப்பிடுகிறார்.

**இறைத்தூதர்களில் மிகச் சிறந்தவர்**

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எல்லா இறைதூதர்களிலும் மிக மிகச் சிறந்தவர்களாகும். அவர்களின் தூதுத்துவம் பகிரங்கமான அற்புதங்களை கொண்டும், பரிபூரணமான ஆதாரங்களைக் கொண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதைப் பற்றிய எண்ணற்ற ஆதாரங்கள் அசைக்கவியலாத வண்ணம் வரலாறுகளில் காணப்படுகின்றன. இதில் ஒவ்வொரு தூதரின் அற்புதமும் ஒருசில காரணங்களுக்காக வெளிப்பட்டன.

ஆனால்முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அற்புதங்கள் மட்டும் எல்லாவகையான காரணங்களையும் உள்ளடக்கி தூதுத்துவத்திற்குரிய ஆதாரமாக வெளியாயிற்று.

இதன்மூலம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் போக்குவரத்து வானம், பூமி, காரணம், மகா காரணம் என எல்லா உலகங்களிலும் இருக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். அதேநேரம் இது மற்ற இறைதூதர்களில் தனித்தனியாக காணப்பட்டது. ஆனால் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் இது ஒருங்கிணைந்து காணப்படுகிறது. அதனால்தான் அருமை நபியவர்கள்,....

انا سيد ولد آدم ولا فخر

'நான் ஆதமுடைய மக்களின் தலைவனாக இருக்கிறேன். இதை நான் பெருமைக்காக சொல்லவில்லை' என்று கூறுகின்றனர். இதில் ஆதமுடைய மக்கள் என்பதன் கருத்து இனம் என்பதாகுமாதலால், இதில் மனித சிருஷ்டியின் முதல் மனிதரான ஆதமும் உள்ளடக்கப்படுகின்றனர் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதுபோன்றே இன்னொரு நபி மொழியில் நாதர் நபியவர்கள்,...

آدم ومن دونه تحت لوائی

'ஆதமும் அவரல்லாத அனைவரும் எனது கொடிக்குக் கீழே இருப்பார்கள்' என்றும் கூறுகின்றனர்.

இதில் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு மிகப்பெரும் படித்தரம் உள்ளது. அவர்களுக்குப் பின் மூஸா அலைஹிஸ்ஸலாமும் அதற்குப் பின் ஈஸா அலைஹிஸ்ஸலாமும் அதற்குப் பின் நூஹ் அலைஹிஸ்ஸலாமும் வருகின்றனர். இவ்வைந்து பேரும் 'உலுல் அஸ்முகள்' என நம்பப்படுகின்றனர். இவ்வைந்து பேர்கள்தான் மற்ற எல்லா இறைதூதர்களை விடவும் உயர்ந்தவர்கள் என்றும் நம்பப்படுகிறது.

**குர்ஆன் ஒர் அற்புதம்**

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மிகப்பெரும் அற்புதமென்று ஒன்றை சொல்ல வேண்டுமாயின், அது குர்ஆன் என்னும் வேதமேயாகும். இதில் இறைவனது சிபாத்துகள் என்னும் குணங்கள் எவ்வாறு பூர்வீகமானதோ, அவ்வாறே அவனுடைய வசனமாகிய குர்ஆனும் பூர்வீகமானதாகும். இறுதிநாள்வரை இது இவ்வுலகில் பாதுகாக்கப்பட்டதாகவே இருக்கும்.

இனி ஒரு அற்புதம் என்றால் அது வெளிப்பட்டு பின்னர் மறைந்து போய் விடும். ஆனால் குர்ஆன் அப்படியல்ல. காலாகாலத்திற்கும் காலங்கள் மறைந்தாலும் இதுமட்டும் மறையாது நிலைத்திருக்கும். இன்னும் இது ஒவ்வொரு காலத்திலும் பார்க்கப்பட்டு கொண்டே இருக்கும். மேலும் குர்ஆனும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் உண்மைதான் என்பதற்குரிய மிகப்பெரும் ஆதாரம் என்னவெனில், மக்காவை சேர்ந்த அந்தக் குறைஷிகள்! ஆம். அரபுலகின் இலக்கண மற்றும் இலக்கியத்தின் மேதைகளென நம்பப்பட்ட அவர்கள் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் இஸ்லாத்திற்கும் வைரிகளாக இருந்தவர்கள். அவர்களை நோக்கித்தான்,....

وان كنتم في ريب مما نزلنا على عبدنا فأتوا بسورة من مثله

'நீங்கள் நமது அடியார்மீது இறக்கப்பட்ட இந்த வேதத்தில் சந்தேகமுடையவர்களாக இருப்பீர்களாயின் இதை போன்ற ஒரு அத்தியாயத்தை கொண்டு வாருங்கள்'

என அவர்களை நோக்கி அறைகூவல் விடுக்கப்பட்டது. ஆனால் இன்றுவரை அதற்குரிய பதிலை யாருமே கொண்டுவரவில்லை. அன்றி நபியவர்களின் காலத்தில் அரபுமொழி பெரும் உச்சத்தை எட்டியிருந்த நேரம். அம்மக்கள் அரபு மொழியில் மிகப்பெரும் விற்பன்னர்களாக திகழ்ந்து கொண்டிருந்த காலம். அப்படிப்பட்ட நிலையில்தான் இறைவன் குர்ஆனை நபியவர்களுக்கு இலக்கிய இலக்கண செறிவு நிறைந்ததாக அருளினான். ஏனெனில் ஒவ்வொரு இறைதூதரின் காலத்திலும் மிகப்பெரும் அற்புதமென பேசப்பட்டுக் கொண்டிருந்த ஒரு நிகழ்வுக்கு எதிரான அற்புதங்களைத்தான் அத்தூதர்களும் செய்து காட்டினர்.

இங்கே மிக நிதானமாக யோசிக்க வேண்டிய ஓர் விஷயம்யாதெனில், எந்த மொழியை அந்த அரபுலகை சேர்ந்த மக்கள் பேசி வந்தார்களோ, புரிந்திருந்தார்களோ, பெரியவர் முதல் சிறியவர் வரை தெரிந்திருந்தார்களோ அதே மொழியில்தான் குர்ஆனும் இறங்கிற்று. ஆனால் அதனுடைய வார்த்தைகளுக்கு முன்னால் அவர்கள் நிர்பந்திக்கப்பட்டவர்களாக, தங்களின் இயலாமையையும் தோல்வியையும் ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று. அத்துடன் முழு அரபுலகமும் குர்ஆனுக்கு எதிராக ஒரு வசனத்தைக் கூட கொண்டுவர முடியாமற் போயிற்று.

இனி எப்போது குர்ஆனின் முதல் வசனமாகிய 'இக்ரஃ பிஸ்மி ரப்பிக' (உமது இரட்சகனின் திருநாமத்தைக் கொண்டு ஓதுவீராக!) என்பது இறங்கிற்றோ, அப்போது அந்த வசனத்தை கஃபாவின் வாசலில் எழுதி தொங்க விடப்பட்டது. அத்திருவசனத்தைக் கண்ட அரபு மொழியின் இலக்கிய மற்றும் இலக்கணவாதிகள் அந்தத வசனத்திலிருந்த இலக்கிய மற்றும் இலக்கணத்திற்குரிய நயத்தைக் கண்டு பிரமித்துப் போயினர். அவர்கள் அப்போது தம்மையும் மறந்து இது மனித வாக்கல்ல. இதுபோன்றதொரு வாக்கியத்தை கண்டிப்பாகக் கொண்டு வரவே முடியாதென்றும் கூறினர்.

இதில் இஸ்லாமியக் கொள்கைவாதிகளில் காணப்படும் 'முஃதஸிலா' என்னும் பிரிவைச்சேர்ந்தவர்கள், குர்ஆனை போன்றதொரு வாக்கியத்தை உருவாக்கும் ஆற்றலை

அன்றைய இலக்கியவாதிகள் பெற்றிருந்தனர். ஆனால் இறைவன் தனது வாக்குக்கு முன் அவர்களது அத்திறமையை இல்லாமலாக்கி விட்டான்.அத்துடன் அவர்களுடைய வாக்கு சாதுர்யத்தின் மீது அவன் முத்திரையுமிட்டு விட்டான். அதனால்தான் குர்ஆனை போன்றதொரு வாக்கியத்தை அவர்களால் உருவாக்க முடியாமல் போய்விட்டதென்று கூறுகின்றனர்.

இவர்களின் இக்கூற்றுக்கு எவ்வித அடிப்படை ஆதாரமும் கிடையாது. எனினும் இது குர்ஆனின் ஒரு அற்புதமாகும். காரணம் அவர்கள் குர்ஆனை போன்றதொரு வாக்கியத்தை உருவாக்கும் ஆற்றலை பெற்றிருந்தும் கூட அவர்களின் நாவுகள் மேலெண்ணத்தில் போய் ஒட்டிக் கொண்டன என்பதே உண்மையாகும். இந்நிலையில் இந்த மு..ஃதஸிலாக்கள் குர்ஆனின் இந்த அற்புதத்தை ஒப்புக் கொள்வதற்குப் பதிலாக மறுக்கின்றனர். இவர்கள் எதை ஆதாரமாக வைத்து இவ்வாறு கூறுகின்றனர் என்பதுதான் நமக்கு விளங்கவில்லை.

ஆனால் பகிரங்கமான ஒரு உண்மை என்னவெனில், இறைவனது திருவாக்கை போன்றதொரு வாக்கியத்தை யாராலும் உருவாக்க முடியாது என்பதுதான் எதார்த்தமான உண்மையாகும். அவ்வாறு இல்லையேல் இன்றுவரை யாராவது ஒருவர் ஒரு வசனத்தையாவது கொண்டு வந்திருப்பார். இதனை குர்ஆனும் அறைகூவல் விடுத்தவாறு யாருக்கு இத்திறமை உள்ளதோ அவர் இதனை செய்து காட்டட்டும் என்பதாக இன்றும் சொல்லிக் கொண்டிருக்கிறது. அந்த வசனத்தையும் பாருங்கள்,...

قل لئن اجتمعت الانس والجن على ان يأتوا بمثل هذا القرآن لا يأتون بمثله ولو كان بعضهم لبعض ظهيرا

'(நபியே!) அவர்களுக்கு சொல்லும். ஒருவேளை மனித வர்க்கமும் பூதகணங்களும் ஒன்றாக இணைந்து ஒருவருக்கொருவர் உதவியாளர்களாக மாறினாலும் அவர்களால் குர்ஆனை போன்ற ஒன்றை கொண்டுவர முடியாது'

அடுத்து முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்க்கை, அவர்களின் மகத்தான நற்குணங்கள், உயர்வான நல்லொழுக்கம் போன்றவைகளை நாம் கவனிப்போமாயின் அவர்களே இறைவனின் ஒரு அற்புதம்தான் என்பதையும், அந்த வல்லோனுடைய மகத்துவத்திற்குரிய ஒரு எடுத்துக்காட்டுதான் என்பதையும் நாம் ஒப்புக் கொண்டே ஆக வேண்டும்.

**சிருஷ்டிகளனைத்தின் தூதர்**

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எல்லா படைப்புகளுக்குமுரிய தூதராகும். ஜின் வர்க்கமும், மனித இனமும் அவர்களது கொடிக்குக் கீழேதான் தங்கியுள்ளன. அதனால்தான் நபியவர்களை 'ரஸூலுஸ் ஸகலைன்'என்பதாகக் கூறப்படுகிறது. அவர்களின் புனிதமிக்க சன்னிதானத்திற்கு பூதகணங்கள் வருகை தந்ததும், குர்ஆனை செவியேற்றதும், விசுவாசித்ததும், அதன்பின் தம்மை சார்ந்தோரிடம் சென்று குர்ஆனை போதித்ததும் போன்ற அனைத்தையும் குர்ஆன் சொல்லிக் காட்டுகிறது. பெரும்பான்மையான அறிஞர்கள், மனு

மற்றும் ஜின் வர்க்கத்தாரிடமும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நபித்துவம் குறிப்பாக்கப்பட்டிருந்தது எனக் கூறுகின்றனர்.

அல்லாமா ஷெய்கு ஜலாலுத்தீன் ரஹிமஹுல்லாஹ் என்பார் கூறுகிறார்: சந்தேகமின்றி ஜின்கள் அழைப்பாளர்களாக இருந்தன என்றும், இனி அழைப்பாளர் என்பவர் ஒரு இறைதூதரிடமிருந்தோ அல்லது ஒரு உண்மையாளரிடமிருந்தோ செய்திகளை கேட்டிருக்க வேண்டும். இந்நிலையில் ஜின் வர்க்கத்தில் எந்த இறைதூதருமில்லை என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தாக இருக்கும்போது குர்ஆனில் ஜின் வர்க்கத்தை குறித்து கீழ்காணும் வசனம் இவ்வாறு பேசுகிறது,....

قالوايقومنا انا سمعنا كتابا انزل من بعد موسي مصدقا لما بين يديه يهدي الى الحق والى صراط مستقيم

'(ஜின்கள்)' கூறின. ஓ! கூட்டத்தாரே! நாங்கள் ஒரு நூலை கேட்டோம். அது மூஸாவுக்குப் பின் இறங்கியுள்ளது. அத்துடன் அது முந்தைய வேதங்களையும் உண்மைப்படுத்துகிறது. மேலும் சத்தியத்தைப் பேசுகிறது'

இந்த வசனத்தை ஆதாரமாகக் கொண்டு பார்க்கும்போது, ஜின்கள் துவக்கத்திலிருந்தே மூஸா நபியவர்களின் மார்க்கத்தை பின்பற்றி வந்துள்ளன என்பதை நாம் தெரிந்து கொள்கிறோம். அத்துடன் அவைகள் பல்வேறு இறைத்தூதர்களின் மீதும் விசுவாசம் கொண்டிருந்தன என்பதும், இருப்பினும் அவைகள் அத்தூதர்களுக்கு முன்னால் வராது அவர்களின் வேதங்களையும் அவர்களால் வகுத்தளிக்கப்பட்டிருந்த வாழ்வியலுக்குரிய நடைமுறை சட்டங்களையும் பின்பற்றி வந்துள்ளன என்பதையும் நாம் தெரிந்து கொள்கிறோம். அந்த இறைதூதர்களும் ஜின்களிடம் நேருக்கு நேராக இஸ்லாமிய அழைப்பென்று எதையும் கொடுக்கவில்லை. ஆனால் அதேநேரம் நபியவர்களின் திருச்சன்னிதானத்தில் அவைகள் ஆஜராயின. அவைகளோடு அவர்கள் உரையாடியதுடன் அவைகளுக்கு இஸ்லாமிய அழைப்பும் விடுத்தனர். ஒவ்வொன்றுக்கும் நேருக்குநேர் அழைப்பு விடுத்து அவை முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மீது விசுவாசம் கொண்டன என்பது நபியவர்களுக்கு மட்டுமே உரிய ஒன்றாகும்.

மேலும் அல்லாமா ஜலாலுத்தீன் என்பார் கூறுகிறார். ழஹ்ஹாக் ரஹிமஹுல்லாஹ் என்பாரின் நம்பிக்கையும், பல்வேறு அறிஞர் பெருமக்களின் ஒருங்கிணைந்த முடிவும், உண்மையான வார்த்தையுமானது, முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நபித்துவமானது வானவர்கள் மீதும் நிலை நிறுத்தப்பட்டுள்ளது என்பதாம். இருப்பினும் இது எப்போதாவதுதான். இனி திடஞானிகளின் பார்வையில், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்ளனி; நபித்துவமானது சர்வ பிரபஞ்சத்திலுமுள்ள ஒவ்வொரு சிருஷ்டிப் பொருளிலும் நிலை நிறுத்தப்பட்டுள்ளது என்பதாம். அவைகளில் தாவர வர்க்கம், தாதுவர்க்கம், மிருக வர்க்கம், பறவை இனங்கள் போன்ற அனைத்தும் அடங்கும். ஆம். கற்கள் முகமன் கூறியதும், விருட்சங்கள் சாஷ்டாங்கம் செய்ததும், மிருகங்கள் அவர்களின்

தூதுத்துவத்தை உண்மையென சான்று பகன்றதும் நபியவர்களின் தூதுத்துவம் அனைவருக்கும் பொதுவானதே என்பதற்குரிய ஆதாரங்களாகும்.

இதில் ஒரேயொரு வித்தியாசம் என்னவெனில், மனித இனமும் ஜின் வர்க்கமும் தமது செயல்பாடுகளில் சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளவை. அதனால்தான் அவர்கள் மீது இறை மறுப்பும், பாவங்களும் விதிக்கப்பட்டுள்ளன. அதேநேரம் மீதமுள்ள சிருஷ்டிகளில் அவைகளின் வழிப்பாடோ அல்லது விசுவாசமோ எதுவும் வெளிப்படையாக தெரியவில்லை. வானவர்களைப் போன்று அவைகளும் எதற்காக படைக்கப்பட்டனவோ அதனை செய்து கொண்டுள்ளன. இதனை ஆதாரப்படுத்தும் வண்ணம் குர்ஆனில் இறைவன்,...

وما ارسلناك الا رحمة للعالمين

'இன்னும் அகிலமனைத்துக்கும் உம்மை நாம் ஓர் இரட்சிப்பாளராகவே அன்றி அனுப்பவில்லை' எனக் கூறியிருப்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

**விழிப்புடைய நிலையில் விண்ணேற்றம்**

முஹம்மத் ஸல்லல்லாஹூ அலைஹி வஸல்லம் அவர்களுக்கு விழிப்புடைய நிலையில் தேகத்தோடு கூடிய மிஃராஜ் என்னும் விண்ணேற்றப் பயணம் நடைபெற்றது. அவர்கள் மண்ணிலிருந்து விண்ணுக்கும் பின்னர் அங்கிருந்து இறைவன் எதுவரை நாடினானோ அதுவரை தமது தேகத்தோடு சென்றனர். இதில் ஒரு விசுவாசியின் விசுவாசத்திற்குரிய பரீட்சையானது இந்த விண்ணேற்றத்துடைய சம்பவத்தில் தானுள்ளது. ஏனெனில் இத்தனை குறைந்த நேரத்தில் விழிப்புடைய நிலையில் அதுவும் தேகத்தோடு இறைவனுடைய தெய்வாசன பீடமாகிய அர்ஷையும் தாண்டி ஏன்! லாமக்கான் என்னும் குறிப்பற்ற எல்லையையும் கடந்து சென்றுவிட்டு பின்னர் திரும்பி வந்ததை உண்மைதான் என ஏற்றுக் கொள்வதுதான் உண்மையான விசுவாசத்திற்குரிய அடையாளமாகும். இது இவ்வுலகையும் ஆன்ம லோகத்தையும் திட்டப்படுத்துவதற்குரிய ஆதாரமாகும். இது காலங்களையும் அதனுடைய ஓரங்களையும் கடந்த ஒன்றாகும். இனி ஞானதிருஷ்டியின் பார்வை பெற்றோர் இதனை பகிரங்கமாக விபரித்துள்ளனர்.

மேலும் இப்பிரச்சனையில் விசுவாசத்திற்குரிய காரியம் என்னவெனில், விண்ணேற்றத்துடைய சம்பவத்தை கேள்விப்பட்ட மாத்திரத்திலேயே அதில் நிகழ்ந்தவைகளையும் அதனுடைய யதார்த்தத்தையும் கொஞ்சம் கூட யோசிக்காமல் உடனே நம்பிக்கை கொள்வதுதான். இருப்பினும் இச்சம்பவத்தை குறித்த விசயங்களை இறைவன் நமக்கு அறிவித்துத் தருவானாயின் அது அவனுடைய பேரருளாகும். ஏனெனில் இதனுடைய எதார்த்தத்தை ஆரிபீன்கள் என்னும் ஞானவான்களும் பஷரிய்யத்தெ(மனிதப் பபண்பெ)ன்னும் உடையை கழற்றிப் போட்டவர்களும் தான் மிக நன்றாக தெரிந்து வைத்துள்ளனர். எங்கே உண்மையான நேசமும், திடமான நம்பிக்கையும், நிறைவான விசுவாசமும் இருக்கிறதோ அங்கே மறுப்போ

தயக்கமோ அறவே ஏற்படாது. ஆதலால் அதைப் பற்றி கேட்டதும் அதன்மீதுத விசுவாசம் கொள்வதுதான் முதற்காரியமாகும்.

**சித்தீகுல் அக்பரின் விசுவாசம்**

முஹம்மத் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களின் தோழர் பெருமக்களில் முதன்மையானவராக பேசப்படும் அபூபக்கர் என்பாருக்கு 'சித்தீக்' (உண்மையாளர்) என்னும் பட்டம் எப்போது கிடைத்ததெனில், எப்போது அவர் விண்ணேற்றத்தைப் பற்றி கேள்விப்பட்டதும் சற்றும் தாமதிக்காமல் சட்டென்று அதனை ஏற்றுக் கொண்டாரோ அப்போது தான் அவருக்கு சித்தீக் என்னும் பட்டம் கிடைத்தது. அதை கேட்ட அந்த வினாடியே அவர் முஸ்லிமாகவும் ஆகிவிட்டார். அதேசமயம் இச்சம்பவத்தை கேள்வியுற்ற பலர், நிராகரித்ததன் மூலம் கருத்து வேற்றுமை கொண்டு தங்களின் விசுவாசத்தை கைநழுவ விட்டனர். பலர் முர்தத்து (மார்க்கமற்றவர்)களாகவும் ஆகிப்போயினர். ஆனால் இவ்விஷயத்தில் அபூபக்கர் அவர்கள் எடுத்த எடுப்பிலேயே விசுவாசம் கொண்டது அவருக்குள் எவ்வித மறுப்பும் தயக்கமும் இல்லை என்பதுதான் அதற்குக் காரணமாகும். ஏனெனில் அப்போது முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அற்புதங்களும், அத்தாட்சிகளும் நானாபக்கமும் பிரகாசித்துக் கொண்டிருந்தன. ஆனால் அபூபக்கர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள், தாம் விசுவாசம் கொள்வதற்கு அண்ணலாரிடம் எந்தவொரு அற்புதத்தையும் ஆதாரமாகக் கேட்கவில்லை. மாறாக உடனே விசுவாசம் கொண்டனர்.

அடுத்து முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விண்ணேற்றத்திலிருந்து திரும்பி வந்தபோது அவர்களிடம் இறைவனை சந்தித்தது குறித்து கேட்கப்பட்டது. அதற்கு நபியவர்கள், சில தோழர்களுக்கு விளக்கமாக பதில் தந்தனர். சிலருக்கு சைக்கினையாக பதிலளித்தனர். அவரவர் விளக்கத்திற்குத் தக்கவாறு விளக்கம் தந்தனர். இச்சம்பவத்தின் மூலம் எல்லோருமே ஒருவிசயத்தை விளங்கிக் கொள்ள மாட்டார்கள் என்பதையும், சிலரிடம் மறைவானவற்றை விவரிக்கக் கூடாது என்பதையும் அதேநேரம் அவர்களின் விளக்கத்திற்குத் தக்கவாறு வார்த்தைகளில் எதார்த்தத்தை மறைத்து சைக்கினையாக விபரிக்க வேண்டும் என்பதையும் நாம் தெரிந்து கொள்கிறோம்.

இருப்பினும் உண்மை என்னவெனில், முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது இறைவனை முகக் கண்களால் கண்டார்கள் என்பதே. இதுதான் நபித்தோழர்களின் நம்பிக்கையுமாகும். இனி மனக்கண்ணால் காணுதல் என்பது எல்லா மனிதர்களுக்குமே சாத்தியமான ஒன்றுதான். இதில் விண்ணேற்றத்திற்குரிய தனித்தன்மை என்பதுத என்ன இருக்க முடியும்? இதிலும் சிலர் மனக்கண்ணால் காணுதல் காணுதல் வேறு அறியுதல் வேறு என்றும் கூறுகின்றனர்.

அடுத்து இமாம் பூஸிரி ரஹிமஹுல்லாஹ் என்பார் தமது புர்தா (போர்வை) என்னும் கவிதையில்,...

سريت من حرم ليلا الى حرم كما سري البدر في داج من الظلم

وبت ترقى الى ان نلت منزلة من قاب قوسين لم تدرك ولم ترم

حفضت كل مقام بالاضافة اذ نوديت بالرفع مثل المفرد العلم

فحزت كل فخار غير مشترك وجزت كل مقام غير مزدحم

'முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இரவின் ஒருசிறு பகுதியில் மக்காவிலுள்ள ஹரம் என்னுமிடத்திலிருந்து பைத்துல் அக்ஸா என்னுமிடத்திற்கு சென்றனர். எவ்வாறு இருண்ட இரவில் பதினான்காம் பக்கத்து நிலவு செல்கிறதோ அவ்வாறு அவ்விரவில் நபியவர்கள் முன்னேறிக் கொண்டிருந்தனர். எதுவரையெனில், காபகௌஸைனி (இரு வளையங்கள் ஒன்று சேரும் இடம்) என்னும் ஸ்தானத்தை சென்றடைந்தனர். அதனை இதுவரை யாருமே பெற்றதில்லை. அதற்குரிய தைரியமும் யாருக்கும் பிறக்கவில்லை. நபியவர்கள் தமது தொடர்பைக் கொண்டு அனைத்து ஸ்தானங்களையும் தமக்குப் பின்னால் தள்ளிவிட்டனர். மேலும் நபியவர்கள் உயர்ந்ததோர் தனிமையான ஞானத்தின் பக்கமாக அழைக்கப்பட்ட போது, அதில் எல்லாவகையான பெருமைகளையும் அவர்கள் சேகரித்துக் கொண்டனர். அப்போது அதில் எந்த இணைப்பும் இல்லை.

அதன்பின் ஒவ்வொரு ஸ்தானத்தையும் அவர்கள் கடந்து சென்றனர். அதில் இதற்குமுன் வேறு எவருடைய வருகையும் எப்போதும் நிகழ்ந்ததில்லை. அல்லது பெருமைகளனைத்தையும் சேகரித்துக் கொண்டனர். அத்துடன் எல்லா ஸ்தானங்களையும் எவ்விதத் தடையுமின்றி கடந்து சென்றனர். அதாவது குறிப்புக்குரிய உலகில் எத்தனை ஸ்தானங்கள் இருந்ததோ அவையனைத்தையும் அவர்கள் தனியாகவே கடந்து சென்றனர். இது வேறு யாருக்குமே சாத்தியமாகவில்லை' என்று கூறுகின்றனர்.

அடுத்து முல்லா அலிகாரி ரஹிமஹுல்லாஹ் என்பார் தமது விரிவுரையில்,...

اي انت دخلت الباب وقطعت الحجاب الى ان لم تترك غاية لساع الى السبق من كمال القرب المطلق الى جناب الحق ولا تركت

موضع رقي وصعود قيام وقعود لطالب رفعة في عالم الوجود بل تجاوزت ذالك مقان قاب قوسين او ادنى فاوحي اليك ربك ما

اوحي

'முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எதுவரை திரைகளை கடந்து சென்றனர் எனில், கண்ணியத்திற்குரியவனது சன்னிதானத்தை முழுமையாக எய்தினர். எந்த ஓரத்தையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை. மேலும் எல்லா தோற்றப் பொருட்களின்

உலகங்களிலும் அவர்கள் முன்னேறி, எழுந்து அமரும் இடங்களையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை. மாறாக குறிப்புக்குரிய உலகங்களையெல்லாம் கடந்து முன்னேறி காப கௌஸைனி (இரு வளையங்கள் ஒன்று சேருமிடம்) வரை சென்றனர். அங்கே இறைவன் நபியவர்களுக்கு எதை அறிவிக்க வேண்டுமோ அதை அறிவித்தான்' என்று கூறுகின்றனர்.

அடுத்து இமாம் ஷர்புத்தீன் முஹம்மத் ரஹிமஹுல்லாஹ் என்பார் கூறுகின்றனர்,....

وترقى به الى قاب قوسين وتللك السياده القعساء

رتب تقسط الامانى حسري دونها ما وراهن وراء

'முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு காப கௌஸைனி (இரு வளையங்கள் ஒன்று சேருமிடம்) வரை முன்னேற்றம் ஏற்பட்டது. இந்த தலைமைத்தனம் மறைவற்றதாகும். இன்னும் இவை எப்படிப்பட்ட ஸ்தானங்கள் எனில், அங்கே எதிர்பார்ப்புகள் அனைத்தும் சோர்ந்து போய் விழுந்து விடுகின்றன. அதற்கப்பால் வேறு எந்த ஸ்தானமும் கிடையாது' என்று கூறுகின்றனர்.

இதுபோன்றே இமாம் இப்னு ஹஜர் மக்கீ ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'அஃப்ழலுல் குரா' என்னும் நூலில்,...

قال بعض الائمة والمعاريج ليلة الاسراء عشرة سبعة فى السموات والثامن الى سدرة المنتهى والتاسع الى المستوي والعاشر

الى العرش

'சில தலைவர்கள் அஸ்ராவுடைய இரவின் மிஃராஜ் என்பது பத்தாக இருந்ததென்றும், ஏழு வானங்களை அடுத்து எட்டாவது சித்ரத்துல் முன்தஹாவும் ஒன்பதாவது முஸ்த்தவாவும் பத்தாவது அர்ஷ் என்றும் கூறுகின்றனர் என்கிறார்'

அல்லாமா அப்துல் கனி நாபில்சி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'ஷரஹு தரீக்கா முஹம்மதிய்யா' என்னும் நூலில்,....

حيث قال قال شهاب المكي فى شرح همزية الابوصيري عن بعض الائمة ان المعارج عشرة الى قوله والعاشر الى العرش والرؤية

'மிஃராஜ் பத்தாகும். பத்தாவது மிஃராஜ் அர்ஷ் மற்றும் தரிசனையாகும்' என்று கூறுகின்றனர்.

அடுத்து இமாம் இப்னு ஹஜர் மக்கி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'ஷரஹு ஹம்ஸிய்யா' என்னும் நூலில்,...

لما اعطى سليمان عليه السلام الريح التي غدوها شهر و رواحها شهر اعطى نبينا صلى الله عليه وسلم البراق فحمله من الفرش

الى العرش فى لحظة واحدة واقل مسافة فى ذالك سبعة آلاف سنة وما فوق العرش الى المستوي والررف لا يعلمه الا الله تعالى

'சுலைமான் நபியவர்களுக்கு காற்றை வசப்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தது. அது அவர்களை காலையும் மாலையும் ஒவ்வொரு மாதத் தொலை தூரத்திற்கு கொண்டு போய் கொண்டிருந்தது. இவ்வாறே முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு புராக் கொடுக்கப்பட்டது. அது அவர்களை இப்பூமியிலிருந்து அர்ஷு (தெய்வாசன பீடத்து)க்கு ஒரு நொடிக்குள் கொண்டுபோய் கொண்டிருந்தது. இதில் மிக மிகத் தாழ்வான தூரம் என்பது ஏழாவது வானத்திலிருந்து பூமிக்கு வந்து சேரும் ஏழாயிரம் ஆண்டுக்குரிய தொலை தூரமாகும். அது அர்ஷி(தெய்வாசன பீடத்தி)லிருந்து முஸ்த்தவா (சமநிலை) மற்றும் ர.்.ப் ர.்.ப்(ஒரு வகை விரிப்பு) வரை இருந்தது. அதை பற்றி இறைவனே நன்கு அறிவான்' என்று கூறுகின்றனர். மேலும் அதே நூலில் கூறப்பட்டுள்ளதாவது,....

لما اعطى موسي عليه السلام الكلام اعطى نبينا صلى الله عليه وسلم مثله ليلة الاسراء وزيادة الدنو والرؤية بعين البصر

وشتان ما بين جبل الطور الذي نوجي به موسي عليه السلام وما فوق العرش الذي نوجى به نبينا صلى الله عليه وسلم. الا

سرابه صلى الله عليه وسلم على يقظة بالجسد والروح من المسجد ثم الحرام الى المسجد الاقصي ثم عرج به الى السموات العلى

ثم الى سدرة المنتهى ثم الى المستوي ثم الى العرش والرفرف.

'மூஸா அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு இறைவனோடு பேசும் சிறப்பு வழங்கப்பட்டிருந்தது. இதுபோன்றே முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறைவனது சமீபத்துவமும் அவனை முகக் கண்ணால் காணும் பாக்கியமும் தரப்பட்டது. இதன்றி தூர்சீனா மலை எங்கே? அங்கே வைத்துத் தானே மூஸா நபியவர்கள் இறைவனோடு பேசினர்! அதேநேரம் அர்ஷி(தெய்வாசன பீடத்தி)ன் முடிவுக்குரிய ஸ்தலம் எங்கே? அங்கு வைத்தல்லவா நமது நபியவர்கள் இறைவனோடு உரையாடினர்! இன்னும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது புனித தேகத்தோடு அதுவும் விழிப்புடைய நிலையில் இரவில் வானங்கள் வரை முன்னேறிச் சென்று பின்னர் சித்ரா, (ஏழாம் வானத்தில் ஒரு இலந்தை மரமுள்ள இடம்) முஸ்த்தவா, (சமநிலை) அர்ஷ்(தெய்வாசன பீடம்) ர.்.ப் ர.்.ப் (ஒருவகை விரிப்பு) என ஒவ்வொரு ஸ்தலமாக மேலேறிச் சென்று இறுதியில் தரிசனை வரையல்லவா முன்னேறினர்!' என்றும் கூறுகின்றனர்.

அல்லாமா முஹம்மத் சாவி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'அ.்.ப்ழலுல் குரா' என்னும் நூலில் கூறுகின்றனர்,....

رقیہ صلی اللہ علیہ وسلم لیلۃ الاسراء من بیت المقدس الی السموات السبع الی حیث شاء اللہ تعالی لکنہ لم یجاوز العرش علی الراجح. المعاریج لیلۃ الاسراء عشرۃ سبعۃ فی السموات والثامن الی سدرۃ المنتھی والتاسع الی المستوي والعاشر الی العرش لکن لم یجاوز العرش کما ھو التحقیق عند اھل المعاریج. بعد ان جاوز السماء السابعۃ رفعت لہ سدرۃ المنتھی ثم جاوزھا الی مستوي ثم زج بہ فی النور فخرق سبعین الف حجاب من نور مسیرۃ کل حجاب خمس مئۃ عام ثم دلی لہ رفرف اخضر فارتقی بہ حتي وصل الی العرش ولم یجاوزہ فکان من ربہ قاب قوسین او ادنی.

'முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் விண்ணேற்றம் விழிப்புடைய நிலையில் தேகம் மற்றும் ஆன்மாவோடு மஸ்ஜிதுல் ஹரமி(மக்காவிலுள்ள கஃபா என்னும் ஆலயத்தி)லிருந்து மஸ்ஜிதுல் அக்ஸா (ஜெரூஸலத்திலுள்ள ஆலயம்) வரையும், அதன்பின் வானங்கள், சித்ரா, (ஏழாம் வானத்தில் ஒரு இலந்தை மரமுள்ள இடம்) முஸ்த்தவா, (சமநிலை) பின்னர் அர்ஷ் (தெய்வாசன பீடம்) மற்றும் ரஃப் ரஃப் (ஒருவகை விரிப்பு) வரை நிகழ்ந்தது'

அடுத்து அல்லாமா ஷைகு சுலைமான ஜமல் ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'புதூஹாத்தே அஹ்மதிய்யா' என்னும் நூலில் கூறுகின்றனர்,....

'முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்னேற்றம், இரவன்று பைத்துல் முகத்தஸி (ஜெருஸலத்திலுள்ள ஆலயத்தி)லிருந்து ஏழு வானத்திற்கும் பின்னர் அங்கிருந்து எந்த ஸ்தானம் வரை இறைவன் நாடினானோ அந்த ஸ்தானம் வரை இருந்தது. இன்னும் விண்ணேற்றத்துடைய இரவன்று பத்து விண்ணேற்றங்கள் நிகழந்தன. முதலில் ஏழு வானங்களிலும் எட்டாவது சித்ராவி(ஏழாம் வானத்தில் ஒரு இலந்தை மரமுள்ள இடத்தி)லும் ஒன்பதாவது முஸ்த்தவாவி(சமநிலையி)லும் பத்தாவது அர்ஷ் (தெய்வாசன பீடம்) வரையும் நிகழ்ந்தன. மேலும் நபியவர்கள் ஏழாவது வானத்தை கடந்த போது சித்ரா(ஏழாவது வானத்திலுள்ள ஒரு இலந்தை மரம்) அவர்களுக்கு முன்னால் உயர்த்தப்பட்டது. அதை கடந்து முஸ்த்தவாவு(சமநிலை)க்கு வந்து சேர்ந்தனர். அதன்பின் நபியவர்கள் ஜோதிமயமான உலகுக்குள் செலுத்தப்பட்டனர். அங்கே எழுபதாயிரம் ஒளியிலான திரைகளை கடந்து சென்றனர். ஒவ்வொரு திரைக்குமிடையே இருந்த தூரம் ஐநூறு வருடத்திற்குரிய தூரமாக இருந்தது. அதன்பின் நபியவர்களுக்கு முன்னால் பச்சை நிறத்தாலான விரிப்பொன்று தொங்க விடப்பட்டது. அவர்கள் அதையும் தாண்டி அர்ஷு(தெய்வாசன பீடத்)திற்கு வந்து சேர்ந்தனர். அர்ஷை (தெய்வாசன பீடத்தை ) தாண்டி செல்லவில்லை. அந்த இடத்தில் வைத்துத்தான் தனது இரட்சகனோடு காப கௌஸைனியை(இரு வளையங்கள் ஒன்றிணையும் நிலையை) பெற்றனர்' என்று கூறுகிறார்.

மேற்கண்ட அறிவிப்பில் ஷைகு சுலைமான் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவ்கள் அர்ஷை தாண்டி செல்லவில்லையென குறிப்பிட்டது அர்ஷை சிறப்பிக்கும் பொருட்டு கூறியதாகும். அதேநேரம் இமாம் இப்னு ஹஜர்

மக்கீ போன்றோரின் அறிவிப்புக்கள் அர்ஷையும் தாண்டி லாமக்கான் என்னும் குறிப்பற்ற எல்லைவரை எனக் கூறுகின்றனர். இதில் லாமக்கான் என்பது அர்ஷையும் தாண்டிய ஒன்றுதான். இதில் அர்ஷவரை என்பதுகுறிப்புக்குரிய எல்லையாகும். அதற்கப்பால் தான் லாமக்கான் என்னும் குறிப்பற்ற எல்லை ஆரம்பமாகிறது. அங்கே தேகம் என்பது இருக்காது. முடிவாகச் சொல்ல வேண்டுமாயின், இறைவன் தனது நேசரை எங்கேவரை கொண்டு செல்ல வேண்டுமென விரும்பினானோ அங்கேவரை கொண்டு சென்றான். இது, கொண்டு சென்றவனுக்கும் கொண்டு செல்லப்பட்டவனுக்கும் மட்டுமே தெரியும். இதுபற்றிய சைக்கினைக்குரிய இப்னுல் அரபி என்பாரின் அறிவிப்பொன்றை பாருங்கள்,....

அதாவது முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பாதக் கமலத்துடைய பயணத்தின் இறுதி எல்லைதான் அர்ஷாகும். அவ்வாறாயின் பயணித்த அப்பாதங்கள் அர்ஷோடு முடிவடைந்தன. அதன்பின் எல்லா குறிப்புக்குரியவைகளையும் நபியவர்கள் வளைத்துக் கொண்டனர். அதற்கப்பால் இடமென்று எதுவுமே இல்லை. அதன்பின் நபியவர்களின் இதயக்கமலம் பயணித்த எல்லை காப கௌஸைனியா(இரு வளையங்கள் ஒன்று சேருமிட)மாகும். இதற்குப் பின்னரும் அவர்கள் அர்ஷை (தெய்வாசன பீடத்தை) தாண்டிச் செல்லவில்லையென நீங்கள் சந்தேகிப்பீர்களாயின் இமாம் அலி வ◌ஃபா என்பார் கூறுவதைக் கேளுங்கள்,....

ليس الرجل من يقيده العرش وماحواه عن الافلاك والجنة والنار وان الرجل من نفذ بصره الى خارج لهذا الوجود كله

وهناك يعرف قدر عظمة موجده سبحانه وتعالى

'ஆண்மகன் என்பவர் அர்ஷை (தெய்வாசன பீடத்தை) யும், அதை சூழ இருப்பவைகளையும், வான மண்டலங்களையும், நரக சுவர்க்கங்களையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து வளைத்துக் கொள்பவரல்ல. மாறாக ஆண்மகன் என்பவர், அவருடைய பார்வை அனைத்து உலகங்களையும் கடந்து சென்றுவிட வேண்டும். அங்குதான் அவருக்கு உலகங்களை தோற்றுவித்தவனான மகத்துவமிக்கோனின் தத்துவம் வெளியாகும்'

அல்லாமா கஸ்த்தலானி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'மவாஹிபுல் லதுன்னியா' என்னும் நூலிலும் அல்லாமா ஸுர்கானி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'ஷரஹி'லும் இவ்வாறு கூறுகின்றனர்,...

الراجح (وكلمه الله تعالى بعينه) يقظة على الراجح (وكلمه الله تعالى فى الرفيع الاعلى) على سائر الامكنة وقد روي ابن عساكر

عن انس رضي الله عنه مرفوعا لما اسري لى قربني ربى حتي كان بيني وبينه قاب قوسين او ادنى. قد اختلف العلماء فى الاسراء

هل هو اسراء واحد او اسراء ان مرة بروحه وبدنه يقظة بروحه وجسده من المسجد الحرام الى المسجد الاقصي ثم مناما من

المسجد الاقصي الى فى العرش فالحق انه اسراء واحد بروحه وجسده يقظة فى القصة كلها والى هذا ذهب الجمهور من علماء المحدثين والفقهاء والمتكلمين. المعاريج عشرة (الى قوله) العاشر الى العرش. قد ورد فى الصحيح عن انس رضي الله عنه قال عرج بى جبريل الى سدرة المنتهى ودنا الجبار رب العزة فتدلى فكان قاب قوسين او ادنى مذيله على ما فى حديث شريك كان فوق العرش

'முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குரிய ஓர் தனித்தன்மையாதெனில், அவர்கள் இறைவனை முகக் கண்களால் விழிப்புடைய நிலையில் கண்டதாகும். இதுதான் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நம்பிக்கையாகும்.இன்னும் இறைவன் நபியவர்களோடு மிகவுயுர்ந்த ஸ்தானத்தில் வைத்து உரையாடினான். அந்த ஸ்தானம் குறிப்புக்குரிய ஸ்தானங்களுக்கெல்லாம் மிகவுயர்ந்த ஸ்தானமாக இருந்தது. பின்னும் சந்தேகமின்றி இப்னு அஸாகிர் என்பார், ஹழ்ரத் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு என்பாரின் மூலமாக முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாகக் கூறுகின்றனர். விண்ணேற்றத்திற்குரிய இரவன்று என் இறைவன் என்னிடம் எந்த அளவுக்கு நெருங்கினான் எனில், எனக்கும் அவனுக்குமிடையே இரு வளைவுகள் ஏன்! அதை விடக் குறைவான இடைவெளிதானிருந்தது. இந்நிலையில் இஸ்லாமிய அறிஞர்களுக்கிடையே விண்ணேற்றம் என்பது ஒன்றா அல்லது இரண்டா என்பதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஏனெனில் ஒருமுறை ஆன்மா மற்றும் தேகத்துடன் கூடிய விழிப்புடைய நிலையிலும், இன்னொரு முறை கனவிலோ அல்லது விழிப்பிலோ நபியவர்கள் தமது தேகத்தோடு மஸ்ஜிதுல் ஹரமி(மக்காவிலுள்ள க.்.பா என்னும் ஆலயத்தி)லிருந்து மஸ்ஜிதுல் அக்ஸா (ஜெரூஸலத்திலுள்ள ஆலயம்) வரையும் பின்னர் அங்கிருந்து அர்ஷ் என்னும் தெய்வாசன பீடம் வரையும் நிகழ்ந்துள்ளது எனக் கூறுகின்றனர். ஆனால் உண்மையாதெனில், இது ஒரே இரவில் நிகழ்ந்ததுதான். அதாவது மஸ்ஜிதுல் ஹரமி(மக்காவிலுள்ள க.்.பா என்னும் ஆலயத்தி)லிருந்து மிகவுயர்ந்த அர்ஷ் (தெய்வாசன பீடம்) வரை நடந்தவையனைத்தும் விழிப்புடைய நிலையில் தேகம் மற்றும் ஆன்மாவோடு நிகழ்ந்ததாகும். ஜும்ஹூர்கள் என்னும் அறிஞர்கள், நபிமொழி வல்லுனர்கள், சட்டக்கலை மேதைகள் மற்றும் அனைவரது நம்பிக்கையும் இதுதான். மேலும் புகாரி என்னும் நூலில், ஹழ்ரத் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு என்பார் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக அறிவிக்கின்றனர். என்னோடு ஜிப்ரயீல் சித்ரத்துல் முன்தஹா(ஏழாம் வானத்திலுள்ள இலந்தை மரம்) வரை முன்னேறினார். அங்கு வைத்து இறைவன் தனாவை (இறக்கத்தை)யும் ததல்லாவை (சமீபத்துவத்)தையும் அருளினான். அதனால் இடைவெளி இரு வளைவைவிட குறைந்து போயிற்று. இந்த ததல்லா(சமீபத்துவம்) என்பது அர்ஷையும் தாண்டியதாக இருந்தது'

அடுத்து அல்லாமா ஷிஹாபுத்தீன் குப்பாஜி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'நஸீமுர் ரியாழ்' என்னும் நூலில் அல்லாமா காழி இயாழ் ரஹிமஹுல்லாஹ் என்பாரைக் கொண்டு கூறுகின்றனர்,...

وردفي المعراج انه صلى الله عليه وسلم لما بلغ سدرة المنتهى جاءه بالرفرف جبريل عليه السلام فتناوله فطاربه الى العرش.

عليه يدل صحيح الاحاديث الاحاد الدالة على دخوله صلى الله عليه وسلم لجنة ووصوله الى العرش اوطرف العالم كما سيئاتى

كل ذالك بجسده يقظة

'மிஃராஜ் எனும் விண்ணேற்றத்தை குறித்த நபிமொழியில் வந்துள்ளதாவது, முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சித்ரத்துல் முன்தஹாவு(ஏழாம் வானத்திலுள்ள இலந்தை மரத்து)க்கு வந்து சேர்ந்த போது, ஜிப்ரயீல் ரஃப் ரஃப்(ஒரு வகை விரிப்)பை கொண்டு வந்தார். அது நபியவர்களை சுமந்து கொண்டு அர்ஷ் (தெய்வாசன பீடம்) வரை பறந்தது. இது போன்றே ஒற்றையான நபிமொழி உறுதிப்படுத்தும் விஷயம் யாதெனில், நபியவர்கள் விண்ணேற்றத்துடைய இரவன்று சுவர்க்கத்திற்கு சென்றனர். அதன்பின் அர்ஷ்(தெய்வாசன பீடம்)வரை சென்றனர். அல்லது உலகங்களின் இறுதி எல்லை வரை சென்றனர். அதற்கப்பால் குறிப்பற்ற எல்லையாகும். இவையனைத்தும் விழிப்புடைய நிலையில் தேகம் மற்றும் ஆன்மாவோடு நிகழ்ந்தது.

இதேபோல முஹ்யித்தீன் இப்னு அரபி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'புதுஹாத்துல் மக்கிய்யா' என்னும் நூலின் 316ஆவது பாடத்தில்,...

اعلم ان رسول الله صلى الله عليه سلم لما كان خلقة القرآن وتخلق بالاسماء وكان الله سبحانه وتعالى ذكر في كتابه العزيزانه

تعالى التوي على العرش على طريق التمدح والثناء على نفسه اذكان العرش اعظم الاجسام فجعل لنبيه عليه الصلوة والسلام

من هذا الاستواء نسبة على طريق التمدح والثناء به عليه حيث كان اعلى مقام ينتهي اليه من اسري به من الرسل عليهم

الصلوة والسلام وذالك يدل على انه اسري به صلى الله عليه وسلم بجسمه ولوكان الاسرابه رؤيا لما كان الاسراء ولا الوصول

الى هذا المقان تمدحا ولا وقع من الاعراب انكار على ذالك

'அறிந்துகொள்! முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குணம் யாவும்குர்ஆனாகவே இருந்தது. அத்துடன் அவர்கள் நாயகத்தன்மைக்குரிய திருப்பெயர்களின் பண்புகளையும் தமக்குள் கொண்டிருந்தனர். இனி இறைவன் தனது வேதத்தில் தன்னுடைய பண்பின் புகழைக் கொண்டு அர்ஷ் என்னும் தெய்வாசன பீடத்தில் நிலைத்ததாகக் குறிப்பிடுகிறான். ஆதலால் அவன் தனது நேசரும் அதே பண்பின் புகழை கொண்டு அர்ஷ் வரை மேலேறியதைப் புகழுகிறான். காரணம் அர்ஷ் என்பது மிக உயர்ந்த ஸ்தானமாகும். அந்த இடத்தில் தான் இறைதூதர்களின் ஏற்றம் முடிவடைகிறது. அத்துடன் அதில் நபியவர்களின் ஏற்றம் தேகத்துடன் அமைந்திருந்தது என்பதும் உறுதியாகிறது. அவ்வாறின்றி அது கனவாக

இருந்திருந்தால் அர்ஷ் வரை முன்னேறுதல் என்பது புகழத்தக்க ஒன்றாக இருந்திருக்காது. தகுதியற்றோர் தான் இதனை மறுக்கின்றனர்' என்று கூறுகின்றனர்.

**முஹம்மத் நபியின் சமூகத்தாரது சிறப்பு**

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமூகத்தார்தான் எல்லா சமூகத்தாரை விட மிகச் சிறந்த சமூகத்தாராகும். எவ்வாறு நபியவர்கள் எல்லா இறைத்தூதர்களை விட உயர்ந்தவர்களோ, அவ்வாறு அவர்களின் சமூகத்தாரும் எல்லா சமூகத்தாரை விடவும் மிகச் சிறந்த சமூகத்தாராகும். குர்ஆனில் இதைப் பற்றி,....

كنتم خير امة اخرجت للناس

'வெளிப்படுத்தப்பட்ட சமூகத்தார் அனைவரிலும் நீங்கள்தான் மிகச்சிறந்த சமூகத்தார்' என்றும், நபிமொழியில்,...

'உங்களின் ஆயட்காலம் முந்தைய சமூகத்தாரின் ஆயட்காலத்திற்கு முன், மாலை மங்கி சூரியன் அஸ்த்தமிப்பதற்குரிய நேரத்தின் அளவுதான். மிகக்குறுகிய காலஅளவே வாழ்ந்தாலும் அவர்களைவிட நீங்கள் அதிகமான நன்மைகளையும் பலனையும் பெறுவீர்கள்' எனக் கூறப்பட்டுள்ளது.

மேலும் யூத, கிறிஸ்துவர்களுக்கும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமூகத்தாருக்கும் இடையேயுள்ள நிலைமைக்குரிய உதாரணமானது,....

ஒருவர் பல வேலையாட்களை பணியில் அமர்த்தினார். அவர்களில் சிலருக்கு காலையிலிருந்து மதியம் வரை வேலை செய்வதற்கு ஒரு கைராத் (ஒரு ரூபாயில் பணிரெண்டில் ஒரு பாகம்) கூலி என்பதாக நிர்ணயிக்கப்பட்டது. வேறு சிலர் மதியத்திலிருந்து மாலை வரை வேலை செய்ய வேண்டுமென்றும், அதற்கும் ஒரு கைராத் கூலியென்றும் நிர்ணயிக்கப்பட்டது. இவ்வாறே இன்னும் சிலருக்கு மாலையிலிருந்து சூரியன் அஸ்தமிக்கும் வரை வேலையென்று நிர்ணயிக்கப்பட்டு அதற்கு இரண்டு கைராத் கூலியென நிர்ணயிக்கப்பட்டது.

இதை கண்டு முந்தைய இரு கூட்டத்தாரும் வெகுண்டவர்களாக, அதிக நேரம்வரை வேலைசெய்யும் எங்களுக்கு ஒரு கைராத் மட்டும்தான் கூலி. சிறிது நேரம் மட்டுமே வேலை செய்யும் அவர்களுக்கு மட்டும் இரண்டு கைராத் கூலியா? என்று கேட்க, அதற்கந்த முதலாளி, உங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குரிய கூலியை நீங்கள் பெறுகிறீர்கள். ஆனால் குறைந்தகால அளவு மட்டுமே வேலை செய்யும் அவர்களுக்கு நாம் நமது பேரருளை கொண்டு இரண்டு கைராத்தை கூலியாகக் கொடுக்கிறோம் என்று கூறினார்.

இந்த உவமானத்தை கொண்டு முதல் கூட்டம் என்பது யூதர்களாகும். இரண்டாவது கூட்டம் என்பது கிறித்துவர்களாகும். மூன்றாவது கூட்டம் என்பது இஸ்லாமியர்களாகும். பிறப்பில்

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமூகத்தார் எல்லோரையும் விட இறுதியானவர்களாக இருந்தாலும், அதிகமான நன்மைகளையும் சிறப்புக்களையும் பெறுவதில் இவர்கள்தான் முதன்மையான இடத்தைப் பெறுகின்றனர். மேலும் எப்படிப்பட்ட கல்வியும் ஞானமும் இவர்களுக்கு கிடைத்ததெனில் இது வேறு யாருக்குமே வாய்க்கவில்லை.

**முஹம்மத் நபியின் சட்டமே உயர்ந்தது**

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் நடைமுறைப்படுத்திக் காட்டப்பட்ட மார்க்கம் தான் எல்லா இறைதூதர்களின் மாhக்;கத்தை விட மிக உன்னதமானதும் நிறைவுக்குரிய நிலையை கொண்டதுமாகும். பின்னும் இந்த மார்க்கம் மற்றெல்லா மார்க்கங்களையும் மாற்றியமைத்து அவைகளை ஒன்றுக்கும் உதவாதவைகளாக ஆக்கி விட்டது. எவ்வாறு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கடைசி தூதராக ஆனார்களோ, அவர்களுக்குப் பின் வேறு எந்த தூதரும் வருவதற்குரிய சாத்தியம் அறவே இல்லாமலாக்கப்பட்டு விட்டதோ, அவ்வாறே அவர்களின் வாழ்வியலுக்குரிய நடைமுறை சட்டத்திற்கு (ஷரீஅத்திற்கு)ப்பின் வேறு எந்த சட்டமும் இப்பூமியில் நிற்காது. இதை குறித்து முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே,....

بعثت لاتمم مكارم الاخلاق

'நற்குணங்கள் அனைத்தையும் நிறைவாக்குவதற்காகவே நான் அனுப்பப்பட்டேன்' என்பதாகக் கூறுகின்றனர்.

பாருங்கள்! மூஸா நபியவர்களின் வாழ்வியலுக்குரிய நடைமுறை சட்டத்தில் இறுக்கமும் கடுமையும் மிக அதிகமாக இருந்தன. ஒருவர் பாவமன்னிப்பை பெறுவதற்காக பல உயிர்களை பலிகொடுக்க வேண்டியிருந்தது. தூய்மையான பொருட்கள் கூட தடை செய்யப்பட்டிருந்தன. போரில் எதிரிகளிடமிரு;நது கிடைக்கும் பொருட்களை உபயோகிக்கக் கூடாதென தடை விதிக்கப்பட்டிருந்தது. சில குற்றங்களுக்கு அவர்கள்; மீது உடனடியாக இறைவேதனையும் இறக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மகத்துவமும் கடுமையும் எந்த அளவுக்கு இருந்ததெனில், அவர்களுடைய சமூகத்தார் அவர்களை ஏறெடுத்துப் பார்க்கக் கூட துணிவற்றவர்களாக இருந்தனர்.

இவ்வாறே ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வாழ்வியலுக்குரிய நடைமுறை சட்டத்தில் இரக்கமும் எளிமையும் மிக அதிகமாக இருந்தன. அவர்களுடைய சட்டத்தில் எளிமையும் இரக்கமும் அளவுக்கதிகமாக இருந்ததால் கொலை கொள்ளை கூட தடுக்கப்படவில்லை. சிலபோதுதான், கொலை தவறான ஒன்றென கூறப்பட்டு வந்தது. இன்ஜீல் வேதத்தில், ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தை காட்டு என்றும், எவரேனும் உனது ஆடையை பிடித்து இழுத்தால் அவருக்கு உனது முழு ஆடையையும் கொடுத்து விடு என்றும், ஒரு மைல் தொலைவிற்கு உன்னை துன்புறுத்தினால் அவனோடு இரண்டு மைல் தொலைவுக்கு நீ செல்வதோடு அவனுக்கு உபகாரமும் செய் என்றும் கூறப்பட்டது.

ஆனால் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது பரிசுத்தமான தகுதியை கொண்டு அக்குறைபாடுகள் அனைத்தையும் நிறைவாக்கினர். இன்னும் அவர்களுக்குள் தாமச குணமும் தீவிர குணமும் ஆகிய இரண்டுமே சமநிலையில் இருந்தன. இதன்மூலம் இரக்கமும் கடுமையும் ஒன்றாக இணைந்து விட்டிருந்தன. ஒருபக்கம் மூஸா நபியவர்களின் கடுமையும் இன்னொரு பக்கம் ஈஸா நபியவர்களின் இரக்கமும் என ஒவ்வொன்றும் அதனதன் தகுதிக்கேற்றவாறு பூரணமாக இருந்தன. அதன்பின் அவையனைத்தும் நீதத்துடைய பார்வையை கொண்டு வெளிப்பட்டன. இதுபற்றி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,...

انا ضحوك القتول

'நான் எப்போதும் புன்சிரிப்புடன் இருக்கிறேன். எனது அப்புன்சிரிப்பால் என்மீது அவர்கள் தமது உயிரை அர்ப்பணிக்கின்றனர்' என்று கூறுவதால் அவர்களில் நற்பண்புகள் அனைத்தும் இணைந்த நிலையில் அவர்கள் ஒரு பரிபூரணமானவர்களாக இருந்தார்கள் என்பதை இது நமக்குத் தெளிவுபடுத்துகிறது. மேலும் இறைவன் தனது வேதத்தில்,....

ويحل لهم الطيبات ويحرم عليهم الخبائث

'இறைவன் அவர்களுக்கு பரிசுத்தமானவைகளை அனுமதித்து தூய்மையற்றவைகளை தடை செய்கிறான்'

என்றும் கூறுவதால் இவ்வசனத்தில் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நேர்மை, நீதி மற்றும் வாழ்வியலுக்குரிய சட்டங்களின் தனித்தன்மை நமதுக்கு எடுத்துக் காட்டப்படுகின்றன. அதுமட்டுமின்றி நபியவர்களின் பழக்கவழங்கங்கள், அவர்களின் மகத்துவம், அவர்களது நீதிதவறா சட்டங்கள் நடுநிலை போன்றவை அனைத்தும் நம்முன் பொங்கி பிரவகிக்கின்றன.

**நபித்தோழர்கள்**

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் தோழர்கள் எல்லா சமூகத்தாரை விடவும் மிகமிக உயர்ந்தவர்களும் மேன்மைக்குரியவர்களுமாவர். இறைவன் இவர்களை தமது நபியவர்கள் மீது கொண்டிருந்த தோழமைக்காகவும், செய்த உபகாரத்திற்காகவும் விரும்பினான். மேலும் இஸ்லாத்தின் மகத்துவமும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமூகத்தாருடைய சிறப்பும் இவர்களால் தான் உயர்ந்தோங்கிற்று. இதனாலேயே இவர்கள் நபியவர்களின் தோழமைக்கும் பணிவிடைக்கும் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்களுக்கும் இவர்கள் தகுதியுடையவர்களாக இருந்தனர். மேலும் இவர்களது மகத்துவம் மற்றும் சிறப்பை குறித்து பேசப்பட்டுள்ள நபிமொழிகளை பார்க்கும் போது இவர்கள்

பெற்ற நன்மையை போன்றோ, அல்லது இவர்களின் தகுதிக்கோ இச்சமூகத்தை சேர்ந்த எவராலும் உயர முடியாது என்பதை திண்ணமாகச் சொல்லலாம்.

இன்னும் உஹத் மலையளவு தங்கத்தை அறவழியில் செலவு செய்தாலும் அத்தோழர்கள் செலவு செய்த அரை திர்ஹத்திற்குக் கூட அது ஈடாகாது என்பதாக முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகின்றனர். இதனை 'கைரல் கரூன கர்னீ (என் காலத்ததை சேர்ந்தவர்களே சிறந்தவர்கள்) என்னும் நபிமொழியும் வெளிப்படுத்துகிறது. இதையன்றி இன்னும் பல நபிமொழிகள் இவர்களின் மகத்துவத்தை நமக்கு விளக்கிக் காட்டுகின்றன. அனைத்தையும் விட இவர்கள் நபியவர்களை தமது கண்கணால் கண்டனரே! அதைவிட நமக்கு வேறு என்ன ஆதாரம் வேண்டும்?

அதுமட்டுமா? இவர்கள் தமது நபியின் பரிசுத்தமான தோழமையை பெற்றவர்கள். வேதத்தையும் மார்க்கத்தையும் அவர்களின் அழகுறும் நாவால் கேட்டவர்கள். இன்னும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அமுத வாயைக் கொண்டே அனுமதிக்குரியவை எவை? தடை செய்யப்பட்டவை எவை? நன்மை எவை? தீமை எவை? என்பதையும் நேரடியாக தெரிந்து கொண்டவர்கள். இன்னும் தமது உடல் பொருள் ஆவி ஆகிய அனைத்தையும் தமது நபிக்காக அர்ப்பணித்தவர்கள். மேலும் இவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தார்களெனில், தமது தூதரை எப்படிப்பட்ட விசுவாசத்திற்குரிய நிலையில் பார்த்தனரோ அதே விலாசத்துடனேயே இவ்வுலகை விட்டும் சென்றவர்கள்.

இனி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விசுவாசத்தோடு ஒருமுறை பார்ப்பதுதான் ஒருவரை 'ஸஹாபி'யாக (தோழராக) ஆக்குகிறது. ஆனால் வேறுசில அறிஞர்கள், தோழராவதற்கு நபியவர்களுடைய தோழமையோடு அவர்களுடைய சன்னிதானத்திலும் பங்கெடுத்திருக்க வேண்டுமென்றும், போரில் பங்கு பற்றியிருக்க வேண்டுமென்றும், குறைந்தபட்சம் ஒரு ஆறுமாதமாவது அவர்களது சன்னிதானத்தில் இருந்திருக்க வேண்டுமென்றும் கூறுகின்றனர். ஏனெனில் ஒரேயொரு முறை பார்ப்பதை கொண்டோ அல்லத ஒரேயொரு வினாடி நேரம் அவர்களின் சன்னிதானத்தில் அமர்ந்திருப்பதை கொண்டோ தோழமை என்பது கிடைக்காது எனக் கூறுகின்றனர்.

அதேநேரம் எந்தச் சிறப்பையும் நன்மையையும் குறித்து பேசப்பட்டதோ அது அத்தோழர்களுக்கு மட்டுமே சொந்தமாக்கப்பட்ட ஒன்றேயன்றி பொதுவானதல்ல. பின்னும் பெரும்பான்மையான அறிஞர்களின் தீர்ப்பானது, யார் ஒரேயொரு பார்வையானது தனது நபியை பார்த்தாரோ அவரும் அச்சிறப்புக்குரியவராகி விட்டார் என்பதே. காரணம் ஒருவர் நபியவர்களின் திருமுகத்தை ஒருமுறை பார்ப்பதும், அவர்களின் சன்னிதானத்தில் அமர்வதும் மிகப்பெரும் விஷயமாகும். அது பெரும் பெரும் துன்பங்களுக்கெல்லாம் வடிகாலாகும். இதனை இன்னொருவர் நாற்பது வருடமானாலும் பெற்றுக் கொள்ள முடியாது. இன்;னும் இதுபற்றிய விரிவான விளக்கத்தை பார்க்க விரும்புவோர் 'குவ்வத்துல் குலூப்' என்னும் நூலை பார்க்க.

**நபித்தோழர்களின் மகத்துவம்**

எத்தனை இஸ்லாமிய அறிஞர்கள் நபித்தோழர்களின் மகத்துவத்தை குறித்து எழுதியுள்ளார்களோ அவர்களில் ஹழ்ரத் அபூ அம்ர் பின் அப்துல் பர்ரு ரஹிமஹுல்லாஹ் என்பாரின் பெயரே மிகவும் பிரபலமாகக் காணப்படுகிறது. இவர்கள் நபிமொழிக்குரிய அறிஞர்களில் மிகவுயர்ந்த தகுதிக்குரியவர்களாக கருதப்படுகின்றனர். இவர்கள் நபித்தோழர்களுக்குப் பின் அவர்களுடைய தகுதியை வேறுயார் பெற்றுக் கொள்ள முடியும்? எனக் கேட்பதன் மூலம் வாதிக்கின்றனர். இதுபற்றிய நபிமொழியில்,...

مثل امتي كمثل مطر لايدري اوله خير ام آخره

'எனது சமூகத்தாருக்குரிய உவமையானது அந்த மழைதுளிகளை போலுள்ளது. அந்த மழையின் முதல் துளியா? அல்லது கடைசித் துளியா? எது சிறந்ததென்று தெரியாதென நபியவர்கள் கூறுகின்றனர்'

இதுபோன்றே மற்றோர் நபிமொழியில்,...

'ஒரு நபித்தோழர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நோக்கி,. அண்ணலே! நாங்கள் தங்களை விசுவாசித்தோம். அறப்போரிலும் தங்களோடு பங்கு பற்றினோம். என்ன? எங்களை விட சிறந்த கூட்டத்தினராக வேறுயாரும் இருக்க முடியுமா? என்று கேட்க, அதற்கு நபியவர்கள், ஆம். உங்களைவிட சிறந்த கூட்டத்தார் என்னை பார்க்காமலேயே என்மீது விசுவாசம் கொள்வார்கள் என்றனர்'

ஹழ்ரத் இப்னு மஸ்வூத் ரழியல்லாஹு அன்ஹு என்பர் கூறுகின்றனர். யார் நபியவர்களை கண்டாரோ அவர்மீது நபியவர்களின் மகத்துவம் வெளிப்படுவதோடு அது வெளிச்சமாகவும் ஆகிவிடும். இனி நபியவர்களை யார் பார்க்காமலேயே விசுவாசம் கொள்கிறார்களோ அவர்களின் சிறப்பு இன்னும் அதிகமானதாகும். இந்நிலையில் 'வேத வியாக்கியானிகளில் சிலர் மறைவானவற்றை கொண்டு விசுவாசம் கொள்வார்கள்' என்னும் வேத வசனத்திற்கு இதுதான் அர்த்தமென்றும் கூறுகின்றனர்.

மேலும் ஒரு நபிமொழியில் கூறப்பட்டுள்ளதாவது,...

'இறுதி காலத்தில் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறையை பேணி வாழுதல் என்பது உள்ளங்கையில் நெருப்பை எடுத்துச் செல்வதற்கு ஒப்பான ஒன்றாக இருக்கும். அந்நிலையில் எவரேனும் நபியவர்களின் வழிமுறையை பேணி வாழுவாராயின் அவருக்கு ஐம்பது நபர்களுக்கு ஒப்பான நன்மை கிடைக்கும் என நபியவர்கள் சொல்ல அதுகேட்ட ஒருவர், அண்ணலே! ஐம்பது நபர்களின் நன்மை என்பது எங்களிலுள்ள ஐம்பது நபர்களா? அல்லுது அவர் வாழுகின்ற காலத்தை சேர்ந்த ஐம்பது நபர்களா? எனக் கேட்க, உங்களை போன்ற ஐம்பது நபர்களென்று கூறினர்'

**நாற்பெரும் கலீபாக்கள்**

குலபாயெ ராஷிதீன்கள் எனப்படும் அபூபக்கர், உமர், உதுமான், அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகிய நால்வரும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிரதிநிதிகளாவர். எல்லா நபித்தோழர்களை விடவும் மிகவும் சிறப்புக்கு உரியவர்கள். இஸ்லாமிய மார்க்கத்தில் இந்நால்வரின் சிறப்பும் மகத்துவமும் எந்த அளவுக்குப் பேசப்படுகிறதெனில், இவர்களின் தகுதிக்கு வேறு எந்த நபித்தோழரையும் நம்மால் ஒப்பு நோக்க முடியாது.

**நாற்பெரும் கலீபாக்களின் சிறப்புக்கள்**

இந்நான்கு தோழர் பெருமக்களின் சிறப்பையும் அவர்களது கிலாபத்தின் வரிசையைக் கொண்டே கணிக்கப்படுகிறது. இன்னும் அச்சிறப்பின் வாயிலாக அவர்களில் நன்மையின் மிகுதத்தையும் பார்க்கிறோம். எனவே இவ்விரு ஸ்தானங்களிலும் முந்திய ஸ்தானமானது, முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின் அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களே முதல் கலீபா என்பதாக அங்கீகரிக்கப்படுகின்றனர். அதற்குப் பின் ஹழ்ரத் உமர் அதற்கு பின் ஹழ்ரத் உதுமான் அதற்குப் பின் ஹழ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹும் அவர்களாகும். இந்த வரிசையும் சிறப்புக்குமுரிய சட்டப்பிரச்சனை இஸ்லாமியரிடையே விசுவாசத்திற்குரிய பிரச்சனைகளில் நின்றுமுள்ள ஒன்றாகும்.

**அஷ்ரத்துல் முபஷ்ஷராஹ்**

நாற்பெரும் கலீபாக்களின் மகத்துவத்திற்குப் பின் அஷ்ஷரத்துல் முபஷ்ஷராஹ் எனப்படும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் சுவர்க்கத்தை குறித்து சுபச் செய்தி தரப்பட்ட பத்து நபர்களின் மகத்துவம் பெரிதெனப் பேசப்படுகிறது. அதை குறித்து நபியவர்கள்,....

ابوبکر فی الجنة وعمر فی الجنة وعثمان فی الجنة وعلی فی الجنة وطلعة فی الجنة والزبیر فی الجنة وعبد الرحمن بن عوف فی الجنة

وسعد بن ابی وقاص فی الجنة وسعید بن زید فی الجنة وابوعبیدة ابن الجراح فی الجنة

'அபூபக்கர், உமர், உதுமான், அலி, தல்ஹா, ஸுபைர், அப்துர் ரஹ்மான் பின் அவ்ப், ஸஃத் பின் அபீ வக்காஸ், ஸயீத் பின் ஸைத், உபைதா பின் ஜர்ராஹ் ரலியல்லாஹு அன்ஹும் போன்றோர் சுவர்க்கவாதிகளாகும் எனக் கூறியுள்ளனர்'

இப்பத்து தோழர்களும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அனைத்து சமூகத்தாரை விட மேன்மையானவர்களும் சிறப்புக்குரியவர்களுமாவர். இவர்கள் மக்காவை விட்டு மதீனாவுக்கு இடம்பெயர்ந்த முஹாஜிரீன்களின் தலைவர்களாவர். அத்துடன் நாதர் நபியவர்களின் உறவினர்களும் கூட.

மேலும் இவர்களுடைய மகத்துவத்தையும் இஸ்லாத்திற்காக இவர்கள் செய்த தியாகத்தை போன்றும் வேறு யாரிடத்திலும் பார்க்க முடியவில்லை. இவர்கள் சுவர்க்கவாதிகள் என்பது

இவ்வுலகிலேயே திட்டப்படுத்தப்பட்ட ஒன்றாகும். இவ்வாறு நாம் கூறுவதைக் கொண்டு மற்றவர்களெல்லாம் சுவர்க்கத்தை கொண்டு திட்டப்படுத்தப்படாதவர்கள் என்பது கருத்தல்ல. ஏனெனில் இவர்களையன்றி மற்றவர்களையும் நபியவர்கள் சுவர்க்கவாதிகளெனக் கூறியுள்ளனர். அவர்களில் அன்னை பாத்திமா, இமாம் ஹஸன், இமாம் ஹுஸைன், அன்னை கதீஜா, அன்னை ஆயிஷா, ஹழ்ரத் ஹம்ஸா, ஹழ்ரத் அப்பாஸ், ஹழ்ரத் ஸல்மான், ஹழ்ரத் ஸுஹைல், ஹழ்ரத் அம்மார் பின் யாஸிர் ரலியல்லாஹு அன்ஹும் போன்றோரை குறிப்பிடலாம்.

**அஹ்லெ பத்ரு**

மேற்கண்ட பத்து தோழர் பெருமக்களுக்குப் பின் பத்ரு என்னும் போரில் பங்கேற்றோர் சிறப்பை பெறுகின்றனர். இப்போர் ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டில் நடைபெற்றது. இப்போருக்குப் பின்னரே இஸ்லாம் அரபுலகில் மிகவும் பிரபலமடைந்தது. மேலும் இறைவன் தனது தூதருக்கு செய்து கொடுத்திருந்த வாக்குறுதியும் இப்போரின் போதுதான் முழுமையாக நிறைவேறிற்று. இஸ்லாத்தின் மிக மோசமான வைரிகள் எனப்பேசப்பட்ட குறைஷிகளின் தலைவர்களான உத்பா, ஷைபா, அபூஜஹ்ல் போன்றோர் இப்போரில்தான் கொல்லப்பட்டனர்.

இப்போரில் ஐயாயிரம் வானவர்கள் இஸ்லாமியர்களின் உதவிக்காக வருகைதந்து முறைப்படி யுத்தமும் செய்தனர். இப்போரில் பங்கு பற்றியவர்கள் மொத்தம் 313பேர்கள். இவர்களனைவருமே சுவர்க்கத்தைக் கொண்டு உறுதி செய்யப்பட்டவர்களாக இருக்கின்றனர். இவாக்ளின் மாண்பினைக் குறித்து,...

ان الله قد اطلع على اهل بدر فقال اعملوا ما شئتم فقد غفرت لكم

'திடனாக பத்ருடையோர் இறைவன் முன் தமது செயல்பாட்டினை சமர்ப்பித்த போது இறைவன் அவர்களை நோக்கி, நீங்கள் விரும்பியதை செய்யுங்கள். நான் உங்களை மன்னித்து விட்டேன் என்று கூறினான்' இவ்வாறே,...

لن يدخل الله النار رجلا شهد بدرا والحديبية

'பத்ரு போரிலும் ஹுதைபிய்யா உடன்படிக்கையிலும் பங்காற்றியோரை இறைவன்; கண்டிப்பாக நரகத்திற்குள் நுழைக்க மாட்டான்' என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும் பத்ருப் போரில் எத்தனை வானவர்கள் பங்கெடுத்துக் கொண்டார்களோ அவர்களின் சிறப்பு மற்றெல்லா வானவர்களை விடவும் உன்னதமானதாகும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**அஹ்லெ உஹத்**

பத்ருப் போரையடுத்து உஹதுப் போரில் பங்காற்றியோரின் சிறப்பும் மகத்தானதாகும். இப்போர் ஹிஜ்ரி நான்காம் ஆண்டு நடைபெற்றது. இப்போரில் பங்கெடுத்துக் கொண்டோர் ஒருபெரும்

சோதனையும் துன்பத்தையும் எதிர் கொண்டு கடக்க வேண்டியதிருந்தது. முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முபாரக்கான பல்லும் இப்போரில்தான் தகர்ந்தது. இதில் முழு பல்லும் தகர்க்கப்பட்டதாகவோ அல்லது வேரோடு விழுந்து விழுந்து விட்டதாகவோ யாரும் நினைக்க வேண்டாம். மாறாக பல்லின் ஒருசிறு பகுதி மட்டும்தான் தகர்ந்தது.

இப்போரில்தான் நபியவர்பளின் சிறியதந்தை ஹம்ஸா ரழியல்லாஹு அன்ஹு என்பாரும் பங்கேற்றிருந்தனர். இவர்களோடு சேர்த்து மொத்தம் எழுபது தோழர்கள் உயிர் தியாகம் செய்தனர். இப்போருக்கு இறைமறுப்பாளர்களின் தரப்பிலிருந்து தலைமை தகர்த்தாவாக அபூசுப்யான் ரலியல்லாஹு அன்ஹு என்பார் பங்கேற்றிருந்தார். இவர் பத்ருப் போரில் தோல்வியடைந்த போது, இதற்கு பழிக்குப்பழி வாங்காதவரை நான் எனது மனைவியோடு உறவு கொள்ளவோ குளிக்கவோ மாட்டேனென்று சபதம் செய்திருந்தார். அதன்பின் நாதர் நபியவர்கள் மக்காவை வெற்றி கொண்டபோது, இவரும் இவரது மைந்தரும் முஆவியா ரலியல்லாஹு அன்ஹுவும் இஸ்லாத்தைத் தழுவினர்.

**பைத்துர் ரிழ்வான்**

பைத்துர் ரிழ்வான் என்பது ஹுதைபிய்யா என்னுமிடத்தில் வைத்து முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் அவர்களின் தோழர் பெருமக்கள் செய்து கொடுத்த வாக்குறுதிக்குச் சொல்லப்படுகிறது. இச்சம்பவத்தை குறித்து இறைவன் தனது வேதத்தில்,....

لقد رضي الله عن المؤمنين اذ يبايعونك تحت الشجرة

'எவர்கள் உம்மிடம் மரத்திற்குக் கீழே வாக்குறுதி செய்து கொடுத்தார்களோ அவர்களை இறைவன் திருப்தி கொண்டான்' என்றும், நபிமொழியில்,...

لايدخل النار من بايعني تحت الشجرة

'யார் எனது கரத்தில் ரிழ்வானுடைய மரத்தின் கீழ் வாக்குறுதி செய்து கொடுத்தார்களோ அவர்கள் நெருப்பில் நுழையமாட்டார்கள்'

என்றும் கூறப்பட்டுள்ளது. இவர்களனைவரும் சுவர்க்கவாதிகளாகும். மேலும் இச்சிறப்புக்குரிய இவ்வரிசை தொடரை நாம் அபூ மன்சூர் அதீமி ரஹிமஹுல்லாஹ் என்பாரை கொண்டு எடுத்துத் தந்திருக்கிறோம். இனி மேற்கண்ட நபித்தோழர்களை தவிரவுள்ள மற்ற நபித்தோழர்களின் படித்தரங்கள், உயர் நிலைகள், சிறப்புக்கள் போன்றவை நபிமொழிக்குரிய நூல்களில் விரிவாகக் காணப்படுகின்றன. இதன்றி வேதத்தில்,....

ان اكرمكم عند الله اتقاكم

'நிச்சயமாக உங்களில் சிறந்தவர் தமது பயபக்தியால் சிறந்தவரே'

எனக் கூறப்பட்டிருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இதில் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அருமை திருமகளார் அன்னை பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் பிள்ளைகள்தான் எல்லோரையும் விடச் சிறந்தவர்களாகுமென அனைவராலும் ஏகோபிக்கப்பட்டுள்ள கருத்தை நாமும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**அன்னை பாத்திமா**

இவர்கள் சுவர்க்கத்துப் பெண்கள் அனைவருக்கும் தலைவியாவார். இவ்வாறே இவரது பிள்ளைகளான ஹஸன், ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹுமா ஆகிய இருவரும் சுவர்க்கத்திலுள்ள வாலிபர்கள் அனைவருக்கும் தலைவர்களாவார்கள்.

**கிலாபத்**

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின் கிலாபத் (குடியாட்சி) முப்பது வருடம்வரை மட்டுமே நீடித்திருந்தது. அதன்பின் முடியாட்சி தோன்றி உமராக்(தலைவர்)கள் என்போர் ஆட்சி செய்யத் துவங்கி விட்டனர். இதுகுறித்து நபிமொழியில்,....

الخلافة بعدي ثلاثون سنة ثم يصير بعدها ملكا عضوضا

'எனக்குப் பின் குடியாட்சி முப்பது வருடங்கள் வரை நீடித்திருக்கும். அதன்பின் எப்படிப்பட்ட ஆட்சி தோன்றும் எனில், அதனுடைய விஷத்தால் மிக மிகக் குறைவானவர்களே நிம்மதி பெறுவார்கள்' என நபியவர்கள் கூறுகின்றனர்.

நான்காம் கலீபா ஹழ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹஹு அவர்களின் வீர மரணத்திற்குப் பின் கிலாபத்திற்குரிய முப்பது வருடங்களும் முடிவடைந்து விட்டதாகக் கூறுவது சரியல்ல. காரணம் அப்போது இருபத்தொன்பது வருடங்களும் ஆறு மாதங்கள் மட்டுமே முடிவடைந்திருந்தன. மீதமிருந்த ஆறு மாதமும் அலியவர்களின் மைந்தர் ஹழ்ரத் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு என்பார் கலீபாவாக இருந்தனர். அவரது மறைவோடு முப்பது ஆண்டுகள் முழுமையடைந்தது. அதன்பின் முஆவியா ரலியல்லாஹு அன்ஹு என்பார் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது அவர் கலீபாவாக இருக்கவில்லை. மாறாக அமீராகவும் அரசராகவும்தானிருந்தார். இந்நிலையில் அமீர்களாக இருந்த சில அப்பாஸியாக்களின் ஆட்சியாளர்களை, சிலர் கலீபாக்களின் வரிசையில் கொண்டு வந்து சேர்க்கப் பார்க்கின்றனர். இது சரியல்ல. மேலும் இவர்கைள கலீபாக்களென்று அப்போதிருந்த மக்களும் பழக்க தோசத்தில்தான் அழைத்து வந்தனர்.

மேலும் திடஞானிகளில் ஒருவரான கமால் பின் ஹுமாம் ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'மஸாயீரா' என்னும் நூலில், உண்மையாளர்கள் அனைவரும், முஆவியா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு அரசராகத்தான் இருந்தரென ஒருமித்து கூறுகின்றரென்றும், அஹ்லெ சுன்னத் என்னும் பிரிவை சார்ந்தத சில ஞானவான்கள் மட்டும் இப்பிரச்சனையில் கருத்துவேறுபாடு கொள்கின்றனரென்றும், ஏனெனில் இமாம் ஹஸன் அவர்களே முஆவியாவை கலீபாவாக ஏற்றுக் கொண்டு விட்டதால் நாமும் அதை அங்கீகரிக்க வேண்டுமென்றும் கூறுகின்றனர்.

**ஹழ்ரத் முஆவியாவின் முடிவு**

இப்பிரச்சனையில் அஹ்லெ சுன்னத்துடைய பிரிவை சேர்ந்த அறிஞர்களின் வழிமுறை என்னவெனில், முஆவியா அவர்களின் செயல்பாடுகளனைத்தும் அப்போது கலீபாவாக இருந்த அலியவர்களின் போக்குக்கு மாற்றமானதாகவும், துரோகத்திற்குரிய ஒன்றாகவும்தான் இருந்ததென கணிக்கப்பட்டாலும் கூட, அதை காரணமாக வைத்து முஆவியா ரலியல்லாஹு அன்ஹு அவர்களை சாபத்திற்குரியவராக ஆதாரப்படுத்தக் கூடாதென்பதே. ஏனெனில் இவ்விஷயத்தில் இஸ்லாமிய முன்னோடிகளோ சுயஆய்வுக்குரிய அறிவாளர்களோ முஆவியா அவர்களை சாபமிடவில்லை.

இதில் உண்மைநிலை யாதெனில், அஹ்லெ சுன்னத்துடைய அறிஞர்களின் பழக்கமாகிறது, அவர்கள் யாரையும் சாபமிடாமல் ஒதுங்கிக் கொள்வதாகும். மேலும் இது எவருக்கும் அழகுமல்ல. ஏன்! ஒரு இறைமறுப்பாளராக இருந்தாலும் சரியே. யாருக்குத் தெரியும்? அவர் தமது இறப்புத் தருவாயின்போது இறைநம்பிக்கையை தமதாக்கிக் கொண்டிருக்கலாம் இனி எவருடைய இறப்பு இறைமறுப்புக்குரிய நிலையில்தான் நிகழ்ந்ததென்று திண்ணமாகத் தெரிகிறதோ அவரை இறைமறுப்பாளரென்றுதான் சொல்லப்படும்.

**யஸீதின் முடிவு**

அஹ்லெசுன்னத்தை சேர்ந்த சில அறிஞர்கள் கூட ஹழ்ரத் முஆவியா ரலியல்லாஹு அன்ஹுவின் மைந்தனான யஸீதுடைய விசயத்தில் மௌனம் சாதிக்கின்றனர். இதில் வேறுசில அறிஞர்கள் வரம்பு கடந்து முகஸ்துதிக்காக வேண்டி அவனுடைய மகத்துவத்தை பேசுகிறேன் பேர்வழி எனத் துவங்கி, யஸீத் பெரும்பான்மை இஸ்லாமியர்களின் ஆதரவைப் பெற்று அமீராக நியமனம் பெற்றதால் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அவனுக்கு வழிப்பட்டிருக்க வேண்டுமென்றும் கூறுகின்றனர். இறைவன் நம்மை பாதுகாப்பானாக.

ஒன்றை நாம் கவனிக்க மறந்துவிடக் கூடாது. அதாவது, இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அவர்கள் இருக்கும் போது யஸீத் எப்படி அமீராக முடியும்? அத்துடன் இஸ்லாமியர்களின் ஒருங்கிணைப்பும் அவன்மீது எவ்வாறு கட்டாயமாக முடியும்? அப்போதிருந்த நபித்தோழர்களும் அவர்களுடைய பிள்ளைகளும் கூட அவனுக்கு வழிப்பட மறுத்துவிட்டார்களே! மதீனாவிலிருந்து சிலர் நிர்பந்தமாக ஷாமுக்கு யஸீதிடம் அனுப்பி வைக்கப்பட்டபோது

அவர்கள் யஸீதின் தாகத செயலை;க கண்டு மீண்டும் மதீனாவுக்கே திரும்பியல்லவா வந்து விட்டனர். அத்துடன் அவர்களிடம் வலுக்கட்டாயமாக கேட்டுப் பெறப்பட்ட வாக்குறுதியையும் அவர்கள் முறித்துக் கொண்டார்களே! அத்துடவ் அவர்கள் அவனை பகிரங்கமாக இறைவிரோதி என்றும்,குடிகாரன் என்றும், தொழாதவன் என்றும், தடை செய்யப்பட்டவர்களோடு கூட உறவு கொள்ளத் தயங்காதவன் என்றெல்லாம் கூறினார்களே!

அடுத்து யஸீதுடைய விஷயத்தில் இன்னொரு சரராரின் கருத்து என்னவெனில், யஸீத் இமாம் ஹுஸைனை கொல்வதற்கு ஆணையிடவே இல்லையென்றும், இமாம் ஹுஸைனின் மரணத்தில் அவன் திருப்தியுறவே இல்லையென்றும், இவ்வாறே நபியவர்களது குடும்பத்தாரது மரணத்திலும் அவன் சந்தோஷப்படவில்லையென்றும் கூறுகின்றனர். ஆனால் இக்கருத்து தள்ளப்பட வேண்டிய ஒன்றும் பொய்யாக ஜோடிக்கப்ட்ட ஒன்றுமாகும். ஏனெனில் யஸீத் நபியவர்களின் குடும்பத்தார் மீது கொண்டிருந்த விரோதமும் பகைமையும் வெறுப்பும், அத்துடன் அவர்களை அவன் இழிவுபடுத்தி கேவலப்படுத்திய சம்பவங்களும் தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளன. இவைகளையெல்லாம் நிராகரித்தல் என்பது எப்படி சரியாகும்?

மேலும் இன்னொரு சாராரின் அபிப்பிராயமானது, இமாம் ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் கொலை, நபியவர்களால் வகுக்கப்பட்ட சட்டத்தில் ஒரு பெரும்பாவம்தானேயன்றி வேறல்லவென்றும், ஏனெனில் உரிய காரணமின்றி ஒருவரை கொல்வது பெரும்பாவம் மட்டுமே என சட்டம் சொல்வதால் யஸீதை சாபமிடுவது சரியல்ல என்றும், காரணம் சாபமிடுதல் என்பது இறைமறுப்பாளர்களுக்கு மட்டுமே உரிய ஒன்றென்றும் கூறுகின்றனர்.

இப்படியொரு அபிப்பிராயம் தருவோருக்கு கைசேதம்தான். இவர்களுக்கு முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்ன வார்த்தை கூடவா தெரியாமல் போய்விட்டது? பாத்திமாவையும் அவரது பிள்ளைகளையும் விரோதிப்பதும் துன்புறுத்துவதும் என்னை விரோதித்து துன்புறுத்துவதாகும் என நபியவர்களால் சொல்லப்பட்ட வார்ததையை முன்னிறுத்தி பார்ப்பார்களாயின் அந்த நிலையில் யஸீதை குறித்து இவர்கள் என்ன முடிவெடுப்பார்கள்? என்ன? நபியை விரோதிப்பதும், துன்புறுத்துவதும் சாபத்திற்கும் இறை மறுப்புக்குமுரிய காரணமாகாதா? இது ஒன்று மட்டுமே ஒருவரை நரகுக்கு இட்டுச் செல்ல போதாதா? இதுபற்றி குர்ஆன் என்ன கூறுகிறது என்பதைப் பாருங்கள்,...

ان الذين يؤذون الله ورسوله لعنهم الله في الدنيا والآخرة واعد لهم عذابا مهينا

'திடனாக யார் இறைவனையும் அவனது தூதரையும் துன்புறுத்துகிறார்களோ அவர்கள் இம்மையிலும் மறுமையிலும் சாபத்திற்கு உரியவர்கள். இன்னும் இறைவன் அவர்களுக்கு நோவினை தரும்படியான வேதனையை சித்தப்படுத்தி வைத்திருக்கிறான்'

இன்னும் சிலர் கூறுகின்றனர். யஸீதின் இறுதி முடிவு பற்றி யாருக்குத் தெரியும்? அவன் தனது இறப்புத் தருவாயில் தனது பாவத்திற்காகவம், இறைமறுப்பிற்காகவும் பாவமன்னிப்புத் தேடியிருக்கலாம். ஒருவேளை மன்னிக்கப்பட்டும் போயிருக்கலாம். மேலும் இமாம் கஸ்ஸாலி

போன்றோரே இப்படிப்பட்ட கருத்துக்களை கூறுகின்றனர். அதேநேரம் அறிஞர் பெருமக்களிலும் முன்னோடிகளிலும் சுயஆய்வுடையோரிலும் மிக மிகப் பிரபலமாக பேசப்படும் இமாம் அஹ்மத் பின் ஹன்பல் ரலியல்லாஹுஅன்ஹு என்பார் யஸீதை சாபமும்இட்டுள்ளனர். இஸ்லாமிய சட்டத்தை கடைப்பிடிப்பதிலும் நபியின் வழிமுறைகளை பேணுவதிலும் மிகக் கடுமையான நிலையினை கொண்டிருந்த இமாம் இப்னுல் ஜௌஸி ரஹிமஹுல்லாஹ் என்பார், யஸீதை சாபமிட்ட அறிஞர்களின் ஒருபட்டியலையே தமது நூலில் பதிவு செய்தும் வைத்துள்ளனர். இதில் இன்னும் சில அறிஞர்கள் யஸீதுடைய விஷயத்தில் மௌனமும் சாதிக்கின்றனர்.

ஆனால் நமது அபிப்பிராயம் என்னவெனில், யஸீத் வெறுக்கத்தக்க ஒருவனாகத்தான் இருந்தான். அக்குறைமதியாளன் நடந்து கொண்டதை போல முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சமூகத்தாரில் யாருமே நடந்து கொள்ளவில்லை. இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வீரமரணத்திற்கு உட்படுத்தபட்டு நபியவர்களின் குடும்பத்தார் கேவலப்படுத்தப்பட்ட பின், அக்குணங் கெட்டவன் மதீனாவின் மீது படையெடுத்தான். அப்புனிதமிக்க நகரின் கண்ணியத்தை சிதைத்து சின்னாபின்னமாக்கியபின் அங்கிருந்தோரை கொன்று அவர்களின் ரத்தத்தால் தனது கைகளை சிவப்பாக்கினான். இதில் மீதமிருந்த நபித் தோழர்களும் அவர்களை அடுத்து வந்தோரும் கொல்லப்பட்டனர்.

மதீனாவை நிர்மூலப்படுத்திய பின் மக்காவின் மீது படையெடுக்குமாறு ஆணையிட்டான். இதில் அப்துல்லாஹ் பின் ஸுபைர் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழர்களின் வீரமரணத்திற்கு காரணமானான். அதே நிலையில் வைத்து இறந்தும் போனான். இந்நிலையில் அவன் தனது அடாத செயலுக்காக பாவமன்னிப்பு கேட்டானா இல்லையா என்பது இறைவனுக்கு மட்டும்தான் தெரியும். எனவே நம்முடைய மற்றும் விசுவாசிகளுடைய இதயங்களை யஸீத் போன்றோரது நேசத்திலிருந்தும் அனுதாபத்திலிருந்தும், இவ்வாறே அவனை ஆதரிப்போரது நேசத்திலிருந்தும் நபியவர்களின் குடும்பத்தினரை வெறுப்போரது நேசத்திலிருந்தும் தோழமையிலிருந்தும் அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக. அத்துடன் இறைவன் நம்மையும் நமது நேசர்களையும் நபியவர்களது குடும்பத்தினர் மீது நல்லெண்ணம் கொண்டோரின் கூட்டத்தில் சேர்த்து வைப்பானாக.

**சுய ஆய்வாளரின் நிலை**

முழுமையான சுதந்திரமும் அதிகாரமும் தரப்பட்டுள்ள நமது மார்க்க (இஸ்லா)த்தில் மனித சமுதாயத்தின் வாழ்வியலுக்குரிய நடைமுறை சட்டத்தை குர்ஆன் மற்றும் நபிமொழி போன்றவற்றிலிருந்து தமது சுயஆய்வின் மூலம் பிரித்தெடுக்கும் சுயஆய்வாளர்களது ஆய்வில் அவ்வப்போது சில தவறுகளும் நடந்து விடலாம். அப்போதெல்லாம் அந்த சுய ஆய்வாளர் மன்னிக்கப்பட்டவராகவே கருதப்படுவார். சிலபோது அத்தவறை செய்தவர் அத்தவறுக்காக நன்மையும் தரப்படுவார். ஏனெனில் அவர் தமது முழு முயற்சியோடும் நம்பத்தகுந்த நிலையிலும் தான் ஆய்வு செய்கிறார். அதனால்தான் இத்தகைய ஆய்வுக்குரிய முயற்சியின் நன்மை இறைவனிடமுள்ளது எனக் கூறப்படுகிறது. இதுபற்றி நபிமொழியில்,...

ان اخطئت فلك حسنة وان اصبت فلك حسنتان

'ஒருவேளை சுய ஆய்வில் நீர் மறந்து விட்டால் உமக்கு ஒரு நன்மை கிடைக்கும். அவ்வாறின்றி வெற்றியடைந்தால் நீர் இரு நன்மைகளுக்கு உரியவராவீர்' எனக் கூறப்பட்டுள்ளது.

**அஹ்லெ கிப்லாக்களை மறுத்தல்**

யார் மக்காவிலுள்ள கஃபாவை நோக்கி தொழுகிறார்களோ, குர்ஆன் மற்றும் நபிமொழிகளின் மீது நம்பிக்கை கொண்டுள்ளார்களோ, இவ்வாறே இறைவனுடைய ஏகத்துவத்தையும் முஹம்மத் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களின் தூதுத்துவத்தையும் விசுவாசம் கொண்டிருப்பதாக சாட்சி சொல்கிறார்களோ அவர்களை காபிர்(இறைமறுப்பாளர்) என்று சொல்லக் கூடாது. ஒருவேளை அவர்களின் சில வார்த்தைகள் இறைமறுப்பை வெளிப்படுத்தினாலும் சரியே. இனி எப்போது ஒருவரின் மீது இறைமறுப்பு என்னும் குப்ரு நிலைப்படுத்தப்படும் எனில், இறைமறுப்பை ஏற்படுத்தும் ஒன்றை அவர் செய்து, அது பகிரங்கமாக இறைமறுப்பை உறுதி செய்யுமாயின் அந்நிலையில் அவர்மீது இறைமறுப்பு என்பது விதியாகும். இருப்பினும் இயன்றவரை இஸ்லாமியர்களின் இத்தகைய வார்த்தைகளை குறித்துள்ள காரணங்களை நல்லெண்ணத்தை கொண்டே பேசுதல் நல்லது. இறைமறுப்பை ஒரு அப்பியாசத்திற்குரிய பிரபோதத்தைப் போல் நாம் ஆக்கிவிடக் கூடாது.

காரணம் நபிமொழியில், ஒருவர் இன்னொருவரை இறைமறுப்பாளர் எனக் கூறுவாராயின் கூறப்பட்டவர் உண்மையில் இறைமறுப்பாளராக இல்லையேல், அவரை இறைமறுப்பாளரென்று சொன்னவர் இறை மறுப்பாளராகி விடுவார். சாபத்திற்குரிய சட்டமும் இதேபோன்றுதான். ஆகையால் இறை மறுப்பையும், சாபத்தையும் இயன்றவரை தவிர்க்க வேண்டும்.

**இறைதூதர் மலக்கை விட மேலானவர்**

சில குறிப்பிட்ட மனிதர்கள் (மறைவானவற்றை அறிவிக்கும் நபிமார்கள், வேதங்களையும் சுவடிகளையும் இறைவனிடமிருந்து பெற்றுத்தரும் ரஸூல்மார்கள்) சில குறிப்பிட்ட வானவர்களை விட மேன்மையானவர்கள். காரணம் வானவர்கள் இறைதூதர்களுக்கு இறைவனிடமிருந்து செய்திகளை கொண்டுவந்து சேர்ப்பிக்கிறவர்களாகவும் பணியாளர்களாகவும் இருப்பதே. இதுபோன்றே சாதாரண மனிதர்கள் சாதாரண வானவர்களை விட மேன்மையானவர்கள். இதேபோல சில குறிப்பிட்ட வானவர்கள் சாதாரண மனிதர்களை விட மேன்மையானவர்கள். இதில் எந்தக் கருத்து வேறுபாடும் கிடையாது.

மேலும் வானவர்களை விட மனிதன் மேன்மையானவன் என்பதற்குரிய ஆதாரமானது, இறைவன் எல்லா வானவர்களையும் ஆதம் அலைஹிஸ்ஸலாம் என்னும் மனித சிருஷ்டியின் முதல் மனிதருக்கு சாஷ்டாங்கம் செய்ய வேண்டுமென ஆணையிட்டதேயாகும். இதில் சாஷ்டாங்கம் என்பது பணிவிடைக்குரிய மிகப்பெரும் அடையாளமாகும். மேலும்

தாழ்மையானது தன்னைவிட உயர்வானதின் மகத்துவத்தை அங்கீகரிப்பதற்கு சொல்லப்படும். இது ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் சிறப்புக்குரிய அச்சம்பவத்தை கொண்டு நமக்கு தெரியவருகிறது. பின்னும் இது ஆச்சரியமான ஒன்றுதான். அதாவது இறைவனுடைய நுணுக்கத்தை மனித அறிவு வளைப்பதென்பது அறவே சாத்தியமில்லாத ஒன்றாகுமாதலால் அவனுடைய நுணுக்கத்தை அவனையன்றி வேறு யாராலும் தெரிந்து கொள்ள முடியாதுதான்;. ஆம். அத்தனை உயர்வானதொரு சிருஷ்டியை தாழ்ந்த ஒரு சிருஷ்டிக்கு பணிவிடை செய்ய வைத்ததன் மூலம் தனது ஆற்றலுக்குரிய மகத்துவத்தை அவன் வெளிப்படுத்திக் காட்டுகிறான்.

இந்த நம்பிக்கையை நாம் எடுத்துக் காட்டுவதன் நோக்கம் இஸ்லாமியர்களிலுள்ள முஃதஸிலா என்னும் பிரிவை சேர்ந்தவர்கள் மனிதனைவிட வானவர்கள் தான் உயர்ந்தவர்களென்று வாதிப்பதால் அவர்களின் இத்தவறான நம்பிக்கையை நாம் தவறென்று ஆதாரப்படுத்துவதற்காகவே இதனை எடுத்துக் காட்டினோம்.

அடுத்து நமது இரண்டாவது ஆதாரமானது, வணக்க வழிபாடுகள் மற்றும் விடா முயற்சியை கொண்டு பூரணத்துவத்தை எய்துதல் என்பது மிகப்பெரும் கஷ்டமான காரியமாகும். அதேநேரம் நன்மையும் வெகுமதியும் தெண்டிப்பும் விடாமுயற்சியும் இன்றியமையாத ஒன்றாகும். பின்னும் அதிகமான நன்மைக்குரிய பெயர்தான் சிறப்பு எனில், இந்த ஆதாரமே போதும்.

ஆனால் வானவர்கள் இப்படிப்பட்ட மனித தேகத்தை கொண்டு சாதிக்கப்படும் நன்மைகள் போன்றவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டவர்கள். இவ்வாறே மற்ற குறைபாடுகளை விட்டும் அவர்கள் துவக்கத்திலிருந்தே பரிசுத்தமானவர்கள். இதைக் கொண்டு வானவர்களின் பரிசுத்தத் தன்மை ஒப்புக் கொள்ளப்படலாம். இதில் சில திடஞானிகளின் அபிப்பிராயமானது, விடாமுயற்சி மற்றும் தெண்டிப்பு போன்றவற்றை கொண்டு சாதிக்கப்படும் பூரணத்துவத்தைக் கவனிக்கும்போது கண்டிப்பாக வானவரை விட மனிதன்தான் மேலானவன். அதேநேரம் தனிமை, பரிசுத்தம், இறைசமீபம், பிரகாசம் போன்றவற்றை வைத்துப்பார்த்தால் வானவர்களே மிகவுயர்ந்த நிலையை கொண்டுள்ளனர் என்கின்றனர்.

இதற்குப் பிறகும் மனிதனுடைய முழுமையான நிலையை கவனித்தால், அவன் இறைதன்மையின் வெளிப்பாட்டுத் தோற்றமாக இருப்பதையும், இறைவனது நாமங்கள் மற்றும் குணங்களின் பிரதிபலிப்பாக இருப்பதையும் இறைவனுடைய பிரதிநிதியாக உயர்ந்து நிற்பதையும் வைத்துப் பார்க்கும்போது மனிதன்தான் உயர்ந்தவன் என்பதை நாம் ஒப்புக் கொண்டேயாக வேண்டும்.

மேலும் ஒரு விசயத்தில் நாம் எவ்வித சந்தேகத்திற்கும் அறவே இடமின்றி திடமான நம்பிக்கை கொள்ள வேண்டும். அது, முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்தான் எல்லா இறைதூதர்களுக்கும் தலைவரென்றும், பிரபஞ்சங்களின் மூலமென்றும், சிருஷ்டிப் பொருட்களனைத்தையும் விட மேலானவர்களென்றும் விசுவாசிக்க வேண்டும். அது பூத கணங்களுடைய வர்க்கத்தை சேர்ந்ததாக இருந்தாலும் சரி. அல்லது மனித இனத்தை சார்ந்ததாக இருந்தாலும் அல்லது வானவர்களின் வர்க்கத்தை சார்ந்ததாக இருந்தாலும்

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களே அனைவரையும் விட மேலானவர்கள் என்பதை நாம் உளமாற நம்பவேண்டும்.

**இறைநேசர்களின் படித்தரம்**

இறைநேசர்களிடமிருந்து வெளிப்படும் அற்புதங்கள் என்பது உண்மையான ஒன்றாகும். இன்னும் யாரை இறைநேசரென்று சொல்லப்படும் எனில், அவர் இறைவனை அறிந்தவராக இருப்பதும், நிராசை மற்றும் பெரும்பாவங்களிலிருந்தும், உலகப்பற்று மற்றும் பேராசை போன்றவற்றிலிருந்து நீங்கியிருப்பது அவசியமாகும். இத்தகைய தன்மையுள்ளோரில் இருந்து இயற்கைக்கு மாற்றமான ஒரு செயல் வெளிச்சமாகுமாயின் அதனை கராமத்(அற்புதம்) எனக் கூறப்படும்.

மேலும் ஒரு இறைநேசரிடமிருந்து வெளிப்படும் அற்புதமானது, அவர் எந்த இறைதூதரை பின்பற்றுகிறாரோ, தழுவலைக் கொண்டிருக்கிறாரோ, அந்த இறைதூதரை கொண்டு வெளியாகும் அற்புதத்திற்குரிய சாய்கை என்றே சொல்லப்படும். உதாரணமாக முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமிருந்து பல்வேறு வகையான அற்புதங்கள் வெளிப்பட்டுள்ளன. அவைகளில் சில அவர்கள் இப்பூவுலகில் வந்து பிறப்பதற்கு முன்பே வெளிப்பட்டவைகளாகும். அதனை அரபி மொழியில் 'அர்ஹாஸ்' எனச் சொல்லப்படுகிறது.

இதுபோன்றே வேறுசில அற்புதங்கள் அவர்கள் தம்மை இறைதூதரென்று பகிரங்கப்படுத்தியதிலிருந்து அவர்களது வாழ்க்கை முழுவதும் வெளிப்பட்டவைகளாகும். இவ்வாறே இன்னும் சில அற்புதங்கள் அவர்களின் மறைவுக்குப் பின்னரும் வெளிப்பட்டுள்ளன. அவை அவர்களை பின்பற்றியோரை கொண்டும் இறைநேசர்களைக் கொண்டும் இன்னும் வெளிப்பட்டுக் கொண்டுள்ளன. உண்மையில் இவையனைத்தும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அற்புதங்களுடைய வரிசை தொடரை சார்ந்தவைகளென்றே சொல்லப்படும். பின்னும் இவ்வற்புதங்கள் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தூதுத்துவத்தைத உண்மைபடுத்துபவைகளாகவும், அவர்களுடைய மார்க்கம் சத்தியமான ஒன்றுதான் என்பதையும் ஆதாரப்படுத்துபவைகளாகும்.

மேலும் அற்புதங்களுக்குரிய தோற்றம் என்பது இறைதூதரின் தோழர்களிடமும் இறை நேசர்களிடமும் இப்போதும் பார்க்கப்பட்டு வருகின்ற ஒன்றாகும். இதில் எவ்வித மறுப்புக்கும் சந்தேகத்திற்கும் அறவே இடமில்லை. அதிலும் குறிப்பாக இந்த சமுதாயத்திலுள்ள சில இறைநேசர்களான ஹழ்ரத் கௌதுல் அஃலம், இமாம் அப்துல்லாஹ் யாபிஈ ரஹிமஹுமுல்லாஹ் போன்றோரிடமிருந்து கணக்கில்லாத அற்புதங்கள் வெளிப்பட்டுள்ளன.

இனி சில இஸ்லாமிய அறிஞர்கள் இறைநேசர்களின் அற்புதங்களை பற்றி கூறும்போது, அந்த அற்புதங்கள் இறைதூதர்களின் அற்புதங்களுடைய இனத்தை சேராதென்று கூறுகின்றனர். அதற்கு ஆதாரமாக இவர்கள் நிலவு இரு துண்டாகப் பிறந்த நிகழ்ச்சியையும், விருட்சங்கள் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முகமன் கூறிய நிகழ்ச்சியையும், செடி கொடிகள் நபியவர்களுக்கு சிரவணக்கம் செய்த நிகழ்ச்சியையும்

எடுத்துக் காட்டுகின்றனர். மேலும் சிலர் ஒரு இறைநேசருடைய அற்புதம் என்பது அவரது நாட்டம் மற்றும் அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட ஒன்றென்றும் கூறுகின்றனர். அதேநேரம் ஒருவர் தம்மிடம் இறைநேசமும், அற்புதமும் இருக்கின்றதென வாதிப்பது அவசியமற்ற ஒன்றாகும்.

இருப்பினும் உண்மைநிலை என்னவெனில், எந்தச் செயல் ஒரு இறைதூதரிடமிருந்து அற்புதம் என்னும் பெயரில் வெளியீடாகிறதோ அதேசெயல் தான் ஒரு இறைதூதரிடமிருந்து அற்புதம் என்னும் வெளியீடாகிறது. அது அவருடைய நாட்டம் மற்றும் அதிகாரத்திற்கு உட்பட்டதாக இருந்தாலும் சரி. இல்லாவிட்டாலும் சரி. ஏனெனில் சில அற்புதங்கள் அந்த இறைநேசருடைய நாட்டம் மற்றும் அதிகாரத்தைக் கொண்டும் வெளியீடாவதுண்டு. இதுபோன்றே சில இறைநேசர்கள் தமது நேசத்துவத்தின் உச்சநிலையை எடுத்துக் காட்டுவதற்காகவும் அற்புதத்தைக் குறித்து வாதிப்பார்கள். அந்த நிலையில் அவர்களின் வாதத்திற்குத் தக்கவாறு அவர்களிடமிருந்து அற்புதங்கள் வெளியாகும். ஆனால் அந்த அற்புதங்கள் அவர் எந்த இறைதூதரின் தழுவலை தழுவலை கொண்டிருக்கிறாரோ அவ்விறைதூதருடைய தூதுத்துவத்தை ஆதாரப்படுத்துபவைகளாகும். உதாரணமாக முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜீலானி ரலியல்லாஹு அன்ஹு என்பார் அதிகமாக வாதித்துள்ளார்கள். அதேநேரம் இறைநேசர்கள் தம்மை இறைதூதரென வாதிப்பது கூடாது. அது அவர்களை மார்;க்கத்தின் விரோதியாகவும் சாபத்திற்குரியவர்களாகவும் ஆக்கிவிடும்.

அடுத்து இறைநேசத்துவத்திற்கு அற்புதம் வெளிப்பட வேண்டும் என்ற கட்டாயமில்லை. ஏனெனில் இறைநேசர்கள் அற்புதங்கள் ஏதுவுமில்லாமலேயே இறைநேசர்களாக இருப்பதற்குரிய வாய்ப்பும் உண்டு. இதில் உண்மையான அற்புதம் என்பது, தான் சார்ந்துள்ள மார்க்கத்தில் பேணுதலோடு நிலைத்து நிற்பதேயாகும். அதேநேரம் அற்புதத்தை வெளிப்படுத்திக் காட்டுவதற்குரிய நுணுக்கமானது, ஒரு பரமார்த்திகன் பரமார்த்திக பாதையில், தான் முழுமையடைந்து விட்டோம் என்பதை ஆதாரப்படுத்திக் கொள்வதற்கேயாகும். அத்துடன் தனது இறுதிகாலத்தில் மற்றவர்களை அப்பாதையில் பயிற்றுவிப்பதற்காகவும் இறைநேசத்தை மறுப்பவர்களுக்கும், அதை நிராகரிப்போருக்கும், அதில் சந்தேகத்தை தோற்றுவிப்போருக்கும் தக்க பதிலடி கொடுப்பதற்காகவும் இந்த அற்புதம் என்பது அவர்களுக்கு அவசியமாகிறது.

அடுத்து இயற்கைக்கு மாற்றமான செயல் என்பது நான்கு வகைப்படும். ஒன்று: நற்காரியங்களை கொண்டு என்றில்லாமல் முழுமையான விசுவாசமற்ற நிலையில் ஒரு அற்புதம் நிகழுமாயின் அதனை 'இஸ்த்தித்ராஜ்' எனக் கூறப்படும். இரண்டு: நற்காரியங்களை கொண்டும் நிறைவான விசுவாசத்தை கொண்டும் இறைஞானம் மற்றும் பயபக்தியைக் கொண்டும் ஒரு அற்புதம் நிகழுமாயின் அதனை 'கராமத்' என்று சொல்லப்படும். அதேசெயல் ஒரு இறைதூதரிடமிருந்து வெளிப்பட்டால் அதனை 'மு.்.ஜிஸா' என்று சொல்லப்படும். மூன்று: சிலபோது இப்படிப்பட்ட செயல்கள் ஒரு விசுவாசியிடமிருந்தும் நற்காரியங்களை செய்பவரிடமிருந்தும் வெளிப்படுவதுண்டு. அதுபோது அதனை 'மவூனத்' என்று சொல்லப்படும்.

இவ்வாறே மந்திரம், செய்வினை, சூனியம், கண்கட்டு வித்தை, மெஸ்மரிஸம், ஹிப்னாடிஸம் போன்றவை இயற்கைக்கு மாற்றமான அற்புதங்களின் தரத்தை சேராது. ஏனெனில்



www.sufimanzil.org

இவைகளெல்லாம் இடைவிடாத பயிற்சியை கொண்டும் சாதனையை கொண்டும் அனுபவத்தை கொண்டும் காரணங்களை கொண்டும் நிகழ்த்தப்படுவதே இதற்கு காரணமாகும். அதேநேரம் சிலபோது மனித அறிவை திகைக்கச் செய்யும்வண்ணம் இவைகளில் சில சம்பவங்கள் நிகழ்ந்து விடுவதுண்டு. எவ்வாறெனில், இறக்கும் தருவாயிலுள்ள ஒரு நோயாளி நல்ல அனுபவமுள்ள கைதேர்ந்த மருத்துவரால் சுகப்படுத்தப்படுவதை போல என்று சொல்லலாம். ஆனால் இறை தூதர்களிலிருந்தும் இறைநேசர்களிலிருந்தும் வெளிப்படும் அற்புதம் என்பது இயற்கைக்கு மாற்றமான ஒன்றென்பதோடு இறுதிவரை மனித அறிவைக் கொண்டு விளங்கிக் கொள்ளவே முடியாத ஒன்றாகவே இருக்கும்.

இதில் சிலர் இறைதூதுத்துவத்தை விட இறைநேசமே சிறந்ததென வாதிக்கின்றனர். அவர்களின் இவ்வாதத்திற்கு நமது மறுப்பானது, ஒரு இறைநேசர் எனப்படுபவர் இறைதூதரை விட சிறந்தவராக ஒருபோதும் ஆகமாட்டார். காரணம் இறைநேசத்துவம் என்பது இறைவனுடைய சமீபத்துவத்தை பெறுகிற ஒன்றுக்கு சொல்லப்படுகிறது. அதைக் கொண்டு அவர் பலனும் அடைகிறார். ஆனால் இறைத்தூதர் மீது இறைவனுடைய அருட்கொடைகள் மட்டுமே குறிப்பாக இறங்குகின்றன. அதை கொண்டு அவர் ஆணையிடுபவராக மாறிப்போகிறார்.

மேலும் தூதுத்துவம் என்பது சிருஷ்டிப் பொருட்களுக்கு பலனளிக்கக் கூடிய ஒன்றாகும். அதில் இறை சமீபத்துவமும் இறைவனோடு தொடர்பும் இருப்பது அவசியமாகும். இறைதூதரில் இவ்விரு பண்பும் காணப்படுவதால் அவர் இறைநேசரை விட சிறந்தவராக இருக்கிறார். இத்தனை விளக்கத்திற்குப் பிறகும் ஒருவர் இறைதூதரை விட இறைநேசர் தான் சிறந்தவரென முடிவெடுப்பாராயின், அதை நாம் கண்டிப்பாக மறுப்போம். அத்துடன் அவரை எடுத்தெறியப்பட்டவர் என்றும் தீர்மானிப்போம்.

**அடிமைத்தனத்தின் தரம்**

நல்லறிவை பெற்றுள்ள அடியான் எத்தனை உயர்ந்த படித்தரத்தைப் பெற்றாலும் எவ்வளவுதான் அறிவுள்ளவனாக இருந்தாலும் அவன்மீது விதிப்படுத்தப்பட்டுள்ள முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மார்க்கத்திற்குரிய சட்டம், இனிமேல் அவன்மீது கடமையில்லை என்னும் நிலைக்கு அவன் ஒருபோதும் உயரமாட்டான். இதில் சில மார்க்கமற்றவர்களும் மார்க்க விசயத்தில் புரண்டு போனவர்களும், ஒரு குறிப்பிட்ட படித்தரத்தை எய்திவிட்டால் அதுவரை அவன்மீது அதுவரை அவன்மீது விதிக்கப்பட்டிருந்த இஸ்லாமியச் சட்டங்கள் அனைத்தும் அவனை விட்டு அகன்று விடுவதாக எண்ணிக் கொண்டுள்ளனர். அத்துடன் அவர்கள் அதற்கு விளக்கமளிக்கும் வகையில், எப்போது மனிதன் நேசத்திற்குரிய எல்லையை எட்டிப் பிடித்து விடுகிறானோ, அப்போது அவனது உள்ளம் முழுவதுமாக தூய்மையடைந்து அவன்மீது விதிப்படுத்தப்பட்டுள்ள இஸ்லாமியச் சட்டங்களுக்குரிய கடமைகளனைத்தும் அவனை விட்டும் அகன்று விடுகின்றன என்று கூறுகின்றனர். அதுமட்டுமின்றி இறைவன் அவனது பெரும்பாவங்களின் காரணத்திற்காக அவனை நரகில் போடமாட்டானென்றும் வேதனை செய்யமாட்டானென்றும் கூறுகின்றனர்.

இது வழிகேடும் இறைமறுப்புமாகும். அத்துடன் இது இறைவனைப் பற்றிய அறிவின்மைக்குரிய அடையாளமுமாகும். ஏனெனில் இறைவன் மீதுள்ள நேசம் ஒருவனில் முழுமைபெறுமாயின் அது அவனது உள்ளத்தை சுத்தப்படுத்துவதோடு அவனது விசுவாசத்தையும் நிறைவாக்குகிறது என்பது உண்மைதான். இந்நிலையில் அவன் இன்;னும் அதிகமான வணக்க வழிபாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வானேயன்றி விட்டுவிட மாட்டான்.

அதற்கு மாறாக அவன் பெற்றுக் கொள்ளும் அவ்வுயர்நிலைகள் அவனை குறைவுள்ளவனாகவோ, அவன்மீது விதிப்படுத்தப்பட்டுள்ள கடமைகளை அவனைவிட்டும் அகற்றக் கூடியதாகவோ ஒருபோதும் ஆகாது. அதேபோல அவனுடைய பாவங்களின் மீது அவனை மன்னிப்பதோ அல்லது தண்டிப்பதோ இறை விருப்பத்தை பொறுத்த விசயமாகும். காரணமட் அவன் சர்வஅதிகாரங்களையும் தனக்குள் கொண்டிருப்பதால் அவன் விரும்பியவர்களை மன்னிக்கிறான் அல்லது தண்டிக்கிறான். இதில் இஸ்லாமியச் சட்டங்கள் அவனை விட்டும் அகன்று விடும் என்பது ஒருபோதும் நடவாது.

பாருங்கள்! இறைதூதர்களை விட இறைவனை நேசிப்பதிலும் விசுவாசிப்பதிலும் உயர்ந்தோராக வேறுயார் இருக்க முடியும்? அவர்கள் மீதே இக்கடமைகள் அவர்களை விட்டும் அகலாதபோது அவர்களை பின்பற்றுவோர் எம்மாத்திரம்? இதற்கும் சிலர் தர்க்கரீதியாக பதிலளிக்கும் போது, இறைதூதர்கள் எனப்படுவோர் இறைவனுடைய தரப்பிலிருந்து அவனது அடியார்களுக்கு விதிப்படுத்தப்படும் சட்டங்களை நடைமுறைப்படுத்திக் காட்டவேண்டிய பொறுப்பில் இருப்பதால் அவர்கள் அதை செய்தேயாக வேண்டும் என்பதாகக் கூறுகின்றனர்.

இவர்கள் இஸ்லாமியச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குரிய அர்த்தம் கூட என்னவென்று தெரியாதவர்கள். மேலும் இவர்கள் ஒருசட்டம் என்பது யார்மீது விதிப்படுத்தப்படுகிறது என்பதை தெரிந்து கொண்டிருந்திருப்பார்களேயாயின் இப்படியெல்லாம் பேச மாட்டார்கள். ஏனெனில் இறைதூதர்கள் எனப்படுவோர் சட்டங்களை தமது சமுதாயத்தினருக்கு கட்டளையிடுபவர்கள். மக்கள் அதை செயல்படுத்துபவர்கள் என்பதை இவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

**திருமறை, நபிமொழிகளின் ஆதாரம்**

குர்ஆனுக்குரிய வசனங்களும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய நபிமொழிகளும் அதற்குரிய வெளிப்படையான அர்த்தங்களை கொண்டே விளக்கமளிக்கப்பட வேண்டும். மேலும் சரியான காரணமின்றி அவைகளு;கது த.்வீல் என்னும் வலிந்துரை செய்யக் கூடாது. அவ்வாறின்றி வலிந்துரை செய்வதாக இருந்தால் அதற்குரிய விதிமுறைகளையும் விரிவான விளக்கங்களையும் தெரிந்த பின்னரே வலிந்துரை செய்ய வேண்டும்.

மேலும் குர்ஆன் மற்றுமு; நபிமொழிகளின் வெளிப்படையான அர்த்தங்களை விட்டுவிட்டு வழிகெட்டோரின் பாதையை கைகொள்வது மார்க்கத்தை விட்டுப் புரண்டு போவதற்குரிய அடையாளமாகும். இந்நிலையில் வெளிப்படையான அர்த்தங்களை நாம் எடுக்கவில்லையாயின்

தொழுகை, நோன்பு, வழிபாடு, வணக்கம் போன்றவைகளையும் மார்க்கத்திற்குரிய இதர சட்டங்களையும் நாம் எவ்வாறு எடுக்க முடியும்? இவைகளெல்லாம் நமக்கு எதிலிருந்து கிடைத்தன? இன்னும் இவைகளை நாம் எதைகொண்டு ஆதாரப்படுத்த முடியும்? பின்னும் இந்த இஸ்லாமியச் சட்டங்களை எல்லாம் அதற்குரிய வெளிப்படையான அர்த்தங்களை கொண்டு எடுக்காமல் அவைகளின் உட்கருத்துக்களை கொண்டும், சைக்கினைகளை கொண்டும் எடுப்போமாயின் குர்ஆன் இறக்கப்பட்டதும் இஸ்லாமியச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதும் அர்த்தமற்ற ஒன்றல்லவா ஆகிப்போய் விடும்? அத்துடன் அந்த உட்கருத்துக்களையும் சைக்கினைகளையும் கற்றுத்தருபவர் இறைதூதர்களை விட உயர்ந்தவர் என்றுமல்லவா ஏற்கவேண்டிவரும்? காரணம் அந்த இறைதூதர்களெல்லாம் குர்ஆன் மற்றும் நபிமொழிகளுக்குரிய வெளிப்படையான நிலையை வைத்துத்தான் அர்த்தம் செய்தனர் என்பதோடு அந்த வெளிப்படையான அர்த்தத்தை கொண்டு விளங்கியதை வைத்துத்தான் தாமும் செயல்பட்டனர். மற்றவர்களையும் செயல்படுமாறு ஆணையிட்டனர்.

எனவே உண்மைநிலை என்னவெனில், இவ்வழிகெட்டோர் மார்க்கத்தை தமது இஷ்டத்திற்குத் தக்கவாறு புரட்டுபவர்கள் என்பதுடன், அதையே மக்களுக்கும் போதிக்கின்றவர்கள். இனி எந்தத் திடஞானிகளுக்கு குர்ஆன் மற்றும் நபிமொழிகளில் மறைந்துள்ள விஷயங்கள் தெளிவாகத் தெரிந்துள்ளதோ அதை அவர்கள் தெரிந்துள்ள போதிலும் இஸ்லாமியச் சட்டங்களனைத்தும் வெளிப்படையான அர்த்தங்களை கொண்டுதான் தீர்மானிக்கப்படும் எனக் கூறுகின்றனர்.

**ஜீவித்திருப்போர் பிரார்த்தனை மூலம் மரித்தோர் பயனடைதல்**

ஆம். ஜீவித்திருப்போரின் பிரார்த்தனையை கொண்டும், தர்மத்தைக் கொண்டும் மரித்தோர் பலனடைகின்றனர் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு நம்பிக்கையாகும். இதைகுறித்த நபிமொழிகளும் சம்பவங்களும் அதிக அளவில் காணப்படுகின்றன. இதில் இறப்புக்குரிய தொழுகையானது இதே அடிப்படையைச் சார்ந்துள்ள ஒரு விஷயமாகும். அதாவது, நபிமொழியில், 'ஒருவரது இறப்புத் தொழுகையில் ஒன்பது நபர்கள் ஒன்று சேர்ந்து தொழுதபின் அவரது பாவமன்னிப்புக்காக பிரார்த்தனை செய்வார்களாயின் அவர் மன்னிக்கப்படுகிறார்' எனக் கூறப்பட்டுள்ளது.

'இவ்வாறே ஸஃஷத் ரழியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழர், நபிகளாரிடம் அவருடைய அன்னை காலமானபோது, எனது தாய்க்குரிய தர்மம் எது? எனக் கேட்க, அதற்கு நபியவர்கள், தண்ணீர் என்றனர். அதைகேட்ட அவர் கிணறு ஒன்றை தோண்டிவிட்டு, 'இது ஸஃதுடைய தாய்க்காக' என்று கூறினார். வேறொரு நபிமொழியில்,...

الدعاء ترد البلاء والصدقة تطف غضب الرب

'பிரார்த்தனை சோதனைகளை அகற்றுவதோடு இறைவனுடைய நெருப்பையும் அணைத்துவிடுகிறது' என்று கூறுவதால் ஜீவித்திருப்போரும், மரித்தோரும் இரு உலகிலும் பலனடைகின்றனர் என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்.

இதுபோன்றே இன்னொரு நபிமொழியில், மார்க்கக் கல்விகற்ற ஒரு அறிஞரோ அல்லுது கல்வியை கற்கும் ஒரு மாணவரோ ஒரு ஊருக்கு சென்றால் அவ்வூரிலுள்ள மையவாடியில் நாற்பது நாட்களுக்கு வேதனை அகற்றப்பட்டு விடுகிறது என்பதாகக் கூறுகிறது. அத்துடன் மண்ணறைகளில் குர்ஆனை மனனம் செய்த ஒருவரை அமர்த்தி அங்கே அவரை ஓத வைப்பதும் மிகப்பெரும் நன்மைக்குரிய காரணமாக அமையும் என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்துத மற்றொரு நபிமொழியை பாருங்கள். இதனை புகாரி மற்றும் முஸ்லிம் என்னும் நூல்களின் ஆசிரியர்களான அப்துல்லாஹ் பின் முபாரக், அபூபக்கர் பின் அபீஷைபா ரஹிமஹுல்லாஹ் ஆகிய இருவரும் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நவின்றதாக ஹழ்ரத் அம்ர் பின் ஆஸ் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரை கொண்டு அறிவிக்கின்றனர். இந்த நபிமொழி முஸ்னத், தப்ரானி, முஃஜமுல் கபீர், முஸ்தத்ரக், ஹில்யா போன்ற நூல்களில் காணப்படுகிறது. அதாவது,...

قال ان الدنيا جنة الكافر وسجن المؤمن وانما مثل المؤمن حين تخرج نفسه كمثل رجل كان في السجن فاخرج منه فجعل

يتقلب في الا رض ويفسح فيها

'நிச்சயமாக இவ்வுலகம் இறைமறுப்பாளர்களுக்கு சுவர்க்கமாகவும் விசுவாசிகளுக்கு சிறைக்கூடமாகவும் இருக்கிறது. இதில் விசுவாசியின் உயிர் எப்போது அவரை விட்டுப் பிரிகிறதோ அப்போதே அவர் சிறைக் கூடத்திலிருந்து விடுதலை பெற்றவரை போலாகிவிடுகிறார். ஆதலால் அவரது உயிர் இப்போது பூமியை சுற்றி வந்து கொண்டுள்ளது'.

இதே நபிமொழி அபூபக்கர் ரஹிமஹுல்லாஹ் என்பாரின் அறிவிப்பில்,...

فاذا مات المؤمن يخلي سربه يسرح حيث شاء

'ஒரு விசுவாசி இறந்து விடுவாராயின் அவரது பாதை அவருக்கு திறந்து விடப்படுகிறது. அவரது உயிர் எங்கே செல்ல விரும்புகிறதோ அங்கே செல்கிறது' எனக் கூறப்பட்டுள்ளது.

இதேபோல இப்னு அபித்துன்யா மற்றும் பைஹகி ரஹிமஹுல்லாஹ் என்போர், ஸயீத் பின் முஸய்யப் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழர கொண்டு அறிவிக்கின்றனர். 'ஒருமுறை ஸல்மான் பார்ஸி என்னும் நபித்தோழரும் அப்துல்லாஹ் பின் ஸலாம் என்னும் நபித்தோழரும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டபோது, ஒருவர் இன்னொருவரை நோக்கி, எனக்கு முன் நீர் இவ்வுலகை பிரிந்தால் அங்கே என்ன நடந்தது என்பதை என்னிடம் வந்து சொல்ல வேண்டும் என்று சொல்ல, அதற்கு மற்றவர்: என்ன? உயிரோடிருப்பவரும் இறந்து போனவரும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ள முடியுமா? எனக் கேட்க, அதற்கவர்:

نعم اما المؤمنون فان ارواحهم في الجنة وهي تذهب حيث شاءت

'கண்டிப்பாக விசுவாசிகளின் ஆன்மாக்கள் சுவர்க்கத்தில் இருக்கும். அவைகள் எங்கே செல்ல விரும்புகின்றதோ அங்கே செல்ல அவைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது' என்று கூறினார்.

அல்லாமா இப்னு முபாரக் ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'கிதாபுஸ் ஸுஹ்த்' என்னும் நூலில் இப்னு அபித்துன்யா மற்றும் இப்னு முன்தா ரஹிமஹுல்லாஹ் என்போரை கொண்டு சல்மான் பார்ஸி ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழர் கூறியதாகக் குறிப்பிடுகின்றனர்,...

قال ان ارواح المؤمنين في برزخ من الارض تذهب حيث شاءت ونفس الكافر في سجين

'திடனாக விசுவாசிகளின் ஆன்மாக்கள் பூமியிலுள்ள பர்ஸக் என்னுமிடத்தில் உள்ளன. அவைகள் எங்கே செல்ல விரும்புகிறதோ அங்கே செல்கின்றன. இதுபோன்றே இறை மறுப்பாளர்களின் ஆன்மாக்கள் ஸிஜ்ஜீன் என்னுமிடத்தில் முடக்கப்பட்டுள்ளன.'

இதுபோன்றே இப்னு அபித்துன்யா ரஹிமஹுல்லாஹ் என்பார் மாலிக் ரஹிமஹுல்லாஹ் என்பாரைக் கொண்டு அறிவிக்கின்றனர்,....

قال بلغني ان ارواح المؤمنين مرسلة تذهب حيث شاءت

'விசுவாசிகளின் ஆன்மாக்கள் சுதந்திரமாக உள்ளன. அவைகள் எங்கே செல்ல விரும்புகிறதோ அங்கே செல்கின்றன என்பதாக எனக்கு நபிமொழி கிடைத்துள்ளது' என்று கூறுகிறார்.

இமாம் ஜலாலுத்தீன் சுயூத்தி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'ஷரஹுஸ் ஸுதூர்' என்னும் நூலில்,...

رجح ابن عبد البران ارواح الشهداء في الجنة وارواح غيرهم على افنية القبور فتسرح حيث شاءت

'இமாம் அப்துல்பர்ரு ரஹிமஹுல்லாஹ் என்பார் கூறினார். ராஜிஹான சொல்லாகிறது, பிராணத் தியாகிகளின் ஆன்மாக்கள் சுவர்க்கத்தில் உள்ளன. இவ்வாறே விசுவாசிகள் தங்களின் மண்ணறை வாழ்க்கையில் எங்கே செல்ல விரும்புகிறார்களோ அங்கே சென்று விடுகின்றனர்'

அல்லாமா மனாதி தைஸீர் ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'ஷரஹு ஜாமிவுஸ் ஸகீர்' என்னும் நூலில்,....

ان الروح اذا انخلعت من هذا الهيكل وانفكت من القبور بالموت تجول الى حيث شاءت

'திடனாக ஆன்மாக்கள் தேகத்தை விட்டும் விட்டும் தனியாக பிரிந்து மரணத்தின் காரணமாக கைதிலிருந்து விடுதலை பெற்று எங்கே செல்ல விரும்புகிறதோ அங்கே சென்று வருகிறது' என்று கூறுகின்றனர். இதுபோன்றே 'கஸானத்துர் ரிவாயத்' என்னும் நூலில்,...

عن بعض العلماء المحققين ان الارواح تتخلص ليلة الجمعة وتنتشر وافجاء والى مقابرهم ثم جاءوا فى بيوتهم

'திடஞானிகளான அறிஞர்கள் கூறுகின்றனர். ஆன்மாக்கள் வெள்ளி இரவன்று விடுவிக்கப்படுகின்றன. அதன்பின் அவைகள் பரவுகின்றன. முதலில் தனது மண்ணறைக்கு வருகிறது. அதன்பின் தனது இல்லத்திற்கு வருகிறது' எனக் கூறப்பட்டுள்ளது.

அடுத்துஇமாம் நஸஃபி ரஹிமஹுல்லாஹ் என்பார், தமது 'மிஅத்தெ மஸாயில்' என்னும் நூலில்,....

ان ارواح المؤمنين يأتون فى كل ليلة الجمعة ويوم الجمعة فيقومون بفناء بيوتهم ثم ينادي كل واحد منهم بصوت حزين يا اهلي

ويا اولدي ويا اقربائى اعطفوا علينا بالصدقة واذكرونا ولا تنسونا وارحمونا فى غربتنا

'திடனாக விசுவாசிகளது ஆன்மாக்கள் ஒவ்வோர் நாளும், வெள்ளி இரவன்றும் தனது வீட்டுக்கு வருகின்றன. அதன்பின் வாயிலில் நின்று ஈனமான குரலில், எனது வீட்டாரே! என் பிள்ளைகளே! எனது நேசத்திற்கு உரியவர்களே! எங்கள் மீது தர்மத்தை கொண்டு முத்திரை இடுங்கள். எங்களை நினைவில் கொள்ளுங்கள். மறந்து விடாதீர்கள். எங்களின் இயலாமையின் மீது இரக்கம் காட்டுங்கள் எனக் குரல் கொடுக்கின்றன' என்பதாகக் கூறுகின்றனர்.

மேலும் 'கஸானத்துர் ரிவாயத்' என்னும் நூலில், மிஅத்தெ மஸாயில் என்னும் நூலாசிரியரின் ஆதாரத்தை முன்னிறுத்தி கீழ்கண்டவாறு கூறப்படுகிறது,...

عن ابن عباس رضي الله عنهما اذا كان يوم عيد او يوم جمعة او يوم عاشور او ليلة النصف من الشعبان تأتي ارواح الاموات

ويقومون على ابواب بيوتهم فيقولون هل من احد يذكرنا هل من احد يترحم علينا هل من احد يذكر غربتنا الحديث

'ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு என்னும் நபித்தோழரை கொண்டு அறிவிக்கப்படுவதாவது, ஈதுப் பெருநாள், ஜும்ஆ, ஆஷூராவுடைய நாள், பராஅத் போன்ற நாட்கள் வந்தால் இறந்து போனவர்களின் ஆன்மாக்கள் தமது வீட்டு வாசல்படியில் வந்து நின்று, எங்களை நினைப்பவர் யாராவது இருக்கிறார்களா? எங்கள் மீது இரக்கம் காட்டுபவர் யாராவது இருக்கிறார்களா? எங்களின் இயலாமையை எண்ணிப் பார்ப்பவர் யாராவது இருக்கிறார்களா? எனக் குரல் கொடுக்கின்றன'

மேலும் கன்ஸுல் இபாத் என்னும் நூலில் இப்பிரச்சனை கொள்கைக்குரிய பிரச்சனையோ அல்லது அனுமதிக்கப்பட்ட அல்லது விலக்கப்பட்டவை சம்பந்தமான சட்டப் பிரச்சனையோ

அல்லவாதலால் இதனை ஆதாரப்படுத்த ஓரிரு நபிமொழிகளே போதுமெனக் கூறப்பட்டுள்ளதால் இத்துடன் இப்பிரச்சனை சம்பந்தமான ஆதாரங்களை நாம் நிறுத்திக் கொள்கிறோம்.

**பிரார்த்தனை அங்கீகரிக்கப்படுதல்**

இறைவன் தனது பேரருளை கொண்டு ஒவ்வொருவரின் பிரார்த்தனையையும் அங்கீகரிக்கிறான். இனி கலப்பற்ற எண்ணத்துடன் உள்ளமுருக பிரார்த்தனை செய்தால், அத்துடன் பணிவோடும் தாழ்மையோடும் இறைவனுடைய சன்னிதானத்தில் சாஷ்டாங்கம் செய்து பிரார்த்திப்போமாயின் இறைவன் ஒருக்காலும் அப்பிரார்த்தனையை நிராகரிக்க மாட்டான்.

**பிரார்த்தனை ஏற்கப்படுவதற்குரிய முறை**

பிரார்த்தனை ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு பல்வேறு ஷரத்துகள் காணப்படுகின்றன. இந்நிலையில் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படுவதற்குரிய சூழ்நிலைகளும் அதற்குரிய காரணங்களில் ஒன்றெனச் சொல்லலாம். எல்லா ஷரத்துக்களிலும் மிகப்பெரும் ஷரத்தானது பிரார்த்தனை செய்வோரது உள்ளம் இறைவனுக்கு முன் ஆஜராகி இருக்க வேண்டும். இவ்வாறே மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட உணவையே உண்ண வேண்டும். இதுபோன்றே பிரார்த்தனை தடைபட்டுப் போவதற்குரிய காரணங்களில் மிகப்பெரும் காரணம், நான் பலமுறை பிரார்த்தித்தும் அது ஏற்கப்படவில்லையே என்று புலம்புவதாகும். அல்லது பிரார்த்தனை ஏற்கப்படுவதற்குரிய ஷரத்துக்களை பேணாமல் அது மறுக்கப்படுவதற்குரிய காரியங்களை செய்து கொண்டே ஏற்கப்படவில்லையென அங்கலாய்ப்பதாகும். சுருங்கக் கூறின் பிரார்த்தனை என்பது ஒரு வணக்கமாகும். இதுபற்றி நபிமொழியில்,....

الدعاء مخ العبادة

'பிரார்த்தனை வணக்கங்களின் அடித்தளமாகும்'

எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு வணக்கத்தையும் நிகழ்த்துவதற்கென்று எவ்வாறு ஒரு குறிப்பிட்ட நேரம் வரையறுக்கப்பட்டுள்ளதோ, அவ்வாறே பிரார்த்தனை அங்கீகரிக்கப்படுவதற்கென்று ஒரு குறிப்பிட்ட நேரமும் சில ஷரத்துக்களும் உள்ளன. இதில் கஷ்டமான சோதனைக்குரிய நேரங்களில் பிரார்த்தனை மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். இதுபற்றி இறைவன் அவனது வேதத்தில்,....

ادعوني استجب لكم

'நீங்கள் கேளுங்கள். நான் அங்கீகரிக்கிறேன்' என்று கூறுகிறான். பாருங்கள்! ஒரு விவசாயி அரசனை சந்தித்து தனக்கொரு அரபிக் குதிரை வேண்டுமென்று கேட்க, அரசன் அவனுக்கு

ஒருஜோடி மாட்டை தந்தான். வெளிப்படையாக பார்க்கும்போது அரசன் அந்த விவசாயியின் கோரிக்கையை நிறைவேற்றவில்லை என்பது போலத்தான் தோன்றும். ஆனால் எதார்த்தத்தில் பார்க்கும்போது அந்த விவசாயிகு;கு கொடுக்கப்பட்ட பொருள் அவன் கேட்ட குதிரையை விட மேலானது. ஆம். மாடுகளைக் கொண்டு அவன் எத்தகைய பிரயோஜனங்களை பெறுவானோ, அதை அவன்கேட்ட குதிரையை கொண்டு கண்டிப்பாக பெறமாட்டான். மாறாக அவன் கேட்ட குதிரை அவனுடைய வாழ்க்கைக்கே உலை வைத்தாலும் வைத்துவிடலாம்.

இதுபோன்றே நாம் நமக்கு அவசியமில்லா ஒன்றை இறைவனிடம் கேட்கிறோம். அது அங்கீகரிக்கப்படாமல் இருப்பதே நமக்கு நல்லதாகும். சரீர இச்சைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதன் மூலம் இறைதிருப்தியை பெற்றுக் கொள்ளும் விசயத்தில் அதை நாம் கைநழுவ விட்டு விடுகிறோம். அத்துடன் மறுமையின் வேதனையையும் தேவையில்லாமல் தேடிக் கொள்கிறோம். இறைவன் நமக்கு அகப்பார்வையை தந்திருக்கும் பட்சத்தில் நாம் அவனிடம் அவனது திருப்திக்குரிய பொருட்களையே கேட்கவேண்டும். பின்னும் அவனிடம் நாம் கேட்கும் சிலதை அவன் நமக்கு தராதிருப்பதும் கூட அவன் நம்மீது செய்யும் பேருபகாரமாகும் என்றும் நாம் நம்பவேண்டும்.

இவ்வாறே இறை மறுப்பாளர்களின் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அதேநேரம் நேர்வழியை குறித்த பிரார்த்தனை மட்டும் அங்கீகரிக்கப்படும். அதேநேரம் உலக சம்பந்தமான பிரார்த்தனைகள் ஏற்றுக் கொள்ளப்படும். இதன்றி அநீதமிழைக்கப்பட்டவர் எந்த மார்க்கத்தை சேர்ந்தவராக இருந்தாலும் அவருடைய பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படும்.

**பெரும்பாவியின் வழிகாட்டல்**

ஒவ்வொரு நல்லவர் தீயவர் பின்னாலும் தொழுகை நிறைவேறும். அதற்காக கூட்டுத் தொழுகையை விடுவது சரியல்ல. இவ்வாறே தொழுகையை நடத்துபவர் பயபக்தியாளராக இருக்க வேண்டும் என்பதை எதிர்பார்க்க வேண்டுமென்ற அவசியமில்லை. இஸ்லாமியச் சட்டத்தில் கூட்டுத் தொழுகை என்பது கட்டாயமாக்கப்பட்ட நபி வழியாகும். அத்துடன் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூட்டுத் தொழுகையை மிகவும் வலியுறுத்தியுள்ளனர். ஒருவேளை தொழுபவரே பயபக்தியாளராக நல்லொழுக்கம் உடையவராக இருந்தால் அவரே தொழுகையை நடத்துவது தான் விசேசமாகும். அவ்வாறு இல்லையேல் ஒவ்வொரு இஸ்லாமியரின் பின்னாலும் தொழுகை நிறைவேறும். எதுவரையெனில், தொழ வைப்பவர் பாஸிக்கா(பெரும் பாவியா)கவோ அல்லது ஃபாஜி(தீயவ)ராகவோ இருந்தாலும் சரி. அதேநேரம் அவருடைய பாவம் இறை மறுப்பை சமீபிப்பதாக இருக்கக் கூடாது.அத்துடன் தொழ வைப்பவர் தொழுகைக்குரிய முறைகளையும் அதற்குரிய சட்டங்களையும் தெரிந்தவராகவும், குர்ஆனிலலிருந்து தேவையான வசனங்களை மனனம் செய்தவராகவும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

**பாவத்தை பெருமையாக நினைத்தல்**

பாவம் என்பது அது சிறியதாக இருந்தாலும் சரி. பெரியதாக இருந்தாலுமு; சரி. அதை அனுமதிக்கப்பட்ட ஒன்றென எண்ணுவதும் இலேசாக நினைப்பதும் இறைமறுப்புக்குரிய நிலைக்கு கொண்டுபோய் விட்டுவிடும். அதேநேரம் சரீர இச்சை மற்றும் உணர்வுகளின் காரணமாக ஒரு பாவத்தை செய்து விட்டால் அதையும் பாவமென்றே கருத வேண்டும். அத்துடன் தான் பாவம் செய்துவிட்டோம் என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறே ஒரு சிறிய பாவத்தை இலேசாக எண்ணுவதும், அதைக் கொண்டு தண்டனை எதுவும் கிடைக்காதென எண்ணுவதும் தவறாகும். அதேநேரம் சிறுபாவம் பெரும்பாவத்தைவிட சிறியதும் இலேசானதும் தான் என்பதில் சந்தேகமில்லை.

**ஷரீஅத்தை கேலி செய்தல்.**

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் வகுத்தளிக்கப்பட்ட இஸ்லாமியச் சட்டங்களை கேலி செய்வது இறை மறுப்புக்குரிய குற்றமாகும். காரணம் இஸ்லாமியச் சட்டங்களை கேலி செய்வதானது அதை பொய்யாக்குவதற்கும் மறுப்பதற்குமுரிய அடையாளமாகும்.

**இறை ரஹ்மத்தின் மீது நம்பிக்கை வைத்தல்**

இறைவனது ரட்சகத் தன்மையின் மீது நிராசை அடைவது இறைமறுப்பாகும். காரணம் இறை மறுப்பாளர்களை தவிர வேறுயாரும் இறைவனுடைய ரட்சகத்தன்மையின் மீது நிராசையாக மாட்டார்கள். ஒருவிசுவாசி எத்தனைதான் பாவங்கள் செய்தாலும் அவன் ஒருபோதும் இறைவனுடைய ரட்சகத்தன்மையின் மீது நிராசையாக மாட்டார்கள். ஒருவிசுவாசி எத்தனைதான் பாவங்கள் செய்தாவும் அவன் ஒரு போதும் இறைவனுடைய ரட்சகத்தன்மையின் மீது நிராசையாகக் கூடாது. அத்துடன் அந்த ரட்சகத்தன்மை தான், பாவமன்னிப்புக் கோருவதைக் கொண்டு தன்னை மன்னித்து ரட்சிக்கும் என முழுமையாக நம்பவேண்டும். பின்னும் எந்த இடத்தில் இறைவனுடைய ரட்சகத்தன்மையின் மீது ஆதரவு வைக்கப்படுகிறதோ அந்த இடத்தில் இறையச்சத்தை விட்டு நீங்குவதும் இறைமறுப்பாகும். காரணம் இறைவனுடைய அச்சத்தை விட்டும் நீங்குதல் என்பது இறைமறுப்பாளர்களின் செயலாகும்.

**விசுவாசம் மற்றும் அச்சத்தின் அகமியம்**

விசுவாசம் என்பது அச்சத்திற்கும் ஆதரவுக்கும் இடையில் அமைந்துள்ள ஒரு நிலையாகும். ஆதரவை குறித்த விசயத்தில் நாம் எண்ண வேண்டியது என்னவெனில், எல்லா மனிதர்களும் நரகுக்கு செல்வார்கள். அவர்களில் ஒரேயொருவர் மட்டுமே சுவர்க்கத்திற்கு செல்வார் எனச் சொல்லப்பட்டால் அந்த ஒருவன் நானாகத்தான் இருப்பேன் என்று முழுமையாக ஆதரவு வைக்க வேண்டும். அதேபோல எல்லோருமே சுவர்க்கத்திற்குச் செல்வார்கள். ஒருவன் மட்டும் நரகத்திற்கு செல்வாரென சொல்லப்பட்டால்எஅந்த ஒருவரும் நானாகத்தான் இருப்பேனோ என அஞ்ச வேண்டும். மேலும் இஸ்லாமிய முன்னோடிகள், ஒருவன் உலகில் வாழும்போது அவனுடைய உள்ளத்தில் இறையச்சமே மேலோங்கி இருக்க வேண்டும் என்றும், இவ்வுலகை

விட்டுப் பிரியும் தருவாயில் இறைவனுடைய இரட்சகத்தன்மையை ஆதரவு வைத்தவனாக இருக்க வேண்டுமென்றும் கூறுகின்றனர். இதுதான் நற்பதவிக்குரிய அடையாளமாகும். அனைத்தையும் இறைவனே நன்கறிந்தவன்.

வஸல்லல்லாஹு தஆலா அலா ஸஃகரி கல்கிஹி ஸையிதினா முஹம்மதின் வஆலிஹி வஅஸ்ஹாபிஹி அஜ்மயீன். வல்ஹம்து லில்லாஹி ரபப்பில் ஆலமீன். ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஆலிஹி அஸ்ஹாபிஹி வஸல்லிம்.

**முடிவுரை**

சர்வ பிரபஞ்சத்திற்கும் சக்ராதிபதியாகிய அல்லாஹ்வின் அளப்பரிய கிருபையாலும், அவனது ஹபீபும் மஹ்பூபும் நமக்கெல்லாம் ஆகாவும் மௌலாவுமாகிய அண்ணலெங்கோமான் அஹ்மத் முஸ்தபா முஹம்மத் முஜ்தபா தாஜ்தாரே தோ ஆலம் ஸர்காரே மதீனா நூரே முஜஸ்ஸம் ஷஃபீவுல் முத்னிபீன் அனீஸுல் ஃகரீபீன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மிகப்பெரும் கருணையாலும் அல்லாமா அப்துல் ஹக் முஹத்திஸ் தெஹ்லவி ரஹிமஹுல்லாஹ் அவர்களால் கோர்வை செய்யப்பட்ட 'தக்மீலுல் ஈமான்' என்னும் உர்தூ மொழியின் நூலை தமிழில் மொழிபெயர்ப்புச் செய்து வாசகர்களாகிய உங்களின் கைகளில் தவழச் செய்துள்ளேன்.

இந்நூல் இன்று இஸ்லாமிய சமூக மக்களிடையே பல்வேறு பிரிவினைவாதக் கூட்டங்கள் தோன்றி முஸ்லிம்களை மார்க்கக் கொள்கை சம்பந்தமான விசயத்தில் அலைகழித்துக் கொண்டுள்ள சூழ்நிலையில் இது வழிகாட்டும் ஒரு ஒளிவிளக்காக அமையும் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

மேலும் மார்க்கக் கொள்கை விஷயத்தில் தங்களின் ஈமானுக்குரிய நம்பிக்கையில் எண்ணிலடங்காத குழப்பங்களை சந்தித்து வரும் இஸ்லாமியப் பெருமக்கள் இந்நூலை வாசிப்பார்களாயின் கண்டிப்பாக அவர்களின் ஈமானுக்குரிய நம்பிக்கை திருத்தமாகி அல்லாஹ் ரஸூலுடைய அன்பை பெறுவதற்கு பெரிதும் துணை புரியும்.

இன்னும் இந்நூலில் விபரிக்கப்பட்டுள்ள நபிமொழிகள் அனைத்தும் இஸ்லாமிய முன்னோடிகளின் நூல்களிலிருந்து மூலாசிரியர் எடுத்திருப்பதால் அவைகள் பலவீனமானவை அல்லது இட்டுக்கட்டப்பட்டவை எனக் கூறுவதற்கு அறவே சாத்தியமில்லை என்பதையும் வாசகர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பின்னும் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் 'ஷஃபாஅத்' என்பது ஒவ்வொரு இஸ்லாமியருக்கும் நபியவர்களை கொண்டு கிடைத்துள்ள மகத்தானதொரு பாக்கியமாகும். ஆனால் அதை ஒவ்வொரு முஸ்லிமும் அழுத்தமாக நம்ப வேண்டும். அதற்காக அனுதினமும் நபிகளாரின் மீது ஸலவாத்தை ஓதி நம்மை நபியவர்களின் ஷஃபாஅத்திற்குரியவர்களாக ஆக்கிக் கொள்ள முயன்றும் வரவேண்டும்.

இதுபோன்றே உயிருடன் இருப்போரா அல்லது இறந்து போய்விட்டோரோ (நபிமார், வலிமார்கள்) யாராக இருந்தாலும் உதவி செய்வதற்குரிய நிலையை கொண்டிருந்தாலும் உதவி செய்தவற்குரிய நிலையைக் கொண்டிருப்பவர் இஸ்லாமியர்களில் யாராக இருந்தாலும் அவர்களிடம் உதவி தேடலாம். தேட வேண்டுமட் என்பதே நபியவர்களின் அருள்வாக்காகும்.

இதை கவனத்தில் கொண்டு ஒவ்வொருவரும் தங்களின் அவசியத்தின் போது அன்னோரிடம் உதவி தேடி தங்களின் துன்பங்களையும், கஷ்டங்களையும் நீக்கிக் கொள்ள முன்வர வேண்டும். இதுதான் இஸ்லாத்தில் நபியவர்கள் தமது உம்மத்துக்களுக்கு கற்றுத் தந்துள்ள தூய்மையான வழியாகும்.

இதேபோல இஸ்லாமியர்களில் காலம் சென்றோரை சென்று சந்திப்பதும், அவர்களின் மண்ணறைகளை சென்று ஸியாரத்துச் செய்வதும், அவர்களுக்காக பாத்திஹா என்னும் பெயரில் தான தர்மங்கள் செய்வதும், அவைகளை இறந்து போன அவர்கள் நம்மிடம் எதிர்பார்க்கின்றனர் என்பதும், நபியவர்களின் ஹதீதுகளை கொண்டு நமக்கு ஆதாரப்படுத்தப்படுவதால் நாம் அதனை நமது வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டும். நமது குடும்பத்தில் காலலம் சென்றவர்களுக்காக தானதர்மங்களும் பாத்திஹா போன்றவைகளையும் செய்துவர வேண்டும்.

**குறிப்பு:** இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள நபிமொழிகளில் ஒன்றாவது இட்டுக்கட்டப்பட்டதென்றோ அல்லது பொய்யானதென்றோ யார் நிரூபித்தாலும் அவர்களுக்கு நாம் ஆயிரம் ரூபாய் இனாமாகத் தர இருக்கிறோம் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன் இந்நூலை வாசிக்கும் சகோதரர்கள் இச்சிறியவனின் ஈமானுக்காகவும், நபிகளாரின் ஷஃபாஅத்தை பெற்றுக் கொள்ளவும் இதனுடைய கண்ணுக்குக் குளிர்ச்சியான இவனது ஷைகு நாயகத்தின் மீது ஃபனாவாகி முக்தி அடைவதற்காகவும் துஆ செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். வமா அலைனா இல்லல் பலாஃக். ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வ ஆலிஹி வஸஹ்பிஹி வஸல்லிம்.

*முற்றும்.*

www.sufimanzil.org